ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீவால்மீகிராமாயண

# சருக்கார்த்த சங்கிரகம்.



அரியக்குடி ஸ்ரீமாந்.

சா. கி. அரங்கநாதச்செட்டியார்

அவர்களியற்றியது

1911

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# ஸ்ரீவான்மீகராமாயண

## சருக்கார்த்த சங்கிரகம்.

இஃது

அரியக்குடி ஸ்ரீமாந்

சா. கி.

அரங்கநாதச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

ஷையார் குமாரர்

சா. கி. ரெ.

இலக்குமணச்செட்டியாரால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றது.

1911.

இதன் விலை அணு 8.

*Copy Right Registered.*

# Introduction.

The story of Rama in any form, in any language, is always welcome: the reader always rises from a perusal of the story–why even of any portion of it–a better man, at least for the time being We have already Kamban's elaborate version of it in Tamil—a storehouse of all that is rich and beautiful in Tamil literature. The Tamil Bhagavatham gives a mere skeleton and the Kurma purana has a Sivite version of the story. There is also a dramatic version of it by Arunachala Kaviroyar. There has long been a prose version following Kamban. We have had recently translations of Annie Besant's Lectures—" Ramayana Saram " and " Sri Ramachandra" ; and also a "Catechism of Valmiki Ramayana" from the proprietors of 'Viveka Bhodini.' There is also just now appearing in instalments a prose translation of Valmiki by Mr. Ramanujachariyar, the present Tamil Pandit of the Kumbakonam College. We never had hitherto either in verse or prose a succinct account of the story of Rama as delineated by Valmiki.

Now comes in print, after all, *Sri Valmiki Ramayana Sargartha Sangaraham* giving in one thread a brief account in Tamil *Viruttam* of every section of the great epic of Valmiki, by Sriman Ranganatha Chettiyar of Ariyakudi of Nattukkotai fame in the Ramnad District. His son Mr. Lakshmana Chettiyar—himself a scholar of repute and a man of saintly virtues—deserves the thanks of the Tamil public for publishing this useful work of his late revered father. Scholars who specialise on Kamban may easily find from a perusal of this work where Kamban deviates from the original. Those who cannot find time to specialise on

Kamban may enjoy the story in brief in this work of only 550 stanzas. This version has the advantage of being understood easily by our graduates and under-graduates and Tamil students of ordinary attainments with occasional help from a Tamil dictionary. I only wish that Mr. Lakshmana Chettiyar will be pleased to extend his benevolence and publish a readable version in simple prose of this poetical work of his father so that our sisters and daughters may enjoy this epitome of Valmiki. With these remarks I have now great pleasure in introducing this work to my brothers of the Tamil land.

*Perambur.*
13th May 1911.

T. CHELVAKESAVAROYAN, M. A.
*Pachaiyappa's College.*

ஸ்ரீ

ஸ்ரீமத் உடையவர் பாதுகாக்ஷணம் ஸம்ஸ்க்ருதம்

திருவாதிராயாம் ஜயந்தியதாம்.

ஹரிபதபஜநாஸக்த்யா ரங்கநாயகபாதயோர்ந
ப்ரத்யாநந்த விப்ரநிஷ்ப்ரா। விதரணபரிபாடீம்ருதாதயா
நந்தஜோவிஷதி யஸ்தைவப்பூர்ணவாராசிகாம்ப்யா॥( )

பாபம் பாபம் ஸ்ராவபவ்ருக தாம் தயாராம்
ஸ்ராவம் ஸ்ராவம் ஹரஸ்ருதிஜநஷ்டிபவாம்ஸி ।
காமம் காமம் ஹாவக மயநந்யதீபோ
ரங்கேசோமாம்ப்ரயமகாஷீஷ்டி திமேந்த்ர ॥ (௨)

ஸ்ரீநாராயணஸமாரம்பாம் ஸம்ப்ருஹஸ்தாரஸம்ப்ருஹ: ।
ரக்ஷிதா ரங்கநாயேந விஷ்ணுவாபய திமாநஸம் ॥ (௩)

---

ஸ்ரீ உடையவர் மாஹாத்ம்யம்.

ப்ரதிவாதி வேதாந்தாசார்யவிரசிதா: ஸ்லோகா:

ஸ்ரீவாத்ஸ்யவம்ஸஸ்ரீமத்வேதாந்தஸத்யாமமோக்ஷ
பஸ்ரீமத்காவிசகாஸ்திஸா ஹரிபஸ்ரீமத்வமாயாஸ்தே।
யத்ராராமஸ்ய கோவிஸாம்மநிமம் தந்த்ரம்சஜோபாஷ்ய
தயாமய்யாஸ்யபமய்தொஷ்யஸம்ஹ ஸ்ரீமாந்ணீம்த்ரா
த்ரிவ:।
தஸ்யாமவஸதாவணிக்ஷமணே ஸ்ரீரங்கநாயாயதை:
க்ருஷ்ணாயதுஹவ:கவே: க்ருதிரியம்ஜீயாத்வஸ்ததர்ணா ।
ப்ரந்தம்த்ராமிபவாஹ்ராஜிரிபயாம்ஜ்யாஸ்தாமந்தீக்ஷ்யாதிதாம்
யாமம்மவஹா திவிஷ்ணுவஜாஸவஜ்ஞுமநாயதா ।
ஸஸகமக்ஷணவணக்ருமவெ நபரிவாதிநாஹிவீக்ஷ்ய
வம் ।
வேஷாம்தாயேணாமொதிதாஹரிவாநியமே ந்த்ரம் ॥

---

# சிறப்புப்பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

## ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களியற்றியன.

* பாங்கரியக் குடிஞைவளம் பயின்மதுரைப் பதியரசாள் பாண் டி நாட்டி, லோங்கரியக் குடிநகர வாசியாய்க் காமாதி யோராறுய, தீங்கரியக் குடிலமிலா நன்னடைவாள் கைக்கொண்டோன் சேவிப் பாரைத், தாங்கரியக் குடிப்பிறந்தார்க் கருள்வனெனு மொருவணி கர் தகும்வகுப்பின். (1)

மன்னரங்க நாதனெனும் பெயர்புனைந்தோன் றருமமொரு வடிவ மானே, னன்னரங்க நால்வேத சாத்திரத்தி னுட்கருத்தை நயந்தோ னெற்றி, யின்†னரங்க நாமமிடு தாசர்தமைப் பகவனென விறைஞ்சி வாழ்வோன், பொன்னரங்க நாதிநடம் புரிபவன்மைத் துனனுமால் புகழ்சொன் னுவான். (உ)

கருக்கார்த்தண் ணளிநிகருங் கொடையுடையான் றன்னைவந்து கண்டு‡கொள்வார், திருக்கார்த்த வீரியன்போற் கைகளவா வத்தின முஞ் செய்வோன் ஞானப், பெருக்கார்த்த வான்மீகி செய்தவிரா மாயணத்துட் பிறங்கா நின்ற, சருக்கார்த்த தீபிகைநூ லியற்றினு னுலகுவப்பத் தக்க வாறே. (ங)

இன்பரச மாமிந்நூ லொருசிறிது படித்தாலு மியற்பா வாணர்
முன்பரச மாட்டாமற் செலார்பகவன் சரிதையே முன்னு மேலா
மன்ப¶ரச மாதான மனைத்துமொழிப் பாரம்மட் டன்றதற்குப்
பின்பரச மாந்தருந்தோ் வைகுந்த பதவியையும் பெறுவர் மாதோ.

தன்பொருளா லந்நூலை யச்சியற்ற நினைந்தவந்தத் தக்கோ னென்னு, மன்பொருவாத் தந்தைவா னடைதலுமப் பொருடானே யாய வாற்றால், நன்‖பொருளா மிலக்குமண வள்ளலொன்றை யாயி ரமா நன்கா ரச்சி, லின்பொருவா விதம்பதிப்பித் துதவினுன் றன்கு லத்தி னியற்கை யீதே.

---

* பாங்கர் - பக்கத்தில். இயம்-முழக்கத்தையுடைய. குடிஞை-நதி.

† அரங்க-அழுந்த. ‡ கொள்வார்-வாங்குவார்.

¶ அசமாதானம்-சங்கற்பவிகற்பம். ‖ பொருள்—புத்திரன்.

# சாற்றுக் கவிகள்.

இந்நூலாசிரியரின் ஆசிரியரான அரியக்குடி

## ஸ்ரீமத் கூ. கிருஷ்ணமாசாரியரவர்க ளியற்றியது.

தரையாதி காவியமா மிராம காதைச்
சருக்கார்த்த சங்கிரகத் தனிப்பேராகப்
பொருமாழிப் புவியிலருந் தமிழ்தா மாரி
புலவரனு தினமகிழப் பொழிந்த நம்மா
மருவாரும் பொழிலரிமை நகரின் மேவி
மகிழ்வணிக குலதிலகன் வறியோர்க் கென்றும்
பெருவாழ்வு தருந்தகையான் றிருமாற் கன்பு
பெருகரங்க நாதப்பேர் பெற்ற மாலே.

சேதுசம்ஸ்தான வித்துவான் ப்ரும்மஸ்ரீ

## ரா. இராகவையங்காரவர்கள் இயற்றியவை.

என்னனைய புலவருக்கு மிரவலர்க்குங் கற்பகமா யிருந்தோன் செல்வ, மன்னனைய பெரும் வணிகர் குலசிந்தா மணியென்று வழுத்த வாழ்ந்தோன், றன்னனைய குணக்குன்றந் தயாவுருக்கொ ணுகரிகன் சடர்க்கு முள்ளக், கன்னனைய வினியதமிழ்க் கவிமாரி பெய வல்ல கார்வா னன்றோன். (க)

பயனடுத்த மொழியாளன் பகைபழிச்சுஞ் செயலாளன் பழிப்பார் பாலு, நயனடுத்த வருளாள னல்லொழுக்கி னறிவாள னல்கூர்ந் தார்க்கே, புயனடுத்த கொடையாளன் புவியடுத்த புகழாளன் பூவேழ் பூத்த, வயனடுத்த மலர்நாபி யரியடுத்த நெஞ்சாள னரங்க நாதன். (உ)

செருக்கார்த்த விரியனைச் செற்றமழு வாளன்முதற் செய்த வத்தோ, ரெருக்கார்த்த சடையனைய னெனுந்தேவ ரெடுத்தேத்து மிராம பத்திப், பெருக்கார்த்த வான்மீகப் பெயர்ப்பனுவற் பாற்கடலைப் பேணி யாய்ந்து, சருக்கார்த்த சங்கிரகத் தனியமிழ்தஞ் செவிபருகத் தந்தா னன்றே. (ங)

செங்நெற்குடி வித்துவானும் விஷ்ணுபுராண நூலாசிரியருமாகிய
## ஸ்ரீமத் சுப்பராய ஐயரவர்கள் இயற்றியவை.

---

சீர்பெறு மிராமன் சரிதம தாகத் திகழ்வுறு மாதிகா வியத்தைப், பார்பெறு புலவர் செவிக்கமு தென்னப் பண்பமை செந்தமிழ்க் கவியா, லேர்பெறப் பாடிக் கம்பநன் னூடை னிசைபெற வீத்துள னெனினுங், கூர்பெறு மதியும் வடமொழி யியல்புங் குறித்தறி யுணர்வினு ரன்றி. (௧)

மற்றையோர் வேறு நடையெனு மாற்றால் வடமொழிக் காவிய மதனிற், சொற்றவவ் வழியே சுருக்கம தாகத் தொல்புவி மாந்தர் பற் பலருந், தெற்றென வுணரச் செந்தமிழ்க் கவியாற் செப்பினன் பெரும்புகழ் படைத்தான், குற்றமின் மனத்தோர் கொள்ளுநன் மதியான் குணம்பல நிறைநிதி யனையான். (௨)

கன்னலுஞ் செங்நெற் கதிர்களு நிறைந்து களிறுமாய் கழனிபற் பலசூழ்ந், தன்னமென் னடையார்க் குரியமங் கலம்போ லவணிமா மகட்கணியாகுந், தொன்னலம் பெருகு மரிசைமா நகரான் றூய்மையும் வாய்மையும் படைத்தான், முன்னவ னருகு நாரணன் றிருத்தாண் முளரியொன் றன்றிவே றெண்ணுன். (௩)

வணிகர்தங் குலத்துத் திலகமே யனையான் வண்டமிழ்க் கலைபல பயின்றுன், றணிவறு நிதியாற் றனதனே நிகர்வான் சத்துவ குணத்தினுற் றிகழ்வான், பணிவுறு பெரியோர் மறைவலோர் குருவின் பத்தியெக் காலமு மறவர், னணிகெழு கவிமா மழைமுகிலனைய வரங்கநாதப் பெயரானே. (௪)

---

சென்னை கிறிஸ்தியன் கலாசாலைத் தலைமைத்தமிழ்ப் பண்டிதர்
## ஸ்ரீமத் கா. ஸ்ரீ. கோபாலாசாரியரவர்க ளியற்றியன.

தான்மிகர்செ யறங்குலவு மரியைநகர் தழைக்கவந்த தருமசீலன், றுன்மிகவும் பத்திவளர் தாசர்மான் மியம்புனைந்த தமிழ்வலாளன், வான்மிகல்செய் கொடையரங்க நாதனெனும் வணிகர்பிரான் வண்டமிழ்ப்பா, வான்மிகரா மாயணத்தின் சருக்கார்த்த சங்கிரக வளந்தா னென்னே. (௧)

ஆதிகவி வான்மீகி யருளியரா மாயணமு மழுதூற் றென்ன
வோதியதெய் வப்புலமைக் கம்பரிரா மாயணமு முள்ள வாக [ப்பூ
வீதுமிகை யெனினன்றவ் வான்மீகத் துட்பொருளே யெளிதோர்ந் தி
மீதுவட மொழியறியாத் தமிழர்மய லறல்கருதி விளம்பிற் றுமே.

---

வலயமாநகரம் ஸ்ரீ விநாயகவித்தியாசாலைத் தமிழ்ப்

போதகாசிரியராகிய வித்வான் நெடுவை ஸ்ரீமத்

திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்க ளியற்றியன.

நேரிசை வெண்பா.

உல்குதரு தந்தைக்கு மோர்தந்தை யாகி
நிலையுமுதல் ராமனெனு நீர்மை—தலைவி
செவிக்கோ தியவரன்போற் றேமொழியிற் பல்லோர்
புவிக்கோ தினர்முன் புகழ்ந்து. (க)

ஆங்கவற்றுள் வேத னருணா ரதமுனிசொற்
றுங்கி முதல்வழிநூற் சார்பாகு—மீங்கிதென
வான்மீகி சொல்ல வருமாதி காப்பியமே
மேன்மே லுயர்வின் மிகும். (உ)

அப்பெருநூ லந்தணரே யாதியர்க ளனைவருமுணற்
றுப்பில்பட னத்தா னுளம்வேட்ட—வெப்பொருளுந்
தந்திடூஉ மென்னிலந்தத் தாசரதி தன்சரிதைக்
கெந்தநூ லேனரு மினி. (௩)

ஏய்ந்தபெருஞ் சீரவ் விதிகாச ரத்தினத்துள்
வாய்ந்தசருக் கங்கட்கோர் மாண்கவியா—வாய்ந்துநனி
தித்திக்கு மின்றமிழாற் செப்பினன் யாரெனின்மால்
பத்திக் கொருநல்வரம் பன். (௪)

வேங்கடமா லென்றும் விளங்கரியை நற்பதியான்
றீங்கடவ னன்றியுளத் திற்பதியான்—ஓங்கறிஞர்
நண்பன் பெயரரங்க நாதன்ற னவணிகர்
பண்பன் றமிழ்க்கற் பகம். (ரு)

தந்தை முறையைத் தனயன்பே ணன்முறையென்
றிந்த வுலக மியம்பவவன்—மைந்தனும்
வள்ளியரின் மேலா வருசீர் இலக்குமணன்
ஒள்ளிதினச் சிட்டா னுவந்து. (கூ)

---

அமராவதி புதூர் ஸ்ரீமாந் வயி. நாக. ராம. அ.

## இராமநாதச்செட்டியாரவர்க ளியற்றியன.

ஒப்பிலிரா மாயணத்தை வான்மீகி நாரதன்வாக் குதவியாலிவ் வைப்பில்வட மொழியின்மிகு மாதுரிய கவிகளினல் வனைந்தா ளுவாற், செப்பிலதே பரமபத சோபான மெனவுலகிற் சிறந்ததாகு முப்பினிறை கடற்றறையி லதற்கெதிராய் வந்தவெலா மொழிந்தவ ன்றே. (க)

கவியரசர் தொழுமிறைவன் கம்பன்விசித் திரதமிழ்ப்பாக் களி தன் மேன்மைப், புவியரச ரேத்தெடுப்ப வான்மீகத் தினுக்கிணங் பொருவில் கேள்விச், செவியரசர் முன்னிலையி லோதுவனென் றதியொரு சிறிதுமில்லா, தவியரசர் தமதுளமுங் களிதுளும்பத் ன்மனம்போ லமைத்திட்டானல். (உ)

நடக்கையிது வாகமுத னூற்கருத்தை யேயுணர்ந்திஞ் ஞால மல்லாந், தடக்கையிரா கவன்பாதஞ் சாருதற்கு மார்க்கமின்றித் தடுமாற றத்துக், கிடக்கையினை யுறக்காணூஉ வதற்கணுவும் பேத மின்றிக் கெடுக்கும் பாவத், தொடக்கையகற் றுதற்குரிய சாதனமீ தெனப்புலவர் துதிக்க மாதோ. (ங)

சருக்கார்த்த சங்கிரக மெனும்வழிநா லினையமுதத் தமிழாற் றந்தா, னுருக்கார்த்த செழும்பரிதி நிகரரியைக் குடிப்பெருமாற் குனுற்றும் பத்திப், பெருக்கார்த்த கடலனையான் கிருட்டினன்செய் தவப்பேறென் பிரிய கண்ப, னிருக்கார்த்த வரம்பழியா வுராங்க நாதப் பெயர்கொ ளிப்பன் றனே. (ச)

---

மகிபாலன்பட்டி ஸ்ரீமத் வித்துவான்

## மு. கதிரேசச்செட்டியாரவர்க ளியற்றியன.

வடமொழியின் முதற்கவியாம் வான்மீகி வகுத்தவிரா மாயண ச்சீர், திடமிகுசெந் தமிழ்மொழியிற் செவ்விதுணர் வருமையுளஞ் சிந்தித்தான்ற, தடவியலும் பேருருவைத் தன்னுளடக் கிக்காட் டித் தருபுன்னீர்போற், றொடர்புடையொவ் வொருசருக்கத் துறு பொருளொவ் வொருகவியிற் றுலங்கச்செய்தே. (க)

பெருமைமிகு சருக்கார்த்த சங்கிரகப் பெயர்புனைந்து பெட்பிற் றந்தான், தருமைவிருக் கமுநாணப் புலவர்குழா மினிதுவப்பத் தர த்தினீவோன், அருமையற னெறியொழுகும் வணிகர் மரபினிற்றோ ன்றி யருளெம்மீசற் குரிமையுறு மைத்துனனு மரியினுயர் புகழ்விரி க்கு முரைசானுவான். (உ)

கற்றவரை மகிழ்வுறுத்துங் கவிநிலய முயர்குணத்தாற் கனக நீத்த, நற்றவரை முதன்மூவர்க் குறுதுணையா மனையறத்தை நடத் திவாழ்வோன், செற்றமிலா வரியையெனுந் திருப்பதியிற் கிருட்டி னன்செய் சீர்சானேன்பி, னுற்றவன்மற் றவனரங்க நாதனெனு மொருபெயரை யுடையான் மன்னோ. (ங)

---

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

## ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களியற்றியன.

தாசரதி திருச்சரிதம் வடமொழியின் வான்மீகி தந்தான் மு ன்ன, ராசகனும் வேறுசில ரம்மொழியின் வழிசார்பி னமைத்தா ராக, பேசுமிவற் றின்கருத்துந் தன்கருத்தும் விரவவொரு பெருநூ லாக்கிக், காசினியை மகிழ்வித்தான் றமிழ்ச்சக்ர வர்த்தியெனுங் கம்ப நாடன். (க)

சித்திதரு மக்கதையை வான்மீகத் துள்ளபடி தெரிய வேட் கும், புத்தமிழ்தத் தமிழ்நிலத்தார்க் குறுதுணையொன் றில்லாமை போக்க நாடி, மைத்தடஞ்சூழ் புலிக்குன்றத் துதித்தவங்கி புரகுல மா மணியாய் வாழும், வித்தகனுந் திருமலா சாரியன்பாற் றன்கரு த்தை விரித்துக் கூறி. (உ)

வடமொழியின் வரம்புணரத் திருமலா சாரியனவ் வான்மீ கத்தி, னிடமுறுமைந் நூற்றுமுப்பத் தெழுசருக்கத் தையுந்தமிழி னிசைத்த வாறே, கடலமுதச் சுவைதுளிப்பச் சருக்கமொன்றுக் கொருவிருத்தக் கவியாப் பாடித், திடமுறவே சருக்கார்த்த சங்கிர கப் பெயர்புனைந்து சிறப்பித் தானால். (ங)

இத்தகுபே ருபகாரி யாவனெனி லரியைநக ரிருந்து பூவி, லெத்தலமுந் தனதுபுக ழெய்தவைத்த பெருந்தகையா மிப்பர் கோமான், சுத்தமனத் தவனிரா மாநுசதா சன்சரிதத் துடனே சங்கக், கைத்தலமா லரியைநகர் மும்மணிக்கோ வையுமியற்றுங் கவிசிரேட்டன். (ச)

தண்டமிழ்நா வலர்க்கனநே ரரங்கநா தப்பெயர்கொள் தருமனன்னன், கொண்டதொரு கல்வியெனும் பெண்டிர்தரு மகவாகக் குலவிந்நூலைப், பண்டனையான் புரிதவத்தின் பாலனென வவதரித்த பால னெம்மைக், கண்டுதின மனமகிழ்வா னட்பினுக்கோ ரணிகலமாக் கவினுஞ் செம்மல். (ரு)

மாநிதியாற் கல்வியினு லிறுமாந்து தம்மையுமே மறந்து வாழு மாணிடரை மதியாதா னவையிலரா யினுமன்பு வயத்த ராயின், மேனிலைவைத் துபசரிப்பா னறத்தாறே பொருளீட்டல் விழைவான் மெய்ம்மை, யானமொழி யலதறியா னிலக்குமண பூமனுளத் தமைய த்தேர்ந்தே. (சா)

தன்பினுதித் தவர்க்கேற்றந் தானருளிப் பிறுண்டுமதே தருமமாக, முன்புறுத்து மிரகுபதி சரிதமுணர்ந் தமைக்கேற்ப மொழியிந் நூலி, லன்புறுத்தி யச்சுவிமா னத்தேற்றி யுலகமெலா மவிரச் செய்தான், பொன்படைத்தா ரிவன்போலப் புகழ்படைத்தார் பிறருளரோ புகலுங் காலே. (எ)

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீவான்மீகி ராமாயண சருக்கார்த்த சங்கிரகம்.

## பாயிரம்.

---

### நம்மாழ்வார்.

கற்பா ரிராம பிரானையல் லான்மற்றுங் கற்பரோவென்
றற்பா ருளத்தொ டுரைசெய்த மூர்த்தி யருந்தமிழின்
சொற்பால தாக மறையீன்ற மாறனற் றுய்யசெய்ய
பொற்பாத பங்கய மன்றித் தொழுமனம் போந்திலதே. (க)

### திருமால்.

உலக மீத்துவந் தோம்பு மொருமுத
லலகி லாமறை யந்தணர் தெய்வத
மலமி லான்குண வாரி பராற்பரன்
சலச நாறெழிற் றுடலைத் தாங்குதும். (உ)

### ஷை வேறு.

எல்லார்க்கு மோரொரிடத் தியம்புமறை பரமெனினுஞ்
செல்லாற்றி னவற்றுண்மை தேர்ந்தறிஞ ரறிகுறியாய்ச்
சொல்லாற்ற லார்வேதத் தொடக்கமுடி விடையெவன்பேர்
நல்லாற்றி னெடுத்துரைப்ப வப்பகவ னமக்கரணே. (ஙு)

### திருமகள்.

யாரெனினுந் தனைநினைப்பார்க் களிப்படன தொளியென்ன வேற்ற நூல்சொல், சீரடனைத் தினநோக்கு மொருவனைத்தன் முழு நோக்கஞ் செய்து தன்னைக், கேரையவற் களித்திந்தீ வரமேனி யெய்தத்தந் தியாரும் போற்றும், பேரையுநற் றிருமாலென் றுறப் புரிந்த பிராட்டியையாம் பேணி வாழ்வாம். (ச)

### கலைமகள்.

வேத வேத்திய னுந்தி விரைமரைப்
போது போதிய போத னெழின்மனை
நாத மேவுரு நண்ணிய பாரதி
பாத தாமரை யேத்திப் பணிகுவாம். (ரு)

## ஆஞ்சநேயர்.

அஞ்சனைசெய் தவப்பயனைச் சானகியை யிலங்கையிற்கண் டா
ழியீந்தே, யஞ்சனையே லென்றானை யழியாத வரத்தானை யங்க
மஞ்சேசா, டஞ்சனைவிட் டிராகவனுக் கடியானைப் புரமெரித்த வர
னு மண்ண, லஞ்சனையம் பஞ்சனைவெல் லஞ்சனையா மெஞ்ஞான்று
மஞ்ச லிப்பாம். (௬)

## வான்மீகி.

தவவலியா லிரகுபதி சரிதமெனு மருமருந்தைத் தான்கொண்
டெல்லாப், புவனமுநன் குய்யவளித் தாதிகா வியமெனப்போ் புனை
ந்தான் முன்ன, மவனருள்சேர்ந் தெளிததனை யடியேனுந் தொகுத்
திடுதற் கவாவி யான்றோர், நுவலுமுனி புங்கவனு மவனடித்தா ம
ரைபணிந்து நோற்றேன் மாதோ. (௭)

## நூற்பயன்.

தன்னைத்தா னிகரிரகு பதிசரித முறையையில்விற் றரிசித் தா
லும், பின்னைத்தாம் படித்தாலுங் கேட்டாலுஞ் சிறிது படிப் பித்
திட்டாலு, முன்னைத்தாம் பவநீங்கி யாயுளா ரோக்யநிதி முனையின்
முன்னு, மன்னத்தா நினைத்தவெலாம் பெற்றழியா முத்தியினு மரு
வு வாரால். (௮)

## அவையடக்கம்.

மறையுறைவா னுலகிலுள விரிவாய தன்சரித மைந்தன் மை
ந்த, னுரைவழியே சங்கிரகித் தோதிடவான் மீகியதைச் சிறுவர்
கூற, வரைவின்மகி ழொடுகேட்ட தாசரதி மானவர்சொன் மருவி
னூனக், கறைசிறிதும் புகாவடியன் றெகுத்தகவி யுங்கொண்டு களி
ப்பான் மன்னோ. (௯)

முன்னமுயர் வான்மீக முனிமொழியுங் காவியமென் முதத்தி
னுனு, மன்னவன்சொல் கதையினையே தொகுத்தெளிதா யறிதரு
வா னமைத்த லானுந், தன்னனைய தாசரதி புகழ்ச்சரித மிதுவென்
னுந் தகைமை யானு, மென்னையுமென் கவியையுமோர் பொருளாக
வறிவினர்க ளெண்ணு வாரால். (௧௦)

பாயிரம் முற்றிற்று.

உ

ஸ்ரீராமசெயம்.

## ஸ்ரீவான்மீகி ராமாயண சருக்கார்த்த சங்கிரகம்.

# பாலகாண்டம்.

தவமேவு நாரதனை வான்மீக முனியிந்தத் தரணி தன்னி, லவமேய குணரகிதன் கலியாண குணநிறைந்தோ னியாரோ தென்ன வுவமையிலா மாதவமண் ணிடைத்தோன்றி யிராவணனை யொழித்துச் சீர்சான், மவுலிபுனைந் தாள்கின்றான் றசரதன்மா மதலைதிரு மாலே யென்றான். (க)

தாங்குதவ வான்மீகி கிரவுஞ்சந் தவன்மாளத் தமசா தீரத் தேங்குறுமத் துயர்காணத் தானேயோர் கவியுளத்தி லெழுதனோக்கி, யோங்குமகி ழொடுபன்ன சாலைசெலப் பிரமன்வர முவனுக் கீந்தே, யீங்குதித்த கவிப்படியே யிராமகதை யுரையென்ன விசைத்துச் சென்றான். (உ)

ஒளிபூத்த நாரதன்பால் வான்மீகி யுபதேச முவந்த தெண்ணித் தெளிபூத்த தியானத்தா லிராமனிலக் குவன்சீதை செய்கையோ டங், களிபூத்த மனைமூவர் நாகரிக ருடனரச னுக்கு மாறும், வெளிபூத்தல் கண்டதனை விரித்திரா மாயணமா விளம்பி னானால். (ந)

கோதுதவிர் திறன்ஞான வான்மீகி புகனூலைக் குசல வர்க்கங் கோதவவ ரறிந்தபடி யுறுவருறு மிடங்கடொறு முவந்து பாட, வீதயமே தம்புரியு மிராமபிரா னுணர்ந்தந்த விளைஞர் தம்மை, யாதரவோ டழைத்தவர்க ளுரைசெய்யத் தன்சரித மவர்வாய்க் கேட்டான். (ச)

மண்ணுலகம் பொதுநீக்கி மனுவாதி யிரவிகுல மன்னர் காக்க நண்ணுமதிற் பவநீக்குஞ் சரயுநதி சூழ்தருகோ சலநன் னாட்டில், விண்ணுலகு மிணையிலதா வயோத்தியெனு நகர்மனுவாம் வேந்தன் முன்ன, மெண்ணுறச்செய் தனனதனை யவன்குலத்துத் தயரதனு மிறைகாப் புற்றான். (ரு)

மன்னுகுல வொழுக்கத்தி லிகவாத வொருநான்கு வருணத் தாராற், றுன்னியுயர் சாகேதத் தரசுபுரி தசரதன்சீர் சொல்லற் பாற்றோ, தன்னனையான் புவியனைத்துந் தருவானைத் தருந்தாதை தனக்குத் தாதை, யென்னநினைத் திடுமாற்றிற் கியைகுணனு யுலகேத்த விருந்தான் மன்னோ. (௬)

வருமுபதை யாற்சுத்தி வாய்ந்திடுசித் தார்த்தன்முதன் மந்திரத்துத், தெருளுமெண்ம ரொடுஞானந் திகழ்வசிட்ட னுயர்வாமதேவ னின்னோ, ரொருவிலராய்ச் சூழ்தரமிக் கொளிருமெழிற் றசரதப்பே ரொருமா வேந்தன், விரிகதிரா லிருணீக்கி மிளிரிரவி யிவனென்ன விளங்கி னுன்மன். (எ)

இவ்வண்ண நிகழரச னெழிற்புதல்வர்ப் பேற்றினுக்கெய் திடையூ றேகச், செய்வண்ண முணர்ந்தயமே தம்புரிவே னெனச்செப்பச் சீர்த்த தென்றே, யவ்வண்ணஞ் செயற்காய கலப்பையினை வசிட்டனமாத் தியர்கள் சேர்க்க, வுய்வண்ண முடையான்றன் மனைவியர்க்கு மிஃதோதி யுவப்புற் றுனல். (அ)

உரோமபத னழைத்துவரு முழைச்சிருங்க ராற்றனைய ருண்டா மிந்தத், தராவலயம் புரந்தருளுந் தயரதனுக் கென்றந்தச் சனற்கு மாரன், பராவருமக் கிருதத்திற் பகர்ந்தனனென் பாலென்னப் பண்பி னேடு, விராவருநற் றேர்ச்சியுறு சுமந்திரன்றன் னரசற்கு விளம்பி னுனல். (௯)

கலைக்கோட்டு முனிவரவை முற்றுமறி தரக்கருதுங் காவலோற்கு, முலைக்கோட்டிட் டிடையாரா லங்கர்பதி முனிவரனை முளரிநின்று, நிலைக்கோட்டஞ் சிறிதுமிலா நகர்க்கழைத்துச் சாந்தையெனு நிகரில் காமர், சிலைக்கோட்டு நுதலாளை மணம்புணர்த்தா னெனச்சூழ்வோன் செப்பி னுனே. (௧௦)

பின்னருமச் சுமந்திரனுற் றசரதனவ் வுழைச்சிருங்கப் பெரியோன் செய்யு, மன்னுமுயர் வேள்வியினுல் வந்துதிப்ப ரொருநான்கு மைந்த ரென்ன, முன்னமுரைத் தனன்சனற்கு மாரனெனல் கேட்டங்கர் முதல்வன் பாற்போ, யன்னவிபாண் டகன்சேயை யயோத்திநகர்க் கழைத்துவந்தா னன்பின் மாதோ. (௧௧)

மன்னர்பிரான் கலைக்கோட்டு மாமுனிவ னருமறைநூல் வடி வங்கொண்ட, தன்னவசிட் டாதியர்க ளனைச்சூழ வாங்கவர்தா ளன் பிற் ருழ்ந்து, முன்னியவவ் வயமேத சங்கற்பங் கொண்டுபரி முறை யே யிந்த, மன்னுதிரைக் கடல்சுலவு மகியைவலம் வரவுய்த்து மகிழ் ந்தான் மன்னே. (கஉ)

அன்றுமுத லோரகவை போயகல வயன்மகனு மயோத்தி மன்னன், றன்றுதவ வசிட்டற்குஞ் சுமந்திரனே முதலாய சூழ்ச்சி யோர்க்கு, நன்றுபுரி வேள்விக்கு வேண்டுவன செய்ம்மினென நவி ன்று தானுஞ், சென்றனனன் னூன்முறையே மகமியற்றற் கென வியற்று சீர்சால் சாலை. (கங)

பவமொழிசெய் சரயுவட பாலமரு மகப்புலம்பூ பாலன் புக்குத் தவநிலைய கலைக்கோட்டு முனியாலு முற்றுதபோ தனர்க ளாலுஞ் சிவமருவு மயமகஞ்சோ திட்டோம முதலிட்டி திகழா றுஞ்செய் திவர்தருதக் கணையன்ன மினிதளிக்க முனிவர்தவ ரிறும்பூ துற்ருர்.

மற்றுமந்த வுழைச்சிருங்க மாதவனை மன்னவர்கோன் வணங்கி நிற்ப, வுற்றுமக வருளிட்டி யுதவினு னவண்மேய வுந்தி பூத்த பெற்றியனைப் பிரமன்முத லமரரெலாந் தயரதன்பாற் பிறந்து தீய சுற்றமுட னிராவணனைத் தொலைத்தருள்க வெனவேண்டித் தொழு து நின்ருர். (கரு)

யாகஞ்செய் வுழியமரர்க் கருளிவர மிறையேக வெழுந்தோர் பூத, மேகஞ்சொன் மானவன்பாற் பாயசமார் பாத்திரத்தை யீந்து செல்லப், பாகஞ்செய் ததையரசன் றேவியர்கண் மூவருக்கும் பரிவி னல்க, மேகஞ்செய் குழலார்க ளுண்டுகருக் கொண்டுமகிழ் மேவி னுர்கள். (கசு)

மண்டலத்தி விராமனென வருந்திருமாற் குதவிபுரி வதனுக் காக, முண்டகத்தி லுறைநான்கு முகத்தேவ னுரையமரர் முடிமேற் ருங்கி, யண்டும்வலி விறனீங்காக் கோடரங்க டமையவர்க ளமிச முற்றக், கொண்டுதிகழ் தரச்சிருட்டி புரிந்துவிடுத் தனர்பூவிற் குலவ மன்னே. (கஎ)

அன்னைநிகர் நாரணனு மவனியிடை யவதரிக்க வமய மோர்ந்து பன்னுபுகழ்க் கோசலையார்க் கிராமனெனக் கேகயிக்குப் பரத னென்னத், துன்னுசுமத் திரைக்கிலக்கு மணனொடுசத் துருக்கனெ னத்தோன்ற லோடு, மன்னமகார்க் குபநயன முடிந்தபின்னர்க் கோசிகனு மவண்வந் தானால். (௧௮)

அந்தில்வரு கோசிகனு மரசனெதிர் கொளத்தோன்றி யகத் துண் மன்னன், மைந்தருக்கு மணவினையை முற்றுவிக்கக் கொண்ட திறன் வழங்கா னாகி, வந்தெனது மகஞ்சிதையா வணங்காக்க நின துழுதன் மகனை யின்னே, தந்திடுதி யெனவுலகம் புரப்பானை யிரந் தனனத் தவக்குன் றன்னான். (௧௯)

அவ்வுரைதன் செவிப்புகுது மளவையினி லரசன்மிக வழன்றெ ஞ் ஞான்று, மொவ்வுதலி றுயர்க்கடலிற் சுழன்றுமனம் புணையின்றி யூச லாடச், செவ்விநறும் புதல்வனைத்தான் கணமுமகன் றுயிர்வாழத் தேறு ளாகி, யெவ்வமில்சீர்த் தவமுடையா யெனைத்தருவென் மகற் றருதற் கிசையே னென்றான். (௨௦)

கொற்றவனிவ் வாறுரைக்கக் கோசிகன்கேட் டதிகோபங் கொ ண்டு நிற்க, மற்றதுதேர் தருவசிட்டன் வாய்மையொழித் திடலறத் தை மாற்று மென்ன, முற்றுமறி வோருரைப்பர் மொழிவதனை யீவ னென்ற மொழியிற் கேற்ப, நற்றவன்ற னுடன்மகனைச் செலவிட லே நலமென்று னல்வேந் தோர. (௨௧)

ஆசிரிய னுரையானே யகந்தெளிவுற் றனனாகி யரசர் கோமான் கூசுதலி லாக்காதி புதல்வன்பா லிராமனிலக் குவனும் பொற்பார் தேசுதிகழ் மைந்தர்தமை யியவழைத் தேகுமுனி செலவி னுற்ற மூசுமயர் வவர்க்ககலப் பலைமனுவோ டதிபலையை முறையிற் சொற் றான். (௨௨)

கேட்டணையு மன்மைந்த ரங்கொராச் சிரமமெதிர் கிளரக் கா ணூஉ, வேட்டலுறு முயர்தவனே யிவ்விடம்யா தியம்புகென விடை வ லான்முன், னீட்டுதவக் கிடையூறு புரிந்தமத னங்கமழிந் திவண் வீழ்ந் தன்று, ஞட்டுவரக் காரணத்தா லிதையங்க நாடென்ன நவில வுற்றார். (௨௩)

அத்தலம்பிற் படக்கங்கை கடந்துபோய்த் தோன்றடவி யாரு தென்னப், பத்தொருநா ளுங்கண்ணன் பாவமொடு பசிநீக்கும் பான்மை தன்னு, லொத்துறுமப் பெயர்மலத கருசமென வுரைதேய மொருவா றுற்ற, சத்துருவாந் தாடகையாற் காடாகி யவள்பெயரா றயங்கிற் றென்றான். (உச)

வலிகெழுமு சுவாகுவொடு மாரீசன் றனையளித்தாண் மலயமேயா, னலிதரச்சொல் சாபத்தா லரக்கியுருக் கொண்டுலகை நடுக்கு கின்று, ளலையுருவத் திராகவநீ யவளைமக ளெனவுளத்தி லாயா தின்னே, கொலைசெயலா மிதுமுன்னோர் குறிக்கோளே யெனவிருடி கூறி நின்றான். (உரு)

முனிமொழியு மொழிவேத மொழியென்னத் தாசரதி முன்னிமாயை, தனில்வல்லளாஞ் சகத்திரவாம் பற்பலத்த தாடகையைச் சரத்தா லூறி, யினியுலகந் துயர்க்கடலி னிடைப்புகுதா தெனத்தேவ ரேத்த நீத்த, வனகனொடுந் துணைவனொடு மவ்விரவவ் வனத்தொழிய வமர்ந்தான் மன்னோ. (உசா)

காலையெழுந் தாற்றுவன கடன்கழித்துக் காகுத்தன் காதி சேய்பாற், சாலுமடன் மிகுந்தண்ட சக்கிரமுற் சரமனுவைத் தான் கைக் கொள்ள, வேலுமவைக் கதிட்டான தெய்வங்க ளிராமனிடத் தெய்தி யாஞ்செய், வேலையெனை யெனவினவ நினைக்குங்கால் வருதிரென விடையு மீந்தான். (உஎ)

மாமறையோன் பாற்பெறுப சங்கார மந்திரதெய் வங்க டாமு ங், கோமகனைப் பணிந்துவிடை கொண்டேக வவன்முனியைக் கோதி லிந்த, வாமநிலை யாச்சிரம மன்னுமெவர்க் குரித்தாகு மும்மாலாற்றுந், தோமின்மக மியாங்காக்கு மிடமெவனோ வடிகளெலாஞ் சொல்க வென்றான். (உஅ)

உத்தமனுங் காசிபனவ் வாமனனைப் பெறத்தவமுன் னுஞற்றி மேலாஞ், சித்தியடை யேதுவிற்சித் தாச்சிரம மெனவிதற்குச் செப்பு வார்பே, ரித்தலத்து நீகாக்க யானிட்டி செய்யநினைக் கின்றே னென்னு, வித்தமுறு மானவற்கு விளம்பிமுனி கங்கணங்கை வேய்ந்துற் றுனல், (உகூ)

சத்திரத்திற் கூறுபுரி சுவாகுவைரா கவன்சரத்தாற் றடிந்து மான, வத்திரத்தான் மாரீச னலைகடல்வாய் விழவுய்த்தே யாறு நாளும், வித்தகன்செய் வேள்வியினை யிலக்குமண னொடுங்காக்க மேவி விஸ்வா, மித்திரனிம் மகமைய நீமுடித்தா யெனமுகமன் விள ம்பி னானே. (௩௦)

விளம்பியபின் முனிக்கரசு மிதிலைக்குச் செலவுளத்து விரும்பி நீல, களன்பொருவு மிருடியர்க ளிராமனிலக் குவன்பின்னர்க் கலவி நீங்கா, விளங்கதிரி னொளிகெழுமி யுடன்போதப் போந்தந்த விர விற் பறபல், வளம்பயிலுஞ் சோலைபுடை சூழ்சோணை நதிக்கரை யில் வதிந்தான் மன்னோ. (௩௧)

இவ்விடம்யார்க் குரித்தென்ன விரவிமரு மான்வினவ விருடி யைய, வெவ்வமில்சீர்க் குசன்புதல்வர் நால்வரிலவ் வசுவுடைய தெ ன்ன வோதிக், கவ்வையொழி குசநாபன் றன்னூறு கன்னியருங் காலா லங்க, மொவ்வுறுகூ னடைந்தனர்க ளெனத்தனதி யோகத்தி னுணர்ந்தான் மன்னோ. (௩௨)

மாதர்பெருந் துன்புற்று மனப்பொறைநீக் கிலரென்ன மகிழ்ந் து தானச், சோதிநுதற் குழைபொருங்கட் டுவரிதழ்வாய் நூற்று வரைச் சூளி நல்குங், கோதில்குணப் பிரமதத்த னெனுநாமக் கொ ற்றவற்குக் கொடுக்க வன்னோன், சீதமலர்க் கரந்தீண்டக் கூனிமிர்ந்து முன்னையினுந் திகழ்ந்தா ரன்னோர். (௩௩)

காசினியாள் குசநாபன் காதலரைத் தரும்வேள்வி கடிதி னாற் றித், தேசுதிகழ் காதியெனுஞ் செம்மலைத்தந் தனனவற்குச் செல் வ யானும், வாசமலர்க் கரியகுழற் கௌசிகையும் வந்துதித்த வாறு மற்றும், பேசமுனி கேட்டந்த விரவொழித்தா னிரவிகுல ப் பெம்மா னெம்மான். (௩௪)

இரவகலத் துணைவனொடு நெறிச்சென்று கங்கைநதி யெய்தி ராமன், வரமுனிவ விதன்சரித முரைக்கவென விவளிமய மலை யின் முன்ன, மரகதத்தி னெழின்மேனிப் பார்ப்பதியி னுடன்றோ ன்றி வான நாட்டுச், சுரர்தொழுது வேண்டுதலாற் ககனவழிச் செ ன்றனளச் சுவர்க்க லோகம். (௩௫)

மலைமகளை யொருவாது புணர்ந்திருக்குங் காமாரி வானோ ருள்ள, முலைதரக்கண் டச்செயலை யொழிக்கவெழு சுக்கிலமோர் மூதாற் றிற்சென், றலைகெழுமு கங்கையுறு சரவணத்தி னிடைப்புகுத வந்தி வண்ணன்,சிலைநுதலி னுமையவளோ டிமயமலைச் சென்றுதவஞ் செய்தான் மாதோ (௩௬)

விண்ணவர்க டஞ்சேனா பதியாகு முமாபதியார் மெய்த்த வத்தின், நண்ணிவிட விதற்குரியா ரியாரென்ன யாங்கனமு நாடிக் கங்கைக், கண்ணுறுஞ்சீர்ச் சரவணத்தி லுதித்துமத னென்னொளிருங் கார்த்தி கேயப், பண்ணவற்குச் சேனாதி பதியாக வபிடேகம் பரிந்து செய்தார். (௩௭)

அகலிடமோர் கோலோச்சுஞ் சகரன்மனை யொருத்தியா றயுதமக்க, டகவுபெற வளித்தனண்மற் றொருத்தியச மஞ்சனென்னுந் தனையற் றந்தாள், புகழுறுமவ் வசமஞ்ச னஞ்சுமான் றனையளித்தான் போரே றன்ன, சகரனய மேதஞ்செய் வான்றுரகம் புவிசூழ்ந்து சார விட்டான். (௩௮)

விடுத்தமக சயிந்தவத்தை விண்ணவர்கோ னதலத்தில் விரும்பி யோகத், தடுத்துறையுங் கபிலனிடைக் கொண்டொளிக்கச் சகரன் மகா ராறு பத்திற், றொடுத்தசகத் திராகூடி நேடியுமப் பரிதமக்குத் தோன்றா தாகக், கடுத்தவுளந் தினருலகங் கம்பிக்கப் புவிதொட்டுக் காண்பா ரானார். (௩௯)

பாதலத்தி லயமேதப் பரிகபில னாச்சிரமப் பாங்கர்க் காணூஉ வீதிவனே கொண்டணைந்தான் மற்றில்லை யிபற்றினரென் றெண்ணி யந்த, மாதவனைப் புடைசூழ்ந்து நலிதரவன் னோன்றவித்து மகிமை யானே, சாதிரென மிகச்சினவிக் கண்டிறந்தா னவரிறந்து சாம்ப ரானார். (௪௦)

சகரன்மகன் மகனஞ்சு மான்மகமாத் தனைத்தந்து சகரற் குன்றன், மகர்கபில னாலொழிந்தா ரெனவோதக் கேட்டயமா மகத்தை முற்றிக், ககபதியா ருரையின்வழி யிறந்தசுதர்க் குதகத்தாற் கடன்க ளாற்றச், செகமிசைவான் கங்கைகொணார் வழியறியா தடனித்துச் சென்றான் மன்னோ. (௪௧)

ஆங்கவன்றன் குலத்துதித்த பகீரதனா மப்பெயரா னயனை நோ
க்கி, யோங்குதவம் புரியவவ னெதிர்தோன்றிச் சகரனினி யுய்வா
னன்பு, தாங்குறுநின் னுளக்கிடக்கைப் படிகங்கை யாலுதக தானம்
பண்ணற், கிங்கைய மிலைப்பெறுவை சந்ததியு நன்குண்டென் றி
சைத்துச் சென்றான். (௪௨)

மற்றுமிவன் செய்தவத்தான் மகிழுமரன் சடிலத்து வதியுங் கங்
கை, சிற்றுருவா யெழுந்துபிந்து சரசுபுகூஉப் பகீரதன்முற் செல்ல
வன்னான், பிற்படர்ந்து சகரன்மகார்ப் பிறங்குபுட னீற்றினூற்றுப்
பெருக வன்னார், சொற்கவிஞ ருரைக்கடங்காச் சுகமளிக்குந் திரு
வுடைய சுவர்க்கஞ் சென்றார். (௪௩)

திண்டிறலான் செயற்கரிய செய்தானைப் பகீரதனைச் சென்று
மீண்டுந், தண்டிகழ்செம் மரைமேலான் கண்டுமந்தா கினிநீராற்
சாக ரற்கிங், குண்டுமகி ழுதகமளித் திடுதியென வவ்வாறே யுதவி
யன்னான், பண்டைநக ரடைந்தானென் றிராமற்குக் கங்கைவளன்
பகர்ந்தான் யோகி. (௪௪)

சானவியைக் கடந்தேகு மிராமனதன் வடதிசைவி சாலை
யென்னு, மாநகர்கண் டியார்க்குரிய திதுவென்று கேட்கமறை வலா
ளன் முன்னம், வானவர்கள் பாலுததி வருமமுதந் தனைத்திருமால்
வழங்க வேற்றுப், பானமுறீஇ யதன்பலத்தா லசுரர்களை வென்று
தம பதிகைக் கொண்டார். (௪௫)

அன்னதுகண் டிந்திரனை வெலுந்திறத்த மகவொன்றை யளிக்க
வெண்ணி, மின்னிடைய திதியிங்ஙன் மேவியருந் தவமியற்ற விண்
ணோர் வேந்தன், மன்னியவட் குரியபணி யியற்றியயற்றம் வாய்க்
கவன்னாள் வயிற்றிற் புக்குத், துன்னுகரு வைச்சிதைத்தோ ரெழு
பகுதி யாமாறு துணித்தா னங்கண். (௪௬)

சேதித்த பிண்டத்தைத் திதிவேண்டு கோட்கிரங்கித் தேவர்
கோமான், றீதிற்ற வேஃழ்மருத்தாச் செய்தொழிய விசாலையெ
னுஞ் சீர்சா லிவ்வூர், கோதற்ற சுமதியிப்போ தாள்கின்றா னென்று
முனி கூறுங் காலைப், போதுற்றன் னனிவரைப் பூசனைசெய் துள்ள
மகிழ் பூத்துச் சென்றான். (௪௭)

அத்தலைநின் றேகிரகு பதிதவனை யெதிர்வதியா ரகமியா தெ ன்ன, வித்தலமிக் குயர்கௌத மற்குரிய திவ்வயினவ் விழிவு செய் த, முத்தநகைக் கரியகுழ லகலிகையோ டிந்திரனை முனிவ னேக் கிச், சித்தமழன் றிருவரையுஞ் சபித்திமயஞ் சென்றுதவஞ் செ ய்கின் றுனே. (சஅ)

பீடமருங் கோதமன்சொல் சாபத்தாற் பீசமகல் பெட்பார் போகி, மேடவிரு டணனுை னகலிகைநின் றூற்சாபம் விட்டு நீங்கி த், தோடமிகந் தொளிரவரு டருதியெனக் காதிசுதன் சொல்ல வவ் வா, றேடவிழ்தார்த் தாசரதி யியற்றியவ ணூடுமிதிலைக் கெய்தி னு னல். (சகூ)

மிதிலைநக ரினிதாளுஞ் சனகனுயர் தவற்போற்றி மமலா யி ன்ன, மதலையர்க ளியாரென்ன மகிபுரக்குந் தயரதனன் மைந்த ரெ ன்று, மிதமுடையா யிருமேவாரின் முன்னவன்பே ரிராமனக லிகை தன் சாபஞ், சிதைவுறச்செய் துன்சாபத் திறநோக்கு முளத்தொடி வண் சேர்ந்தா னென்றான். (ருo)

சனகனுடங் குறைந்தருளுஞ் சதானந்தன் காதிசுதன் சரிதை யாவு, மனகனராத் துபினீங்கி யயோத்திநக ரடைந்தானுக் கறைவ னிவ்வா,றெனவரிய தவனுரு மிவனுலக மளித்திடுங்கா லியையு மோ ர்நாட், டனைநிகரும் வசிட்டனிற்குச் சதுரங்கப் படைசூழச் சார்ந் தான் மன்னே. (ருக)

வந்தணைந்த மகிபாலன் வசிட்டனிடைச் சென்றவனை வணங் கி நிற்க, வந்தமுனி வரன்சீர்த்த விருந்தரச னுடன்சேனைக் களிக்க வெண்ணிச், சிந்தையுறு வனவுதவுந் தேனுவைக்கூய் மன்னற்குஞ் சேர்ந்து ளோற்கும், விந்தைபெற விருந்தருத்தி விழைவனவு முதவு கென விதித்தான் மாதோ. (ருஉ)

முக்கால முணர்வசிட்டன் மொழிவழியே தேனுசுவை மூன்று மூன்றே, டெக்காலு மருந்தாத வுணவெவர்க்கு மளிக்கமகிழ் வெய் தி மன்னன், றக்கானே மாமுனிவ நீவேண்டு தனந்தருவென் றுயை மீக் கொண்டே, யிக்காம தேனுவையெற் கீதியெனத் தவனதனுக் கிசையே னென்றான். (ருங)

என்றபொழு திப்பசுவை யானேகொண் டகல்வனென வீர்க்க வேந்தன், சென்றுதவன் றனைவினவி யவனுரையாற் றேனுவுந்தன் றேக நின்றும், வன்றொழிலா யவனுதி கனைப்படைத்தே மன்னனுடன் மற்போ ராற்றி, நின்றிடவக் கோவையிக்கோ தற்சூழுஞ் சேனையுட னோர்ந்து வென்றான். (ருச)

வாகைபுனை தருநிருபன் வசிட்டனுட னேதனத்தின் வலிமை காட்ட, வோகைமுனி யுங்காரத் தொழிந்திடமன் சேனையுட னுற்ற மைந்த, ராகைதரு தவமியற்றி யத்திரம்பெற் றயரரச னுற்றப் பின்னுஞ், சாகையொலி தழுவியநாத் தவன்பிரம தண்டமெதிர் தான்வைத் துற்றான். (ருரு)

தண்டெதிருங் காதிசுதன் சரமனைத்து மழித்தொளிரத் தானத் தன்மை, கண்டுபிர மாத்திரத்தை விடுத்துநிற்க வசிட்டனதைக் காக்கத் தோற்றே, யெண்டருமப் பிரமதே செவற்றினுமிக் குயர் வாகு மியானு நன்கு, கொண்டடைவ னதற்குரிய தவமியற்றி யென்றுளத்துக் குறித்துச் சென்றான். (ருசா)

யாமினியத் திசையிலருந் தவமியற்றி யிராகமுனி யெனப்பேர் பெற்றுத், தோமிறவம் பினுமியற்றத் திரிசங்கு தனுவினொடுஞ் சுவர்க்கம் போதற், காமகமெற் கியற்றுகென வருந்ததிகேள் வனைக் கேட்க வன்னு னீக்கக், கோமகனன் னான்சுதரைக் கூடியுமை யேயரணுய்க் கொண்டே னென்றான். (ருஎ)

அடலாரு முனிசாப மடைந்ததிரி சங்குகுரு வருண்ம காரால் விடலாகிக் காதிசுதன் மேவுமிடஞ் சென்றவனை வேண்டி யிந்த வுடலோடு சுவர்க்கநக ருறவிழைந்தே னுதுபுரிதற் குன்னை யன்றிக் கடலோடு புவியிலொரு களைகணையா னெவ்வயினுங் காணே னென்றான். (ருஅ)

அச்சொலைத்தா பதன்கேட்டுத் திரிசங்கு வெனுமரசற் கபய நல்கி, யிச்சைவழி யியாகத்தை யியற்றுவிக்க மாணவரை யேவி யெண்ணில், பொச்சமிலா முனிவரரை யழைப்பிக்க வசிட்டன்ம கார் போதா ராகத், துச்சமுற வன்னுரைச் சுணங்கன்விடக் குண்டுழலச் சொற்றான் சாபம். (ருகூ)

எண்ணிமுனி யியற்றுவித்த மகத்தவியை யமரர்புகுந் தேலா ராகத், திண்ணியதன் றபோபலத்தாற் றிரிசங்கு வைச்சுவர்க்கஞ் செல்லென் றேற்ற, நண்ணியவன் றள்ளுண்ணக் காதிசுதன் மிகச்சி னவ நாடித் தேவர், விண்ணுறுசோ திச்சக்க ரப்புறத்தி லவ்வேந் தை விளங்க வைத்தார் (சுo)

அப்பால்வா ருணம்புகுந்து காதிதவத் தோன்றறவ மாற்றுங் காலை, யிப்பார்போற் றிடுமம்ப ரீடன்ற னியாகபசு விழந்த தற் காத், துப்பார்நற் கழுவாய்க்கு நரபசுவாச் சுனச்சேப சுதனைப் பெற்றூர்க், கொப்பார்ந்தீந் திடத்தனத்தை யுதவியவற் கொண்டுமீ ண் டேற்றான் மன்னே. (சுக)

மீண்டுவருங் கால்விசுவா மித்திரனைச் சுனசேபன் மேவி யெ ன்னை, யாண்டருள்க வெனவவற்காத் தனையரைநீர் செனமினென வவர்க ளச்சொற், றூண்டமுனி யன்னேரைச் சபித்தடைந்த தன் மருகன் றனக்கி ரண்டு, மாண்டமனு வோதிபவ னுயிர்மகத்தி லொ ழியாத வாறு காத்தான். (சுஉ)

விருந்துறுமா னவமுனிவன் புட்கரத்தின் மேனகையை விழை ந்து துய்க்க, வருந்துறுதன் றவமொழியப் பினுமியற்றி யிருடியெ ன மாப்பேர் வாய்ந்துந், திருந்தியநற் றவம்பிரம விருடியெனப் பெயர்பெறுவான் செய்ய வானோர், முருந்துநகை யரம்பையையத் தவன்றவன்முற் றுதொழிக்க முன்ன ருய்த்தார். (சுங)

ஆண்டுதவ மழிக்கவரு மரம்பையைக்கல் லாகென்ன வாக்கிச் சாப, மூண்டெழுந்த கோபத்திற் குளம்வருந்தி யினிச்சினமே மூ தல வொன்றும், பூண்டுறுவ திலையென்று திடங்கொண்டா யிரம் பருவம் பொறப யானுற், றீண்டுதவம் புரிவெனெனக் கோசிகன் சங் கற்பம்பூண் டிருந்தவ் வாறே. (சுச)

ஆற்றரிய தவமுடிக்க வசிட்டனெடு திசைமுகனு மாங்குப் போந்தே, யேற்றமுறும் பெயர்பிரம விருடியென வுரைக்கமகிழ் வெய்தி னுனித், தேற்றமடை தவனென்னச் சதானந்த னவன்சரித ஞ் செப்பக் கேட்டுப், போற்றலுறு மிராமனெடுங் கோசிகன்றன் னுறையுட்குப் போயுற் றுனல். (சுரு)

மற்றைநாட் காதிபுதல் வனைமிதிலை மன்பார்த்து வரமா ரிந்தக், கொற்றமுறுஞ் சிவதனுவென் முன்னோர்க்கு வானவர்கள் கொடுத்தா ரிப்போ, தூற்றதென திடையிதனை யிராமனுயர் குணத் தினோ டுறச்செய் தானேற், பொற்றிருவா மென்சீதை மணமவற்கே புரிவெனெனப் புகன்றான் மாதோ. (சுசு)

அன்னவுரை கேட்டமுனி யருள்வழியே யிராமனட லரியி னேற்றை, யென்னவெழுந் தெடுத்துவில்லை வளைக்கவவ னுரந்தா ங்கா திற்று வீழத், தன்னுண்மகிழ்ந் துயர்சனகன் றாதுவரை ய யோத்திமன்னைச் சார்ந்தெம் மேந்தல், கன்னியைநின் மகற்களிப்பா ன் வருகென்று வம்மினெனக் கடுக வுய்த்தான். (சுஎ)

வந்துரைத்த தூதுவரான் மகன்செயலைத் தசரதனு மன்னன் கேட்டு, முந்துறுபே ருவகையனுய்ச் சனக னெண்ணம் வசிட்டமா முனிமுன் னுய, புந்திதெளி முனிவரர்க்கும் புரியினர்க்கு மந்திரர்க் கும் புகன்ற ளாவிச், செந்திருவைத் தருஞ்சனகன் மிதிலைக்குச் சேறுமெனத் தேற்றங் கொண்டான். (சுஅ)

அடுத்ததினத் திடைவசிட்ட னுதியரை யிரிரண்டா மங்கஞ் சூழ, விடுத்துமுனஞ் சுற்றமொடு வேந்தர்பிரா னயோத்திநகர் விட் டு நீங்கித், தொடுத்திடுநா ளொருநான்கிற் றுறக்கநிகர் விதேகநகர் துன்னி யாங்கண், வடுத்தவிரும் புகழ்ச்சனகன் மாறின்முக மன்பு ரிய மகிழ்ந்துற் றுனல். (சுகூ)

தம்பிகுசத் துவசனுட னுறைசனகன் றனக்குமனுத் தன்னை மு ன்னுப், பம்புபுகழ்த் தசரதமன் வரைமரபி னிலைவசிட்டன் பகர்ந் து வேந்த, வம்புதுறு மலர்த்தடந்தோ ளிராமற்கு மிளையாற்கு ம ணத்திற் கொத்த, செம்பதுமை நிகர்நினது சிறுமியர்க ளிருவரைத் தந் திடுதி யென்றான். (எ0)

மாதவமே வடிவாய வசிட்டனுரை விதேகநகர் மகிபன் கேளா த், தீதவித்த நிமிமுதலாத் தனதுகுல முறையவர்க்குந் தெரியச் சொற்று,வேதமுறை திருநாவ சீதையைச்சீ ராமனெனும் வில்வ லா ற்குங், காதலுறு மூர்மிளையை யிலக்குவற்குந் தருவெனெனக் கழி றி னனே. (எக)

வந்தனங்கொள் கோசிகன்சீர்ச் சனகனைநின் னிளவறரு மகளிர் தம்மிற், சுந்தரஞ்சேர் மாண்டவியைப் பரதற்குந் துணைவற்குச் சுருத கீர்த்திப், பைந்தொடியா டனையுமுத வெனவவனு முடன்படப்பின் பாரோர் கோலிற், றந்துறுமத் தசரதனுன் மைந்தர்சமா வர்த்தனவுத் தமரோன் புற்றுர். (எஉ)

முன்னையதன் றவவலத்தாற் சனகன்மண வோமத்தை முறையிற் செய்யுந், தன்னனைய விராமற்கு மிலக்குவற்குந் தனயைகளைத் தானமீப, வன்னவன்பின் குசத்துவசன் றன்னிரண்டு கன்னியரையந்தி லீந்தான், சொன்னவணங் கொண்மினெனப் பரதற்குந் துணைவனுக்குஞ் சுரர்கள் வாழ்த்த. (எங)

மணவினையை முடித்துமகிழ் கோசிகன்வா னுயரிமய மலைக்கணேக, வணவியெழு மைந்தரொடு மனைவரொடுந் தசரதமன் னயோத்தி யென்னு, மிணையில்பதி குறித்தேகு மிடைசமதக் கினிமகன் வில் லேந்திப் போந்து, பிணையுமலர்ப் புயராம வோராம ராமவெனப் பெரிது கூயான். (எச)

அழைத்தைய மிலாவீர வரிபலத்தாற் பலமிற்ற வரனூர் வில்லைக், குழைத்தலையங் கதினெழுந்த குரல்கேட்டு நினைத்தேடிக் கூடினேனம், மழைக்கரிய திருநிறத்தான் பிடித்தசிலை யாமிதைநீ வளைக்கிற் பின்ன, ரிழைக்கரிய தாங்தொந்த யுத்தமுந்தந் திடுவன்விடே னிவணின் றென்றுன். (எரு)

இம்மாற்றம் பரசுதர னிசைக்கரகு பதிசினவி யீதி யென்று தெம்மாற்றுந் தனுவாங்கி வளைத்தம்பு கோத்திலக்கென் செப்பு கென்ன, விம்மாற்ற லாற்புரிந்த புண்ணியங்க டமையதற்கு விட்டு நீயே, யம்மாற்ற லாப்புருடோத் தமனென்று வியந்துதன தகத்துச் சென்றுன். (எசு)

மழுப்படையான் கொடுத்தவில்லை வருணனிடத் தளித்திராமன்மன் முன்னுத், தெழிப்புறும்மப் படைசூழ வயோத்தியடைந் தனனுதா சித்தைச் சேர, விழுப்பமுறு பரதனுட னிளவலைக்கே கயமனுப்பி வேந்தன் மேவ, வொழுக்கமுறு மனைசீதை பிரியாம லிராமன்மகிழ் வுற்று வாழ்ந்தான். (எஎ)

பாலகாண்டம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் அஎ.

# உ.-வது அயோத்தியா காண்டம்.

கன்னவிரேறுட் டசரதனக் கடவுளர்வேண் டிடவிந்தக் கடல்சூழ் பூவின், மன்னியமா னுடனாகி வந்தமா லெனுமிரா மன்பா லேய்ந்த, வுன்னுகலி யாணகுணங் கண்டவற்கே முடிசூட்ட வோர்தற்காக, வந்நகரு ளார்முனிவர் மந்திரியர் தமையொருங்கே யழைத்தான் மாதோ. (க)

அரங்கினுள்ளார் தமக்கரசச் னிறைவனியா னாறையுத மாகு மாண்டும், பரம்புபுவி தாங்கினனைப் பரத்தைநம திராமனையே பரிக்கச் செய்து, நிரம்புமிளைப் பகன்றிருக்க நினைக்கின்றே னந்நினைவை நிகழ்த்தீ ரென்ன, வரம்பில்குணத் திராமனுக்கு முடிசூட்டு வதின்மகிழ்வே மன்ன வென்றார். (உ)

மன்னவனைப் பால்வசிட்ட மாமுனிவ வபிடேக வகைக்கா மாறு துன்னுறச்செய் யெனச்சொற்றுச் சுமந்திரனா லிராமனைத்தன் சூழல் கொண்டு, நன்னர்முடி சூட்டுவிப்ப னாளையுனக் கெனவுரைப்ப நம்பி கேட்டுத், தன்னிடஞ்சென் றிடவந்தச் சபையினருந் தங்கடங்கடலத்துச் சார்ந்தார். (ங)

திருமியிரா மனையழைத்துச் செப்பினன்மன் றீங்கெனக்குச் சேரு மென்ன, வருசகுனத் துணர்ந்தனனா ளைப்பூச மாவுடுவின் மௌலி நிற்குத், தருமுறையில் விரையுமுள னெனவதனைத் தாசரதி தானுங் கேட்டுப், பொருவில்குணக் கவுசலையே முதலினர்க்குப் புகன்றிருக்கை புக்கான் மன்னோ. (ச)

அக்காலை யரசன்மொழிந் திடுமுறையேற் றருந்ததிநா யகனேயாகி, முக்காலங் களுமுணரு முனிவரன்சீ ரிராமபிரான் முன்னர்ப் போந்து, மைக்கால முகில்வண்ண முடிபுனைதற் கங்கவுப வாசந் தன்னை, யிக்காலத் தியற்றுகெனக் கரைந்துதச ரதனுமைத் திறைபாற் சென்றான். (ரு)

பூமுனிவ ரமரர்புரி நோன்பினுக்குப் பலனாகப் போந்த நம்பி மாமுனிவன் மொழியின்வழி நோன்புற்று மன்னுமரண் மனையை முற்றுந், தாமமுற வணிவித்தா னகரினர்க ளணிக்கணியைத் தருவார் போலக், காமர்நக ரணிந்திரகு பதிமுடிசூ டுதல்காணுங் காதன் மிக்கார். (சு)

இவ்வாறிங் கிவரிருப்ப விராமன்முடி யேந்துகின்ற வென்றே
கூனி, செவ்வாய கைகேசிக் கபிடேகத் திறஞ்சொலியித் திறத்தாற்
றீங்கு, தவ்வாது நிற்குறுமென் றுரைக்கவது கொள்ளாளாய்த் தன்
னி ராமன், றெவ்வாறு முடிபுனைவா னெனற்குமகிழ் திவட்கொர
ணி சிறப்ப வீந்தாள். (எ)

கொடியமன மந்தரையக் கைகேசி கொடுத்தகலன் கொண்டு வீசி
வடியபிலின் விழிமடவாள் மனத்தையொரு நிலையிலுறு வாறே
செய்து, முடியயலாண் மகன்புனைய விடிலுனக்குக் கேடளவின் மு
ற்று மிந்தப், படியிலெனப் பலவாறுய் விரித்தவளுக் கெடுத்தனைத்
தும் பகர்ந்தாண் மன்னே. (அ)

பகர்ந்ததன துரைக்கிணங்குங் கைகேசி தனைநோக்கிப் பார்த்
தி பேச, னுகந்துமுன மிரண்டுவர முதவினனிற் கதனையுளத் துண
ர்ந்து கோடி, தருந்தருண மிதனிலென வவைகொள்ளும் வழியுநன்
கு சாற்றக் கூனி, மிகுந்தவன்பொ டவட்போற்றிக் கைகேசி கோ
பமனை மேவி னளால். (கூ)

செங்கதிரின் வழித்தோன்ற லுவளகத்திற் கைகேசி சேரிற்
சேர, வங்கிலளாய்ச் சீற்றவகம் புகுந்திருப்பக் கண்டவனு மந்தேர்
வென்னே, யிங்குறுவான் பெருமாட்டிக் கியைந்ததிட ரியற்றவலர்
ரேவ ரென்று, துங்கவுளத் தெதைநினைந்தோ வதையுரைக்கிற் றீர்
ப்பனின்னே சொல்லு கென்றான். (க0)

சொற்றிடுதன் னுபகனு ருரைக்குமகிழ் கைகேசி துணைபோம்
வேந்த, வெற்றமூவிச் சம்பரன்போ ரிடையெனக்குக் கொடுத்தவர
மிரண்டி லொன்றான்,முற்றுகடற் புவிபரதன் முடிசூடி யாண்டிருக்க
மொழிமற் றொன்றாற், பற்றலுறு மிராமன்வனம் பதினாலாண் டே
கிவரப் பகர்தி யென்றாள். (கக)

அவ்வுரைகேட் டிடியுண்ட வரவமென வரசனயர் வடைந்து
பின்ன, ரெவ்வுதெளி வுற்றேனுய்க் கொடியார்க்குங் கொடியாளா
முவளை நோக்கிக், கவ்வைமிகு பயங்கோபம் வெறுப்பிவைகள் பல
வாற்றிற் கலந்த சொற்க, ளிவ்வளவென் றளவிடுதற் கரிதாகச் சொ
ற்றனனு லிசைய மன்னே. (கஉ)

மற்றுமுறு மனுதாப மதியினனுய் மன்னவர்க்கு மன்னனு வான். பெற்றியையே தருந்தரும பாசத்தாற் பிணிப்புண்டு பேசிற் சற்று, முற்றுடைய பரிவிலளா மனையாட்குநயமொழிக ளொன்றோ பல்ல, கற்றுடைய திறத்தானே யெடுத்துரைத்தும் பயனொன்றுங் கண்டா னில்லை. (கங)

துறைபலவாச் சொலுமரச னறத்தினிடைத் துவக்குண்டு தோன்ற லென்னு, மறையுருவ ரகுபதியை வனத்தனுப்ப நேர்ந் திட்டான் மறுநாட் காலை, யிறைவசிட்டன் சொலவேந்தை யழை க்கவரு சுமந்திரனை யின்னே நீபோய்ப், பொறைகுறைவி லிராமனை த்தந் திடுதியெனக் கைகேசி போக்கி நின்றுள். (கச)

சென்றசுமந் திரனரச னரண்மனைவாய் தலிற்செறிந்த திரளா யன்ன, ரொன்றுமுளக் கிடக்கையுணர்ந் தேந்தல்பால் வந்துதுயி லு ணர்த்தவன்று,னென்றனைய னிராமனைநீ யிங்கழைத்து வருதியென வியம்பச் சூழ்வோன், றென்றுதொடர் புகழ்விளக்குங் குலவிளக் கா மிரகுபதி சூழல் சார்ந்தான். (கரு)

சார்ந்தசுமந் திரனந்தத் தாசரதி தனைநோக்கிச் சாம்ப லில்லா வார்ந்தமதுப் புண்டரிக மலர்முகத்தாய் நினையழைக்க மன்ன னே வச், சேர்ந்தனன்யா னெனவோத வம்மொழிகேட் டின்னேயான் செல்வ னென்னுப், பேர்ந்தொருரை சொலவறியா வாய்மையுடைப் பிதாமனைக்குப் பெயர்ந்தான் மன்னே. (கசு)

சந்தனத்தின் மிசையிவர்ந்தே யொப்பனைசெய் கோமறுகிற் சார வங்கண், வந்தணைந்தா ரெம்பெருமான் வடிவழகில் வைத்தக ண்கள் வாங்கா ராகிச், சிந்தையுவந் தனர்தொழுது கொண்டாடி நி ற்கவந்தத் திரளை நீக்கித், தந்தைதுயர்க் கிடனுகு மொப்பிறு மனை க்கண்மகன் சார்ந்தான் மன்னே. (கஎ)

ஈன்றானை யார்வமுடன் வணங்கிநிற்கு மிராமனைநே ரெதிர்கை கேசி, தோன்றானின் பிதாவெனக்கு வரமிரண்டு தந்தனனச் சொன்னீ மெய்யா, யேன்றானுய் முடிசூடிப் பரதனுல காண்டிடவி ட் டின்னே செல்வா, யான்றோர்க ளுறைகானிற் பதினுலாண் டெ னத்திடங்கொண் டறைந்தா ளந்தோ. (கஅ)

இரக்கமிலாக் கொடியமனக் கைகேசி வனமேகென் றிசைத்த சொல்லைச், சிரக்கணியாப் புனைந்தங்ஙன் செய்வனெனத் தாசரதி செப்பித் தன்னைக், காத்தலொரு கணமுமிலா விலக்குவனு முடன் போதக் கமலப் பூவென், றரத்தமுறு மடியிணைகள் படிநடவிக் கௌசலைபா மனையில் லுற்றான். (க௯)

எம்மையினுந் தவமுறலா வினையில்லாத் தனையீன்ற விறைவியார்தஞ், செம்மைமலர் முகநோக்கித் திருமகனீ ரேழாண்டு செல்வனின்று, வெம்மைதவிர் வனமென்ன விளம்பிடக்கேட் டறிவழிந்து வீழ்ந்து பின்னர், விம்மலுறு தெளிவினளாய்ப் பலவாறு பிதற்றுதலே மேயாண் மன்னோ. (உ0)

கோசலைதன் றிருமகனை யிளையவன்வெவ் வன்மேகல் கூடாதென்ன, வாசகனு மம்மொழிகேட் டகமுற்ற திடத்தினளா யரிய மைந்த, நேசமுறு மென்போல்வார் நிலைநோக்கி யடவிசெல னீக்கென் றோதப், பாசமுறு சனனிக்கு மனுசற்கு மிராமனுறப் பகர்ந்தா னீதி. (உக)

அப்பாலுந் தாசரதி யிலக்குவனை யுறநோக்கி யைய காலத் தொப்பாகும் விதிவலிதான் மிகப்பெரிய ததனையெந்த வுபாயத் தாலுந், தப்பார்க ளியாருமென விளக்கியனை கைகேசி தன்பாற் சீற்ற, மிப்போதே தவிர்ந்திடுதி கொளன்ஞாய மிலையென்ன விசைத்தான் மன்னோ. (உஉ)

இன்னபடி யிசைத்திட்ட காகுத்தன் மொழியினைக்கேட் டிளைய கோவுஞ், சொன்னமதி வலியானே விதியெளிதாய் வெலலாகுஞ் சோர்வே யின்றி, முன்னொருவன் விடாதுமுயல் கின்றானே லென விரித்து மொழிந்தா னாக, வன்னவைக ளறநெறியா விராமன்மறுத் தூழ்பெரிதென் றறைந்தான் மன்னோ. (உ௩)

படங்கொளும்பாம் பணைதுறந்து பாரிலற நிறுத்தவந்த பான்மை யாள, னிடங்கொளுந்தோ ளிராமனிவ னெனலைக்கோ சலையுமறிந் திட்டாள் போலுந், தடங்கொளுமவ் வுயர்நெறியி லவனின்ற வுறுதிக்குத் தான்றான் புற்றுக், குடங்கொளுநீ ருமிழ்கண்ணாண் மகனடவி செலவொத்துக் கொண்டா ளன்றே. (உ௪)

மங்களங்கட் குறைபிடனு யிலக்குமிக்குத் தவனுகு மைந்தற் காசி, திங்களென வொளிர்வதனக் கௌசலைமங் களம்பலவாச் செப் பி நீசெய், துங்கமுறு தருமமனைத் தொடர்ந்தளிக்க வெனப்பரிந் து சொல்லக் கேட்டே, யங்கவர்பால் விடைகொண்டு தம்பியுட னி ராமன்ற னகத்திற் சேர்ந்தான். (உரு)

இல்லிடைச்சென் றில்லாளுக் கியான்வனத்திற் கேகுகின்றே னின்னே யென்னச், சொல்லிடக்கேட் டொவ்வாத துயரிடைச்சேர் தருமவட்குத் துணைவன் வேற்றார், செல்லவகத் திடையிருக்கு ந ங்கைமா ரொழுகுமுறை தெரிப்ப னீதே, யல்லதிலை மனக்கொள்வா யெனவெடுத்துப் போதித்தா னங்கி ராமன். (உகூ)

சானகியார் பின்னுமண வாளனைப்பார்த் தையநினைத் தவிர்த்தே யிங்ங, னனமொரு கணமுமுயிர் வாழ்வுகவே னுடனென்னையு மழைத் தே யேகத், தேனமரும் பொழில்வனத்திற் கெனமொழியத் தாசர தி தேவீ வெய்ய, கானகநீ வரற்குரியை யல்லையெனச் சாமமுறக் கழறி னனல். (உஎ)

வனத்திடைநீ வருவையெனில் வதம்புரிய வேண்டுமந்த மட் டோ தீய, சினத்தரியே முதலாய விலங்கினங்க ளாறப்பமுஞ் சேர் வை சேய்த்தாம், புனத்தவருஞ் சுரமுநடந் திடல்வேண்டு மிதிற் றுன்பே போது மெண்ணி, லினத்தினர்க ளுடனகரி லிருந்திடுக வெனராம னிசைத்தான் பின்னும். (உஅ)

வெற்றியையே கொளுமடிக ளுடன்வருமிவ் வடியாட்கு வெய் ய கானி, லுற்றிடுமோ துயரெனினு மதுசுகமே யுமைப்பிரித லொன் றே தாபஞ், செற்றமுறு தழைத்தேக வெனமொழிந்த சீதையையச் செம்ம னேக்கி, நற்றமுறு பலமொழிக ணயந்துரைத்திங் கிருக்க வென நவின்றான் மேலும். (உகூ)

மாணமரு மைதிலியார் சினமுதிர்ந்து மணவாள வடிவ மாறி யாமெனனவே நடிக்கின்று யறியுங்காற் றெரிவையென வறைந்து நிற்கச், சேணமரும் புகழ்த்தாச ரதிநீயும் வருகவெனச் செப்பி நி ற்குப், பேணலுறு வார்பெரியர் மகிழநிதி யளித்திடெனப் பேசி னனல். (௩௦)

இலக்குவனுங் கானகத்திற் குடன்வருவேன் யானுமென வி
சைக்க ராமன், விலக்கவதற் கவனிணங்க கிற்றிலன்பின் வாவென்று
விளம்பித் தங்கள், குலக்குரவ னகக்கணுள வாயுதங்க ளிலையோனு
ற் கொண்டன் ஞேற்கு, நலத்தகுமச் சுயச்சன்முத லோரையிவ ண
ழைத்தியென நவின்ருன் மன்னே (௩க)

தம்பியழைத் திடவந்த சான்றோரில் வசிட்டனருள் * சயச்சு
யச்சற், கெம்பெருமான் மாதுலனு லளித்துறுசத் துருஞ்சயமா மி
பத்தை யீந்து, கும்பமுனி திரிசடரே முதலினர்க்குக் குடஞ்சுட்
டுக்கூர்பொன் றாசும், பம்புமொளி யரதனங்கண் மகிழ்தரத்தந் தவ
ராசி பணிவோ டேற்ருன். (௩௨)

இளையானுஞ் சானகியுங் கானகத்திற் குடன்வருத லிசையே
யன்றி, விளையாத புலமன்ன னறிதரவங் கவர்களொடு மிராமன்
வீதி, திளையாத மெல்லடிக டிலைவித்துக் கண்டனர்கள் செல்ல லெ
ய்தக், கிளையாருங் கோமனைபுக் கன்னவற்குச் சுமந்திரனைக் கிளக்க
ச் சொன்னுன். (௩௩)

அங்கதுதேர் நிருபர்பிரா னேழைம்பான் மனைவியரு மருகு சூ
ழப், பங்கயம்வென் றொளிர்வதனத் திராகவனை நோக்கவவன் பார்
த்தெம் மேந்தா, னங்கையிலக் குவனுடனே நான்கானஞ் செல்லவி
டை நல்கென் றோதச், சங்கையிலா தளித்துமகன் பிரிந்ததுயர்க் கா
ற்ருனுய்த் தளர்வுற் ருன்மன். (௩௪)

சாலவுணர் சுமந்திரனக் கைகேசி குரூரநிலை தன்னை நோக்கித்
தாலமிசைக் கொடுமையினின் ருய்போல்வா யெனச்சினந்து சாற்றி
ப் பின்னுஞ், சீலமிலா யெனவெருவச் சிலமொழிந்து நல்வார்த்தை
தெளியச் சொல்ல, வேலுமவ டன்னிலையி லொருசிறிதுங் கலக்கமி
லா திருந்தாண் மன்னே. (௩௫)

தன்மதலை யுடன்சேனை முதலியவு மனுப்புகெனச் சாற்ற மன்
னன், றன்மதிய கைகேசி யசமஞ்சற் றுரந்ததுபோற் றுரக்க வெ
ன்று, பின்மொழியச் சித்தார்த்தன் வருந்தியவன் போலிவனென்
பிழைத்த தோதாய், நின்மனமோ மிகக்கொடிய தெனவவளைப் பல
வாறு நிந்தித் தானல். (௩௬)

---

* சுயச்சன் - ஸுயஞன்.

பொற்கலைகொ ளிராகவன்வற் கலைகளைகோல் பிடகமிவை போதும் போது, மெற்கெனவப் போதெடுத்துக் கைகேசி மூவருக்கு மீந்தா ளாறு, வற்கலைக ளிராமன்கொண் டுடுத்துமனை யவட்குடுக்க வசிட்டன் கண்டிக், கற்புடையாட் கிதுவடாஅ தெனத்தடுத்துக் கைகயியைக் கனன்றான் சால. (௩௭)

தாயனைய சானகியார்க் கிதுவிதியோ தயரதனாற் சார்ந்ததென்றே, யாயிடைப்பல் லோர்புகலக் கைகயியைப் பார்த்தரச னந்தோ விந்தத், தீயசெயன் மருகிக்குஞ் செயலொல்லா தெனச்செப்பச் சீதை கொண்க, னாயகனே கௌசலையென் பிரிவிலுயிர் நீங்காம னன்கோம் பென்றான். (௩௮)

கானிடைச்செல் லியவிரதஞ் சுமந்திரன்கொண் டுறவரசன் கழறு மாறே, யாளவுடை பணியணிந்த மருகியைக்கோ சலைநோக்கி யரிய நூல்சொன், மானமுறு பதிவிரதா தருமமிவை யெனவோத மைந்த னந்தத், தானமுறு தன்றாயர்க் கியான்காட்டிற் கேகவிடை தம்பி னென்றான். (௩௯)

தந்தையைச்சூழ் வந்திறைஞ்சிச் சுமித்திரைசொற் கொண்டதம்பி சனகி யோடுஞ், சந்தனத்தி னெறிக்கொண்ட ராமன்பிற் றந்தையொடு தாயர் சார, மந்திரியர் தசரதனைக் கௌசலையை யுடன்செல்லன் மாற்ற வன்னார், முந்துமுரைக் கியைந்துமகன் சென்னெறியில் விழிவைத்து மோகித் தானால். (௪௦)

சீராம வறமேயோ வெமைவிட்டுத் திருநகரந் தீர்ந்து செல்வா யாராம மிதிற்சுகமோ வெனவரசன் றேவியர்க ளலறி மாழ்க, வேராரந் நகருற்ற தெடுத்துரைக்குந் தரமன்றா லியாவுஞ் செய்கை யோராது பெருங்குரல்விட் டடல்கரையக் கண்ணீரா யொழுக்கிற் றந்தோ. (௪௧)

மண்ணிலார் தரப்புரண்டு மமோகங் கொண்டழுங்கு மன்னன் றன்னைப், பெண்ணிலா ரமுதனைய கோசலையுங் கைகயியும் பேணித் தாங்க, வெண்ணிலாள் கைகயியைப் பரதனுடன் கைவிட்டே னென்று சொற்றுக், கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான் கடுந்துயரங் கடிம னைக்கண். (௪௨)

விதனமுறு தயரதனை விட்டகலாக் கோசலைதான் விரும்பி யீன்ற, சுதனகல வருஞ்சோகந் துடைக்கரியா ளிவண்வருமென் ருேன்றல் செய்ய, வதனமினி யான்காண லென்றேயோ வவன்றி ருமி வாரா னென்னி, னிதனமடை வேனெளியேன் வாழ்வுகலே னென்றலக்க ணிரம்பக் கொண்டாள். (சங)

*வனத்தகத்தன் மகனெனற்கு வருந்தலவ னயோத்திக்கு மன்ன னென்று, மனத்தவரி யாதியவாற் பயமிலன்றே வனைத்துந் தன் னகத்தி னுள்ளா, னினத்தருக்கன் காற்கிடையா னிளையானே ருடையான்வந் தெய்து நின்னை, மனத்தொழிக செல்லலெனக் கோசலைக்குச் சுமித்திரையுள் வாய்ப்பச் சொற்ருள். (சச)

இறையுமிறை யேயகலே மெனத்தொடரு நகரினரை யிராம னேக்கி, முறையலநீர் வருதலென மொழிந்துபல வுபாயங்கண் முன்னிச் செய்து, மறையகிலா தடங்குவரு மவர்களுட னிரவுவரை வைகி னுனு, னிறையுநறை பொழியுமலர்ச் செழுந்தருச்சூழ் தமசைநதி நெடிய தீரம். (சரு)

† உந்திதரு கமலத்தை யுணவாகத் தம்பியொடு முடையா ளோடு முந்திதரு கமலத்தோ னுண்டிரவிற் சுமந்திரனே டோர்ந்தே யாலா வுந்தியெனத் தனைச்சூழ்ந்து துயினுக ரிகரறியா துறங்க வஞ்சத் துந்தியவ ணின்றுபுறம் போந்தனனு லியாரவனை யுணர வல்லார். ()

ஆதித்தன் முன்னெழுந்தா னனந்தலுணர்ந் தனைவரும்பின் பந்தோ வெம்மைப், பேதித்த திக்கொடிய துயிலெலங்க னிராமபிரான் பெயர்ந்தா னென்று, சோதித்துச் சந்தனஞ்செல் சுவட்டேக வவை திரிந்து தோன்ற வுள்ளம், வேதித்து மிகச்சாம்பிச் செயலோரா தயோத்திநகர் மேவி னுர்கள். (சஎ)

மன்னவன்சே யுடன்சென்ருர் வந்தடைந்த பின்னகரின் மாந்த ரெல்லா, முன்னவனை யில்லாத யாமனைவி மக்கள்பொருண் முதல வற்ரு, லென்னபய னெய்துவா னிருக்கின்றே மவற்ருெடர்ந்த

---

* இப்பாட்டு இராமன் பரம்பொருளென்பதனையும்உய்த்துணரவைத் துள்ளது. வான்மீகரும் இவ்வாறே உய்த்துணர வைத்துளார்.

† உந்திதருகமலம் - ஆறுதருநீர்.

விளைய கோவு, நன்னுதலாள் சீதையுமே நல்வினைஞ ரெனவேதி
ஞைந்து நின்றார். (சஅ)

மெய்காக்க மெய்விடுக்கும் வேந்தர்பிரான் றிருமதலை விரைந்து
செல்வான், செய்காக்குஞ் சனபதமு மாநகருங் குடிஞைகளுஞ்
சேணி லோங்கி, மைகாக்க வளர்சோலை களுநோக்கி யென்றைக்கோ
வருவேன் மன்னர், கைகாக்கு மயோத்திநகர்க் கெனநினைந்து கோச
லத்தைக் கடந்தான் மன்னே. (சகூ)

பிரிவென்னும் பீழைபிறாற் பெருந்துயர்கொள் கோசலத்தைப்
பிரிந்தி ராமன், திரிபதகைக் கரையிலணைந் தன்பின்மிகு குகனோடு
சேர்ந்த ளாவி, விரிதருமிங் குதிமூல மிரவுதுயில் சீதையுடன் மேவ
வாங்குப், புரிவினரா யிலக்குவனும் வேட்டரசு மெய்காவல் பூண்டு
நின்றார். (ரு0)

தேனிருக்கு மலர்மேன்மைத் திருமேனி யிராகவனுஞ் சீதை
யாருங், கானிருக்குங் கற்றலத்துக் கண்டுயில்கொள் கின்றதனைக்
கண்டுஞ் சீர்த்தி, வானிருக்குந் தந்தைதாய் தமைநினைந்து மிகவருந்
தி மன்னு வேட்டு, நானிருத்த லெற்றுக்கோ வெனப்புலரும் வரை
நவின்று னம்பி தம்பி. (ருக)

என்றெழுந்த வுடனெழுந்து சுமந்திரனைத் தேற்றிநகர்க் கேகச்
சொற்றுத், துன்றுசடை தரித்திளைய கோவுடன்முன் குகன்விடுத்த
தோணி யேறிச், சென்றுகங்கை கடந்துவச்ச தேசமும்பிற் படப்
போவான் செறியு மாலை, யொன்றவுண வாமிருகத் தசைகொண்
டோர் தருமூலத் துற்று னன்றே. (ருஉ)

அவ்வயிற்சென் றிடுதாச ரதிகானந் தானடைந்த வதற்கு
நொந்தே, யெவ்வமில்சீ ரிலக்குவநீ யயோத்திநகர்க் கெய்துகென
விசைக்கத் தம்பி, கொவ்வையிதழ்த் திருமாது மியானுமுனைப்
பிரியினுயிர் கொள்ளே மென்னப், பவ்வமிசைத் துயிலொழித்தா
னவரொடிராத் துயில்கூர்ந்தான் பசும்புற் பூவில். (ருங)

ஆதித்த னெழவனுச னுடனெழுந்து பிரயாகத் தணைந்தி ராம
ஞதித்தி யம்பரத்து வாசமுனி செயப்பெற்றே யவனு முங்கட்
காதிக்க முறவசிக்கச் சித்திரகூ டப்பொருப்பே யமையு மென்ன
வாதித்தன் மறைநாவா லறையமலை வளமுற்று மறிந்தா னன்றே. ()

பரத்துவசே ரறியுமுபர் பரத்துவனவ் விராமற்கும் பாங்கு ளார்க்கும், வரத்தபல வாசிசொலிச் சித்திரகூ டஞ்செல்லும் வழியுங் கூறக், கரத்தலிலா தவர்கேட்டுச் சென்றியமு னாநதியைக் கடந்தக் கானி, லரத்தமுறும் விலங்கின்விடக் குண்டிரவு போயொழிய வமர்ந்தா ரன்றே, (ருரு)

மூவருங்கா லையிலெழுந்து முறைமுற்றி நெறிக்கொண்டு மொய்த்து நாளுந், தேவருங்கான் மலர்தூவித் தொழுஞ்சித்ர கூடமலைச் சென்று சேர்ந்து, தாவருங்கைத் தொழினலத்தா விளையான்செய் திடுபன்ன சாலை தன்னின், மேவரநன் கெழுந்தருளி யிருந்தனர்கள் விபுதர்தவர் மெய்ப்பே றன்னார். (ருசு)

சித்திரகூ டக்கிரிக்குச் சென்றனனம் மிராமனென்னத் தெரிந்தா னாகி, யித்தலம்வந் தணைந்தான் சுமந்திரனென் றரசனிடத் தெய்திக் காரை, யொத்தறல்பெய் கண்ணுடையாள் கௌசலையன் னாற்குரைப்ப வோர்ந்தவ் வேந்தன், சித்தமழுன் றொருவாத துயரினனாய் மாமோகஞ் சேர்ந்து சோர்ந்தான். (ருஎ)

உற்றுடைய சோபமொரு வாறொருவித் தேறலுறு முலகாள் கோவைக், கற்றுடைய சுமந்திரன்பார்த் திராமபிரான் றன்வயினே கழறி யுள்ள, நற்றமுறு பலமொழியு மிலக்குவன்சொல் சினமொழியு நங்கை சீதை, பற்றுமனத் திடர்க்குறிப்பு மிவ்வென்ன நன்கறியப் பகர்ந்தான் மன்னோ. (ருஅ)

பின்னருமச் சுமந்திரன்றன் புரவலர்தம் பெருமானைப் பெரிது நோக்கி, மன்னவநம் மிராகவனைப் பிரிந்திந்தச் சாகேத மருவி வாழ்விற், றுன்னுசரா சரமனைத்துஞ் சோர்வினையே யடைந்ததெனச் சொல்லக் கேட்டு, முன்னையினு மனுதாப மிக்கானா யாவயினே மூர்ச்சித் தானால். (ருகூ)

வந்துற்ற தன்னிலைமை மகன்றசர தனிசெயலை மனத்தி னோர்ந்து நொந்துற்ற கோசலையைச் சுமந்திரன்றன் பாங்குற்று நோக்கி நீர்தா, மைந்துற்ற தருவனத்தி லயர்வின்றிக் குல்வுமைந்தர் மருகிக் காகச், சிந்துற்ற குலமடைத றகவன்றா லென்றுரைத்துத் தேற்றி னானால். (சுo)

உலகமெல்லாம் வயிற்றொடுக்கு மொப்பில்பரம் பொருளைத்தன்
னுதர மென்னு, மிலகுவடத் தளிர்தாங்கி யீன்றதவக் கோசலைபார்த்
தெங்கள் வேந்த, குலவுமுயிர்ப் பாலகனை யிராமனைக்கான் விடுத்த
னையாற் கொடிதீ தென்ன, வலறியழ வதுகேட்டுத் தானுமகங் கரை
ந்தாறு யயர்ந்தான் மன்னன். (சூக)

கோசலைபின் றெளிந்தெழுந்து தனையாற்று நாயகனைக் கோவே
யிங்ங, ஞசுகெழுங் கொடுஞ்சொற்க ளறிவிலா வடியேனு லறைந்த
வெல்லா, நேசமுறு மனத்தடைக்கா தருள்புரிக வெனவேண்டி
நிற்கக் கேட்டே, பேசிலனோர் மொழியுமவ னயர்வுடைமை யாற்று
யிலே பேணி னனல். (சூஉ)

நித்திரைநின் றெழுந்தரச னிகழ்த்துவன் வேட்டம்புரிய நேர்ந்து
முன்னந், தத்துமலைச் சரயுவிடைச் சலமுகந்த தவன்மகனைத் தா
னோர் நாளின், மத்தகச மெனநினைந்து மறைந்துறைந்தோ ரம்புய்த்து
மடித்த தாதி, யொத்துளவச் சரிதங்க ளனைத்துமவ னன்கோர
வுரைத்தான் மன்னே. (சூங)

மாமுனிவன் மொழிசாப மாறுமோ மகப்பிரிந்தே மரண மெற்
கிங், காமதினீ யையமுறே லென்றுமனை கோசலையார்க் கறைந்து
மவ்வி, ராமனையே நினைந்துமவன் பெயருரைத்து முளத்தொன்று
நாடா னாகிக், கோமகனள் ளிரவினிடை மெய்விடுத்தான் மெய்கூற்
றுய்க் கொல்லுங் கொல்லோ. (சூச)

மற்றைநா ளுதயத்து மன்னவர்மன் னுடலொரீஇ மரண மந்
தோ, வுற்றனனென் றுணர்ந்தனரா யுவளகத்தி லுறுமடவா ரொ
ருங்கு கூடிச், சொற்றவொலி யெழுப்பியழக் கோசலையுஞ் சுமித்தி
ரையுந் துயினீங் குற்றுக், கொற்றவனைக் கண்டாவா கூட்டொழிந்த
தென்றழுகைக் குரலே கூர்ந்தார். (சூரு)

காவலன்றன் முதற்றேவி கைகேசி தனைநிந்தை கழறி யுள்ளப்
பாவமெலா முரைத்துமகன் றனைத்துதித்துங் கலுழ்ந்திடவப் பதியி
லுள்ளா, ரோவெனவாய் விட்டலற மந்திரிகண் மகற்கொண்டவ்
வுயிர்போம் வேந்த, னேவுமுட லீக்கொளுவத் தயிலப்பா சனத்தி
லுய்க்க வொழிந்த தந்நாள். (சூசா)

மாதவனே பரமெனத்தோர் மார்க்கண்டன் மவுற்கலியன் வாம
தேவ, னாதிமுனி வரர் மற்றைத் தினத்துதயத் தொருங்கவைக்கண்
ணடைந்து சீர்சால், போதநிறை தருவசிட்ட புரவலனில் லாமரசிற்
போதப் பஃறீங், காதலைநீ யறியாயோ குலக்குமர னொருவனைமன்
னுக்கு கென்றார். (சுஎ)

அம்முனிவர் மொழிகேட்டுப் பரதனைச்சா கேதத்திற் கழைத்து
நீவிர், வம்மினெனத் தூதுவரைக் கேகயத்திற கனுப்பினன்மா வசி
ட்ட னன்னார், தம்மைநிகர் கவனத்த ரிலையென்ன விரைந்திடை
யார் தலங்க டாண்டிச், செம்மலுறு கேகயத்திற் சேர்ந்தனர்க
ளிரவியுமேற் றிசையிற் சேர்ந்தான். (சுஅ)

அன்றிரவிற் பூதலம்பா தலஞ்செல்லக் ககனநின்று மாலோன்
வீழ,வன்றிறன்மன் பட்டத்து மதகயங்கொம் பொடிந்துவிழ மன்ன
வின்ன, துன்றுகனுப் பலகண்டு பரதனவை நினைந்துமனத் துன்ப
மேவி, யென்றுதித்த வுடனன்பர் தமையழைத்துக் கனுவனைத்து
மியம்பி னால். (சுகூ)

சொற்றிடுமக் காலத்துத் தூதுவர்போய்ப் பரதனடி தொழுது
தோன்றால், செற்றமொழித் திடுவசிட்ட முனியனுப்ப யாமிங்குச்
சேர்ந்தோ மும்மைச், சுற்றமுறு மயோத்திநகர்க் கழைத்தேக வெ
னக்கேட்டுத் துணைவ னோடு, கொற்றமுறு மாதுலன்றந் துளவரிசை
கொண்டுவழிக் கொண்டா னன்றே. (எ0)

இரேணுவினா லம்பரம்பா ரெனத்திரிய விரதம்விரைந் தேறி
யோட்டி, நரேசனெனும் பரதனிளை யானொடிடை மேவுவன நாடு
நீங்கி, யொரேழுதினத் தயோத்திநக ருற்றுநக ரினர்வருத்த மோர்ந்
துண் னொந்து,நரேசனரண் மனைச்சென்றே யறிதுமெனக் கதுமென
வத் தலத்துச் சார்ந்தான். (எக)

சார்ந்துமனன் றனைக்காணான் கைகேசி யைத்தாழ்ந்து சாற்றும்
வேந்தன், சேர்ந்ததெவ னெனவுந்தை சென்றனன்வான் சாகேதந்
தீர்ந்து கானிற், பேர்ந்திடவுந் திராகவனை யரசுனக்கே யுரித்தாகப்
பெற்று நின்றேன், கூர்ந்தமதி யுடைமைந்த நின்னவே குவலயங்கள்
கொள்க வென்றாள், (எஉ)

மண்ணுலகை யறநெறியே வழுவாது கோல்கொண்ட மன்னர் மன்னன், விண்ணுலகஞ் சென்றதுவு முயிரனைய தாசரதி வெய்ய கான, நண்ணியதுங் கோட்டாற்றாத் துயரினனு யயருற்று நங்காய் சற்றுங், கண்ணிலையே நிற்கென்னக் கைகேசி தனைத்தூறிக் கடிந்தான் மன்னே. (எங)

பழிவளர வுயிர்த்திடுதாய் தனைப்பழித்துப் பரதனுயர் தேனு வுந்தன், வழிவழியில் வருமிடபம் வெயிலிலுழக் கண்டுமனம் வருந்திற் றென்னி, வுழுவலுடைக் கௌசலைதா னுயிர்த்தமக னிராமன் வன முறவெவ் வாறோ, வழிவகங்கொண் டனளந்தோ வெனவெண்ணி நெகிழ்ந்தறியா தயர்ந்தா னன்றே. (எச)

சத்துருக்க னுடன்பரதன் கௌசலையா மன்னையிடஞ் சார்ந்து தன்பா, லெத்திருக்கு மிலையென்ன வவளறியு மாபுரிய வெண்ணி மெய்யே, யொத்திருக்குஞ் சபதங்கள் சொல்லவவ ளுறுதியென வுள்ளத் துள்ளி, மைத்திருக்கு மவ்விரவை மனச்சோகத் தொடுநீத்து மன்னி னாளால். (எரு)

மற்றைநா ளுதயத்து வசிட்டனுரைப் படிபரதன் மன்னன் றன்னைக், கற்றையொளி மணிச்சிவிகை யேற்றுவித்து வருந்தினெலாங் காசும் பொன்னு, முற்றவிறைப் பித்தீமங் கொண்டணைந்து சாந்தமகில் முதல வாசந், துற்றுபல விந்தனங்க ளடுக்கியதி லேற்றியெரி சூழ வைத்தான். (எசு)

சென்றிடுநா ளீராறிற் றசரதற்குச் சபிண்டிவரை செய்தே யுள்ளத், தொன்றியமா துயரினனு யுறைபரதற் றேற்றிமுனி யோர்பன் மூன்று, துன்றுதினத் திடைத்தேச முறைப்படியே தகனதலஞ் சுத்தஞ் செய்வா, யென்றிடக்கேட் டவ்வாறே யியற்றினனேர் குறையுமிலா திசைய மன்னே. (எஎ)

ஒளிவிடுக்கு மணிகள்பல வணிந்துதன்னே நோக்கியுள முவக்குங் கூனி, களியழித்துச் சத்துருக்கன் கைகேசி யையுமச்சங் கலந்தா ளாக்க, வளிமிகுத்த பரதனவை கண்டினையோன் றனைச்சாந்தனுகச் செய்தான், றெளிவிலளாய்ப் பயந்தடைந்த கூனியைக்கை கேசிசொல்லாற் றேற்றி னாளால். (எஅ)

நீதியறி யமைச்சினர்கள் பரதவர சேற்ருள்க நீயே யென்ன வோதினரவ் வுரைக்கிணங்கா திராமனைச்சென் றழைத்துவர வொருங்கே யாரும், போதருதற் குறுநடவை நன்கிவையச் சமமாக்கிப் பொறப்ப வின்னே, யாதலுறச் செயச்செய்மி னெனுமுரையே யெடுத்தவர்கட் கறைந்தான் மன்னே. (எகூ)

மன்னவனும் பரதனுரை மந்திரிகள் கொண்டுதொழில் வலாளர்க் கூட்டித், துன்னியசீ ரயோத்திமுதல் வினைகளையுங் கங்கைநதித் துறையின் காறு, மன்னுதிட ரவன்முதல மாற்றுவித்து வழிச்செல்வோர் மனத்திற் கேற்கு, நன்னெறிய் தெனவுவந்து செலுமாறு செய்வித்தார் நடவை யம்மா. (அ0)

தந்தைபா ரிறந்ததுவுந் தமையன்வன மேகியதுந் தானே யெண்ணிச், சிந்தையார் தருதுயரத் துடன்பரத னுறமற்றைத் தினத்திற் காலே, யிந்தையார் தரமுடித்தா னிகர்வசிட்டன் சுமந்திரனை யேவி யிங்கு, முந்தையார் தருசபைக்கு வரவழைத்தான் பரதன் முதன் முதன்மை யோரை. (அக)

அரசினையேற் றளித்தியென மொழிவசிட்ட னுரைக்கிணங்காதைய வின்னே, விரைசுமலர்த் தருவனத்து மேவியிரா மனையழைத்து விரைவே னென்ன, வுரைசெய்தந்த முனியினொடு கௌசலையர் தியரமைச்ச ருரி லுள்ளார், முரசொலிசெய் சேனையுந்தன் னுடன் போதப் பரதனெறி முறையிற் சென்ருன். (அஉ)

மைம்முகிலுங் காயாவு மரகதமு மயிலெருத்து மானுஞ் சோதி, மெய்ம்மதலை தனைக்காண்பே மெனுமாசை யுடையோராய் மேவுந் தாயர், தம்முடனும் பிறருடனுந் தனையகலாச் சேனையொடுந் தளஞ் சங்கஞ், சும்மைபெற வலையொதுக்குஞ் சுரநதிசேர்ந் தனன்பரதன் றுணைவின் மாதோ. (அங)

அங்கணடை பரதனிலை குகனறியா திராமனிடத் தமையு மன்பாற், சங்கைபின்னே னிடத்துளனு யைந்நூறு பஃறியொடு தலைவர் தம்மைக், கங்கைகங்கை யெனுமொழியாற் கடியவினை களைகிற்குங் கங்கா தீரந், தங்குறவைத் தவற்கண்டா ஞதித்தங் கொள்கவெனத் தான்வேண் டுற்ருன். (அச)

பம்புபொழில் சூழ்சிருங்கி பேரநகர்க் கிறைகுகனப் பரத னென்னு, நம்பியைநீ வனம்போந்த நிபமென்னே யெனவவனே நன்குஃ தோத, வெம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்ன வெண்ணி நிற்போற், றம்பியுளாற் கென்வருத்தம் வருந்தலீ யவற்கென்னத் தான்பே சுற்றான். (அரு)

இவ்வயினே யிராமபிரா னிரவுதுயில் சீதையுட னியைந்தான் பூவிற், கவ்வையொழிந் திலனதனைக் கண்டிலேயா னென்றுகுகன் கரைந்து பின்னுஞ், செவ்வியுறப் புலரியினி லிருவோருஞ் சடைதரித்துச் சென்றெவ் வாறு, மொவ்வில்சுர நதிதாண்டி வனஞ்சென்றா ரெனப்பரதற் குரைத்தான் மன்னோ. (அசு)

தன்னுரைகேட் டகம்வருந்தும் பரதனுக்குக் குகன்றசரதிதண் ணீரே, மன்னுமுணா வாக்கொண்டு துயின்றனனிங் குதியடியின் மாதொ டென்று, முன்னையுறு தவபலத்தா லடிசேனு மிலக்குவனுமுற்று கங்கு, லின்மையுறும் வரைதுயிலா * திருங்கடிகொண் டனமென்று மிசைத்தான் மன்னோ. (அஎ)

மாதிரத்தி னிடங்கொண்டு வளர்ந்தெழுந்த மணிப்புன்கு மரத்தின் கீழ்சார், சோதிகெழு மிரவிகுலத் தோன்றறுயில் பசும்புல்லிற் றுணைவி சீதை, சீதநறுந் தளிர்மேனி யணிபணியின் பொற்பொடியுந் திகழ்வெண் பட்டி, னேதமிலா நூல்பலவும் பரதன்பார்த் துள்ளுருகி யிரங்குற் றானல், (அஅ)

பின்பிறந்தே யுலகினெறி பிறழாம லொழுகுநரைப் பேசில் யார்க்கு, முன்பிறந்தா னாகியுயர் பரதன்சூழ் சேனையுடன் முதுநீர்க் கங்கைத், தென்பிறங்கு கரைகடந்து தவம்பிறங்கு மேனியொளி திகந்த நாறுந், துன்பிறங்கு திருமனத்துப் பரத்துவமா முனிவனுறை சூழல் புக்கான். (அகூ)

தவத்துநிறை பரத்துவனைத் தரிசித்துப் பரதனந்தத் தவனுளுள்ளத், துவப்பொடுசெய் யாதித்தம் பெற்றடைந்த திறமவனுக் கோதக் கேட்டுப், பவப்பிணிவே றறுத்தவவன் களித்திரகு பதிசித்ரகூட வெற்பி, னிவப்பொடுமுறை தருகின்றா னீநாளைச் சேறியென நிகழ்த்தி னானல். (௯௦)

---

* இடையூறுவாராமற் பெருங்காவல் செய்தோம்.

ஐந்தவித்த முனிவர்பிரான் பரத்துவன்றன் புரிதவத்தி னருமை யானே, யிந்திரனே முதலிமையோர்க் கொண்டிரவி மருமான்பின் னெய்தி யாங்கண், வந்துதன தாபதஞ்சூழ் சேனையுளம் விரும்பிய வா மாறு தார்ந்து, சிந்தைகளித் திடவென்றுங் கிடைக்கரிய வுணவ ளித்துச் சிறப்பித் தானால். (௬௧)

கோசலையே முதலினரைப் பரத்துவனோர்ந் திடப்பரதன் கூறி யந்தத், தேசுதிகழ் முனிவரன்பால் விடைகொளா வவணின் றுந் தீர்ந்து சோதி, வீசுமினன் றருபுதல்வி காளிந்தி நதிகடந்து மேவிப் பாங்கர், மூசுமலர்த் தருவனத்தி னிடைப்புகுந்தா னல்லறத் தின் மூர்த்தி போல்வான். (௬௨)

சித்திரகூ டத்தருகு சேனைதனைச் சூழ்தரச்செல் பரதன் றம்பி சத்துருக்கன் றனைநோக்கி யிராமனுறை யிடநேடிச் சாற்று கென்ன வொத்திருக்கு முளத்தவனவ் வழியெங்கு நாடியே யுயர்தூ மத்தா லித்தலத்த தெனவோதக் கேட்டுவரு தினியையங்க ணிருத்தி னானால். (௬௩)

காலையிற்செய் கடன்முடித்துக் காகுத்த னாடோறுந்தன் கற் பின் மிக்க, சீலமுறு மனையவட்குச் சித்திரகூ டத்தினெழி றிருந்தக் காட்டி, யேலமனக் கிசையிடனு மில்லவளும் பின்னோனு மேய்ந்த தெண்ணிக், கோலமிகு மயோத்திநக ருறைவதினும் விருப்பதிகங் கொண்டு வாழ்ந்தான். (௬௪)

செங்கதிரோன் குலக்குமரன் செப்பினன்சீ தைக்கிந்தச் சித்ர கூடத், துங்கமுறும் பருப்பதஞ்சீ ரயோத்திநக ரிவ்வனத்திற் றுன் ணி வாழுஞ், சங்கையறு முயிர்த்தொகைகள் சார்நமது பதியினர்மந் தாகி னிப்பேர்ப், புங்கமுறு நதிசரயு வெனநினைதி யென்றுமகிழ் பூத்து மன்னும். (௬௫)

செந்திருவின் மணவாளன் வனத்துவிலங் கினம்வெருண்டு திரிதனோக்கி, மைந்தமரும் புயத்திளையோ யிதற்குநிப மறிதியென வழங்க வன்னா, னந்திலனீ கினிசூழும் பரதற்கண் டிராமனையே யடு தற் கின்னோன், வந்தனனென் றுளத்தெண்ணி யானடுவ னிவனை யென வாய்ந்தான் சீற்றம். (௬௬)

மிக்கசினத் திலக்குவனைக் கோதண்டத் திருக்கரத்து விமல ஞேக்கித், தொக்கவுயர் குணமுடையன் சீலமுளன் பரதன்மனத் தூய்மை யோடு, மிக்கிரிக்க ணின்றுநமை யழைத்தேக வேயிவண் வந் தியைதல் வேண்டுந், தக்கவவ னிடைச்சினநீ தவிர்ந்திடுதி யெ னப்பலவாச் சாற்றி ஞனல். (கூஎ)

தவ்விரதத் தாசரதி தாபதந்தே டியபரதன் ருமத் தூம, மிவ ர்தரக்கண் டாவயினே யுடன்வந்தார் தமையிருத்தி யினையா ஞேடு நவிறருபே ரன்புடையன் வேட்டரசாங் குகனெனுமா நண்பற் கொ ண்டு, பவமழிசெய் திருநாமன் றேவியுடன் மேவுதவப் பள்ளி சார்ந் தான். (கூஅ)

எண்ணியவா றியற்றவல பிதாமகன்சேய் குலக்குரவன் யாவு மோர்ந்த, புண்ணியனும் வசிட்டனைநீ யெம்மோயர் தமையழைத்து ப் போது கென்று, நண்ணியசத் துருக்கனொடு சுமந்திரனை யுடன்கூ ட்டி நாகரிம்பர், பண்ணியமா தவப்பலனு வவதரித்த விராமபி ரான் பக்கஞ் சார்ந்தான். (கூகூ)

வற்கலையை யரைக்கசைத்து வபங்கியொளிர் திருமேனி மாசு பூப்ப, வற்கிருளைத் தருங்குஞ்சி சடையாக்கித் தன்னடியை யடை ந்து போற்றி, யொற்கமுற வுறும்பரதன் வரவைவினு வுறல்போல வுலகு மோம்பு, நற்றிறனென் ருெழியாம லவனுணரத் தாசரதி நவி ன்ருன் மன்னே. (க00)

திருந்துமருட் கடலனைய சீராமன் றனைப்பரதன் செவ்வே நோக்கி, யருந்துணைநீ கானகத்துங் கேகயத்தி லெளியேனு மமர்ந் தே மாகப், பெருந்தகையா நின்சனகன் வானடைந்தான் யான்செய் கடன் பேணி னேனுற், பொருந்தவனை யே நினைந்து பொன்றுமவற் குரியனநீ புரிதி யென்ருன். (க0க)

தனையளித்த தயரதற்குச் சபிண்டிவரை தாசரதி சாரு நூலி ற், புனையுமுறைப் படிமந்தா கினிக்கரையிற் சடங்கனைத்தும் புரிந்து தம்பி, வனையுமெழிற் புல்லகத்து வந்துபெருங் குரல்விட்டே வருந் தக் கேளா, வினையுமுளத் துடனன்னு னிடத்துற்று ரயோத்திநக ரிருந்தங் குற்ருர். (க0௨)

அந்தமிலா மறையனைத்து மறிந்தகுலக் குரவனுட னணைந்த தாயர், தந்தளிரே புரையுமலர்த் தாள்பணிந்து வசிட்டனையுந் தாழ்ந்து சார்ந்த, மந்திரியே முதலினரை வருகைவினு வினன்சீதை மணாளன் யாரு, முந்தைமுறை யொருசிறிதும் வழுவாம லிருந்தனர்கண் முதிர்ந்த வன்பார். (௧0௩)

அக்காலத் திராமபிரா னயோத்திநக ருறைபவரோ டைய நீதா, னிக்கானத் தடைந்ததெதற் கெனப்பரத னின்புவிநீ யெய்தியாள்க, மிக்கானே யெனவுரைப்ப விராகவனென் றந்தைமொழி விலக்கிப் போந்து, புக்காளற் குரியனலேன் யான்விரும்பே னெனமறுத்துப் புகன்றான் மன்னோ. (௧0௪)

அன்னமொழி செவிக்கொண்டு பரதனிரா மனைநீயே யரசதாள, வென்னையையு மிசைவித்தேன் கொண்டிடுதி யெனவிரப்ப விசையா னாகி, மன்னியதத் துவப்பொருளை யறிவுறுத்து நெறிபரதன் மனத்திற் கொள்ள, நன்னரெடுத் துரைத்துமகி நாளுள றகாதென்ன நவின்றான் மூன்னோன். (௧0௫)

மீட்டுமுறு பேரன்பாற் பரதனெழி விராமனைநீ வெய்ய வின்ன, காட்டிலுற லொரீஇநினது காசினிகைக் கொளவருதி கரியோயென்ன, வேட்டலுறு வசிட்டன்முத லிருடியருந் தவ்வையரு மிக்க சூழ்ச்சி, நாட்டுநரு நகரினரு மயோத்திவரு கெனவவற்கு நவின்றார் மன்னோ. (௧0௬)

பகலவன்றன் குலத்துதித்துப் பாரனைத்து மளித்திடுநம் பார்த்தி பேசன், றகவினர்கள் கொளாக்காமப் பிணிப்புண்டு கானினக்குத் தந்தா னென்று, மிகவெறுப்பப் பரதனதுங் கஃதன்று கைகைமுனம் வேண்டத் தன்னாற், புகலும்வரம் பொய்யாமற் காக்கவெனத் தாசரதி புகன்றா னன்றே. (௧0௭)

முன்னவனு ருரைகேட்ட பரதனதற் கெதிர்மொழிகண் மொழிய வாற்று, மன்னுநிலை யினையறிந்து சாபால முனிபிதத்தை மனக்கொண் டாசான், பன்னியசார் வாகமதத் துறையதனை யிராமனுக்குப் பரக்கக் கூறி, யிந்நிலநிற் கேபுரிய தரசினையேற் றாள்கவென விசைத்திட் டானுல். (௧0௮)

புலக்கெதிரா தெதுவேனும் போற்றலுரித் தன்றதனைப் புறம்பே யாக்கி, நலத்தபுலப் படுமதையே கொள்கவெனச் சாபாலி நவின்ற வாற்றை, விலக்கியுயர் பரலோக மாதியுள மேவற்பாற் றறமே யென்று, கலக்கமற வெடுத்தோதி வைதிகநேர் கிறுவினனஞ் சனகிகாந்தன். (௧0௯)

கற்பினருந் ததிகொழுனன் சாபாலி யுளக்கிடக்கை கருதி னன்றே, யற்பினவன் பாற்சினமே லாதித்தன் வழித்தோன்று லமைதியென்று, முற்படுநும் மனுகுலத்தின் முதன்மகனே முடிசூடன் முறைமை யானே, பொற்புறுமிந் நிலவலய நீயாளக் கடவதெனப் புகன்றான் மாதோ. (௧௧0)

ஆரியனு மென்னுரைநீ கொளல்வேண்டு மெனவசிட்ட னறையக் கேட்டுச், சீரியவென் பிதாமுன்னர் மொழிந்ததனுன் மேலதுவே யென்று செப்பிக், காரியலுந் திருமேனிக் காகுத்தன் * றண்டிலத்திற் கதிவே றின்றி, நேரியவீழ் பரதன்மன மமைவுபெறு மாபலசொ னிகழ்த்தி னுனல். (௧௧௧)

வளம்பயிலு மயோத்திநகர் வரற்கொவ்வா விராமன்பாற் பரதன் வானே, ருளங்களிக்கப் பாதுகம்பெற் றுறுமகவை பன்னான்கினிறுதி நாளிற், கிளர்ந்தவண நகர்க்கணடை கின்றிலேயேல் யானெரியைக் கிளர மூட்டித், தளர்ந்திலனு யதிற்குளிப்ப லெனமொழிந்துவிடையவன்பாற் றன்பெற் றுனல். (௧௧௨)

தாழ்ந்தவரை மேலேற்றும் பாதுகங்க டலையேற்றித் தான்றே ரேறிச், சூழ்ந்துவரச் சேனையொடு புரோகிதர்க ளம்மனையர் சூழ்ச்சி வல்லோர், போழ்ந்தவினைப் பரத்துவனைப் போற்றியெதிர் கங்கைபுறம் போக்கி நோக்கி, வாழ்ந்துறுமக் குகற்கலந்து பரதனெழி லயோத்திவள நகர்க்கு வந்தான். (௧௧௩)

பண்ணவர்க்கும் புகலிடமாய்ப் பாரில்விளங் கயோத்தியினைப் பார்த்துப் பார்த்தெம், மண்ணலெழி லிராமனுட னிப்பதியி னொளிநீங்கிற் றந்தோ வென்றே, நண்ணியிவ ணவனிதனைத் தேசுடைய நகராக்கு நன்னா ளென்ன, வெண்ணியுளத் தொருவாத துயரினனாய்ப் பரதனவ ணிருந்தா னம்மா. (௧௧௪)

---

* தண்டிலம் - தருப்பை பரப்பிய சமதலம்.

தாயர்தமை யயோத்திநகர் தனிலிருத்திப் பாதுகங்கடலைமேற் றாங்கி, யாய்வினைஞர் புரோகிதர்க ளனீகினிசூழ் வரநந்திப் பதியை யண்மி, மாய்வினைக ளொழித்தருள்செய் மரவடிகட் கபிடேக மன்னச் செய்தங், கேயுமவற் றாலுலகை யாள்வித்துப் பரதனமர்ந் திருந்தா னந்நாள். (௧௧௫)

சித்திரகூ டத்திலம ரிராமனையோர் முனித்தலைவன் சென்று நோக்கி, யித்தலத்தி லிராக்கதரா லெங்கட்குத் தீங்குபல வெய்தா நின்ற, வத்தவினி வேறிடஞ்சென் றமர்கின்றே மெனவுரைத்தவ் வகத்தை நீத்து, வித்தமுறு மாதவர்பல் லோருடனே ராச்சிரம மேவி னானல். (௧௧௬)

செங்கமலத் திருநயனத் திராகவன்றன் னாச்சிரமஞ் செவ்வித்தன்றென், றங்குறுபல் காரணத்தா லறிந்ததைவிட் டிளையானு மணங்கும் போதப், புங்கமுறு மத்திரிவாழ் தாபதம்புக் காதித்தம் பொற்பக் கொண்டா, னங்கையெழில் வைதேகி யநசூயை புரிமுகமன் கேற் றுற்றாள். (௧௧௭)

அத்திரிமா முனிமனைவி யநசூயை கற்பினெறி யனைத்து முள்ளத், தொத்துறநன் கெடுத்துரைத்துப் பலபணிகொண் டலங்கரிக்க வொப்பில் சீதை, சித்தமிக வுவந்தனளாய்த் தவன்மனைக்கு மிதிலையின்முற் செவ்வ னேய்ந்தே, யெத்தலமும் வியக்குறுதன் சுயம்வரத்தின் கதைமுற்று மிசைத்தா ளாமால். (௧௧௮)

அன்றிரவவ் வருந்தவத்தோ னினிதுறைபு முறையுளிடை யமர்ந்து கீழ்பா, லென்றுதிக்கு முன்னெழுந்து காலையிற்செய் கடன்கழித்தே யிளையா னோடுந், தன்றுணைவி சனகியொடு மருந்தவத்தோர் காட்டுநெறி தன்னிற் போந்தே, வென்றிதரும் விற்றடக்கைத் தாசரதி தண்டகமா வனத்தை மேயான். (௧௧௯)

அயோத்தியா காண்டம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் - ௨௦௬.

# ௩.- ஆரணிய காண்டம்.

பிறங்குழல குடன்வானுஞ் செய்தவமே யிவ்வுருவாய்ப் பெய
ர்ந்து மிக்க, மறந்திகழ்விற் றடக்கைகொடு வந்ததெனுந் தாசரதி
மனைவி நாளு, முறும்பணிசெய் தம்பியுடன் றண்டகத்தி லுறுவருறு
முறையு ளுற்றே, யறந்திறம்பா வவர்கடனக் காற்றதிதி பூசைமகிழ்
ந் தன்போ டேற்றான். (க)

தண்டகமூ வருஞ்செல்லச் சானகியை விராதனெனுந் தறுக
ணான்கைக், கொண்டிரகு பதிகொண்ட வேடத்தைப் பழித்தார்போர்
கூறு கென்னப், புண்டரிக நயனத்தா னவற்குவிடை புகன்றிளை
யோய் சீதை தன்னை, கண்டனையே யெனவரக்கன் றனைக்கோற
லெளிதென்று கழறி னானால். (உ)

வினவல்பினு மொழியாத விராதனுக்கு விடையளிக்க விராம
னன்னான், வனசனரு ளாற்பெற்றேன் மாயாத வரமென்ன வல்லை
ழம்பா, லனகனலைத் திடவெருவிச் சீதையைவிட் டவன்சூல மங்கை
யேந்தி, வினைசெயிரு வரையுமெடுத் தேகநெறி கழியுமென மேவி
னார்தோள். (௩)

வல்லரக்கன் புயத்திருந்தார் சீதைவனத் திடைத்தமியள் வரு
ந்த னோக்கிக், கல்லரக்கும் விராதன்றோ ளிரண்டினையும் வாள்கொ
ண்டு கழிக்க வன்னான், சொல்லலக்க ணிலாஞானந் தொடர்வுற்று
முற்பவமுஞ் சொற்று வாழ்த்திச், செல்லுமினீர் சரபங்கன் றாபதத்
திற் கெனப்புகன்று சென்றான் சொர்க்கம். (௪)

சரபங்க மதற்கியற்றுஞ் சரபங்க முனிவனுக்குத் தாதா சொ
ல்லைத், தரவந்த விந்திரனைப் புறநோக்கி யிராமன்முனி சூழல் சாரப்,
பரபந்த மொழிப்பானைத் தவன்பரவிச் சுதீக்கணன்றா பதமுங் காட்
டிச், சிரபந்தக் கரத்தொடவன் முனமெரியிற் புகுந்தழியாத் திரு
நா டுற்றான். (௫)

முற்றுமுணர் சரபங்க முனியுறையு ளடுத்துறையு முனிவர்
யாருஞ், செற்றமுறு மிராக்கதர்தீங் கினித்தாங்கத் திறனிலஞ்சீ
ராம நின்னைப், பற்றியுளேஞ் சரணெனவப் பகைதவிர்க்க வெனவே
ண்டப் பரிவொ டுள்ளத், துற்றகவ லொழிமின்க ளவரையழித் து
மையளிப்ப லுறுதி யென்றான். (௬)

தாசரதி சுதீக்கணன்வாழ் தவப்பள்ளி சென்றந்தத் தவனா
லாற்றும், பூசனைகொண் டெழுந்தருள விலங்கினங்கள் புரிதுன்பம்
புகல வன்னா, னேசமுடன் கேட்டிரகு பதியவற்றி னுயிர்நீப்ப
னீவி ரிங்ஙன், வாசமுறற் கிடரிலையென் றாவயினே யிரவகல வசி
த்தான் மன்னோ. (௭)

காலையெழுந் திராமன்மனை கொடுத்தகணை தனுவாதி கைக்
கொண் டென்று, மேலவுள பணியொழியா தியற்றுமிளை யான்ச
னகி யிவர்பின் போதச், சாலவுணர் சுதீக்கணனுந் தவமுனிபால் வி
டைபெற்றத் தலத்து நீங்கி, ஞாலமிசை யுடலுமிகை யெனும்பெரி
ரியர் மேவிடங்க ணாடிச் சென்றான். (௮)

துன்பியற்று மிராக்கதரைக் கொல்வமென விருடியர்க்குச்
சொற்ற மாற்ற, முன்பனிரா கவனொழியான் றருமமித னாலழியு
மோவென் னச்சந், தன்பொருவில் மனநடுக்க நாயகன்பால் மிகுமன்
பாற் சனகி நிற்கிங், கென்பெரும விடரிழையா வரக்கரைக்கொன்
றிடல்கூடா தெனவேண் டுற்றாள். (௯)

சானகிநீகேட் டிடுதிதுயர் தாங்கினரை யோம்பல்குல தருமமெ
ங்கட், கானவென தடியவர்கட் காகாதா ரெனக்காகா ரதனி னானு
மீனமிலா விருடியர்செய் பூசனையா மகஞ்சிதைக்கு மிதனி னானு
நானவின்ற படியரக்கர் தமைவதைப்ப னெனவவட்கு நம்பி சொற்
றான். (௧௦)

அறந்திறம்பா வந்தணர்க ளாச்சிரமத் திற்பலநாள் கழித்தெம்
மண்ணா, றுறந்துயர்ந்த சுதீக்கணன்சொன் னெறிக்கொண்டு குறுமு
னிவன் றுணைவன் பாழி, யுறைந்தொரிரா வெழுந்துமறு தினத்து
தயத் தகத்தியன்வா ழுறையுள் வந்து, திறம்பொருவி லிலக்குவனை
த் தன்வரவை முனிக்குரைக்கச் செலமு னுய்த்தான். (௧௧)

யகராந்தத் தெட்டெழுத்தி னியைபொருளா மிராகவன்வந்
தெய்த வானைச், சிகராந்தத் தனக்குமெழின் மலையமுனி யாதித்
யஞ் செய்து வேத, நிகராந்த னுழையுள்ள விண்டுதனு தூணீர நிரு
தர் மேவு, நகராந்தம் புரிகின்ற சாயகமுங் கொள்கவென நன்கீந்
தானால். (௧௨)

புலத்தியன்மா மகனடைந்தார் தமைப்புரக்கு மிராகவகேள் புனலோடெல்லா, நலத்துநிறை தருவிருந்த கங்கையின்பாற் பஞ்சவடி நண்ணி யந்தத், தலத்துறைத னினக்குரிய தெனவுரைப்பத் தம்பியொடுஞ் சனகி யோடுஞ், செலத்தருக விடையென்றவ் விடைநோக்கித் தாசரதி சென்றான் மன்னோ. (கங)

சார்நெறியி லிரகுபதி தனையுவண பதியாகுஞ் சடாயு கூடியோர்வுறுமா றையமுன்யான் வருவமிச மிற்றென்ன வுரைத்து நிற்றந், தேர்பெறவிவ் வுலகாண்ட தயரதனெற் குயிர்த்தோழ னெனவுங் கூற, வார்தரக்கேட் டுடங்குவரு மவனோடெழிற் பஞ்சவடி யடைந்தான் மாதோ. (கச)

முண்டகமா முகமலர்ந்து திரைக்கரத்தா லடிவணங்கி முகமன் கூறு, மண்டலம்போற் றிடுங்கோதா வரிப்பாங்க ருறைபஞ்ச வடியாங் காவி, லெண்டருதன் றுணையியற்று மாச்சிரமத் திராமபிரானினிது போந்து, பண்டருசொற் சானகியோ டிளையானும் பணிபுரியப் பரிவொ டுற்றான். (கரு)

காலையிலோர் நாள்விருத்த கங்கைபடி வான்செலுங்கா குத்தற்கைய, சாலவுயர் குணன்பரதன் மிகக்கொடியன் கைகேயெனச் சாற்றத் தம்பி, யேலுமவன் றனைப்புகழ்ந்தி தாயினைத்து ற்றலாகா தென்று மென்றே, சீலமுறு மவற்காண்பே மெனமொழிந்து நீராடிச் சென்றான் சாலை. (கசு)

என்றிலங்கா தெழுந்தபொழி லென்றென்றி ஞெளிசெய்தம ரிராமன் பாலே, நின்றிடவச் சூர்ப்பனகை நீயாரை யெனவனைத்து நிகழ்த்தி யண்ண, றன்றிறனுஞ் சொலக்கேட்டு மடமாது தாசரதி தன்னை யைய, வொன்றிடநிற் குரியாளா யடியேனைக் கொள்கவென வுரைத்து நின்றாள். (கஎ)

இல்லுடைய னியானினையா னில்லாளில் லானவன்பா லெய்தென்னச், சொல்லிடமுன் பின்னடிமை யாமெனக்குத் துணைவியென லேநிற் கென்ன, வல்லவெனை நீக்கநிபஞ் சீதையவட் கொல்வனென வரக்கி வவ்வச், செல்லவிளை யானறிந்து செவிமூக்கைக் குறைக்கவவள் கரன்பாற் சென்றாள். (கஅ)

புக்காளைக் கரனுக்கி நிகழ்ந்தவெலா மொழிபாது புகலக் கேட்டு, மிக்காருஞ் சினத்தினனா யீரெழுவ ரிராக்கதரை மேவி நீவி ரிக்கானத் துறுமனித ரிருவரையும் வென்றணைமி னென்ன வேவ வக்கால னனையாரை யடலரக்கி மானவர்பா லடைவித் தாளால். ()

தலைமைகொடு மலையவரு நிருதர்பதி னால்வரெதிர் தாக்க நோக்கிச், சிலைமைகொடு தாசரதி சீறரவ நிகர்சரங்க டெரிந்துய்த் தன்னார், நிலைமைகெடுத் துயிருண்டான் சூர்ப்பநகை கண்டுபய நிரம்பக் கொண்டே, யலையுமனத் தினள்பின்னுங் கரனிடத்தே விரைந்தோடி யரற்றி னாளால். (௨௰)

பாலுற்ற சூர்ப்பனகை பரிவினைப்பார்த் தெய்தியதென் பகர்தி யென்றே, யேலுற்ற கரன்வினவ நீவிடுத்த படைத்தலைவ ரீரைந் தோடு, நாலுற்ற வெண்ணினரு நந்துற்றா ரிராகவன்கை நண்ணும் வில்லின், கோலுற்றுக் கோலியுயிர் கொண்டிடவென் றுள்ளபடி கூறி னாளால். (௨௧)

கேட்டகரன் மிகவெகுண்டே யீரேழா யிரமரக்கர் கெழுமு வீர, வாட்டடக்கை யுடையார்களிரதமிப மிவுளியுயர் வலிய காலா ளோட்டியுயிர் வாங்குதிறற் படைக்கலங்க ளிவ்வெல்லா மொருங்கு சேரக், கூட்டிமினிர் போர்க்கோலங் கொண்டுமகிழ் கொண்டுவழிக் கொண்டா னன்றே. (௨௨)

சேனைபுறஞ் சூழவரு மடற்கரனுக் கறிகுறியாய்த் தெரிய வாங்கே, வானிடையும் புவியிடையு மன்னுதன துடலிடத்து மாறி மாறி, யூனமுறு மபசகுனம் பலநிகழ மதச்செருக்கி னோரா னாகி மேனிலையர் வாழ்த்திரகு பதிமுன்ன ரூழ்தள்ள விரைந்து போர்ந் தான். (௨௩)

தீயவினை யரக்கருக்குத் தீதாகித் தனக்குநலன் சேர்வ தாகி யேயவரு நிமித்தங்கண் டிளையானே சீதைக்கா வென்ன வோதி, யாயவரு திறல்வீர கவசமும்பூண் டிராமனிக லமரை நோக்க மாயவினை புரியரக்கர் சேனைதனக் கணித்தாகி வந்து சூழ்ந்த. (௨௪)

அன்னபொழு தெதிர்ந்தவரு மடலரக்கர் தங்குழுவு மயோத்தி வந்த, மன்னன்மக னிராமனுமே புரிந்தசமர் யாருரைக்க வல்லார்

வன்மை, துன்னுகொடு மரம்வளைத்துக் காந்தருவ வத்திரத்தைத் துரந்துமேன்மே, லின்னலுற வதைத்தரக்கர் தலைமலைகள் பலகுவித்தா னிகலி ராமன். (உரு)

கரனோடு திரிசிரனை யொழியவெதிர் வந்துகளங் கலந்து ளாரில், வரனோடுந் தூடணனை யுயிருண்டு சேனைகளின் றலைமை வாய்ந்தா, ருரனோடப் பன்னுன்கா பிரவரையு மம்பென்னு முயர்வெங் கூற்றாற், சிரனோடத் துணித்தாவி கழித்திட்டா னிராகவனுந் திறல்கொள் கோமான். (உசா)

இராகவனோ டெதிர்கரனை விலக்கியான் புரிவலிந்த வெழிற் போரென்று, தராதலமே முதனடுங்கத் திரிசிரன்வெவ் விடியெனனத் தழங்கி யேற்றுச், சராசனமா மழைபொழியத் தாசரதி யவைமாற்றித் தன்மெய் யம்பா, லராவினைநே ரவன்றலைக ளொருமூன்று மறுத்திட்டா னமர ருய்ய. (உஎ)

கொம்பிரண்டும் பறியுண்ட கொடுங்களிறு நிகர்கரனுங் கொற்றமேய, நம்பியிரா கவன்கவசஞ் சிலைபிவைக ணணியறுமா நற்றேர் நின்று, மம்புபல பொழிந்திட்டா னளரிதன் வைணவவில் லதுகொண் டன்னான், வெம்புபரி பாகிரதம் வில்லறுத்தன் னவற்சவட்டி மிகவின் புற்றான். (உஅ)

பின்னுமொரு கதையேந்திப பெருஞ்சினங்கொண் டெதிர்ந்து வரு கரனை நோக்கி, மன்னுகொடும் பவம்பலனை யுடனளிக்கு மாதலினீ மாள றிண்ண, மென்னவுரைத் திடுமிரகு பதியையவன் பலநிந்தை யியம்பித் தன்கை, துன்னுகதை விடுக்கவதை மானவனத் திரம்பொழிந்து துகள்செய் தான்றல். (உகூ)

யாரேனு நோக்கரிய வமரிலிடம் பெறவேண்டி யயன்சேய் மைந்த, னேரேறப் பின்னிரண்டு மூன்றடிபோ யகத்தியனீ நிகரி லம்பால், வாரேறு கரனகலங் கழித்துற்று னமரர்மலர் மாரி பெய்தார், சீரேறு திருமேனி மகிழ்வொடணைத் துறுதாபந் தீர்த்தாள் சீதை. (ங0)

அக்காலத் திலங்கையர்கோன் கரன்முதலோ ரிராகவனு லழிதல் கேட்டு, மிக்கான தீங்கவற்குச் சீதையையான் வவ்வியின்னே

விளைப்ப னென்று, புக்கேகி மாரீச துணைநீயே யிதற்கென்னப் புகலவன்னு, னக்கானு யுதுபுரியி னுசமே நினக்கென்று நகர்க்க னுய்த்தான். (௫௧)

கன்னலொரு மூன்றிடையே கரன்முதலோர் தமையழித்த காளை வீர, மென்னவோ வெனவெருவிச் சூர்ப்பநகி யிலங்கைநக ரெய்தி யாருந், தன்னைநே ரிலராக வரசிருக்கு மிராவணனைத் தனக்கங் குற்ற, வின்னனே யெடுத்துரைத்து முகங்காட்டிக் கண்டனளா லெவரு முட்க. (௫௨)

தண்டகமாம் பெருவனத்துச் சனத்தானந் தனில்வதிந்த தமர்க டேவ, கண்டகனுங் கரன்முதலோர் கழிந்தசெயல் கண்டுமகங் கனலர் தொன்றும், விண்டிலனு யிருந்தவிரா வணனுரை மிகவெகுண்டு வெய்ய சொற்கள், கொண்டிளையாள் பலபலவா நிந்தித்தா ளவனுள்ளங் கொள்ளு மாறே. (௫௩)

இலங்கையர்கோ னிராமனெழில் வலிமுதல யாவுமுறை யென்று கேட்கக், கலங்கியசூர்ப் பநகியிரா கவனிளையான் வரலாறு கரவா தோதி, நலங்கிளர்மூ வுலகமுஞ்செய் தவப்பயனுஞ் சீதையெழி னலத்தை யன்னான், புலங்கொளுமா றினிதுரைத்தாங் கவளையவன் வவ்வும்வணம் புகட்டி னளால். (௫௪)

தசமுகன்சந் தனமிவர்ந்து சானகியை யபகரிப்பான் றன்னுளோர்ந்து, திசையுலவு கடல்வடபாற் சுபத்திரமாஞ் சீர்வடத்தைத் தீர்ந்து போகி, யசைவிலெழி லாச்சிரமத் தருந்தவன்போ லமர்மாரீ சன்பா லண்ண, விசையுமவ னிராவணனை யடுத்திங்ங னெய்தியதென் னென்று கேட்டான். (௫௫)

ஐயிருமா முடிபரித்தான் சனத்தானத் தமர்தமர்க ளழிந்த வெல்லா, மெய்யுறமா ரீசனுக்கு விளம்பியுனைத் துணையாக விரும்பி யிங்ஙன், செய்யநினைத் துளேனைய சீதாப காரமது திறம்பா வண்ணம், வெய்யவிசித் திரமானி னுருவாகி யுதவுகென வேண்டி னனே. (௫௬)

தனைவேண்டு மிராவணற்கு மாரீசன் றுசரதி தனிவில் லாண்மை, யினையாண்டு மறிந்துள்ளே னவற்கீடிவ் வுலகிலிலை யிசைகொ

ளன்னுன், மனையான்ற வருந்தெய்வக் கற்பினளை வவ்வுவான் மனத்தி னெண்ண, வினையான்ற குலத்தோடு முடிவிக்கு மெனவிதமே நிரம்பச் சொற்ருன். (௩எ)

காதிசுதன் புரிமகத்துக் கணிப்பிலினத் துடனழிக்கக் கலந்தவென்னைக், கோதிலது காக்குமிளம் பருவத்த னிராகவனே கொல்லவோடி, மேதினியி லுயிர்பிழைத்தே னெதிர்ந்தபடை வீந்தனவவ் வீர ருவாற், கேதமது செயநினைக்கி ருசமே நினக்கென்ன வியம்பும் பின்னும். (௩அ)

தவத்தானே யுலகாளுந் தசக்கிரிவ மானுருநான் ருங்கி யிப்போ, தெவற்ருனும் வெலற்கரிய விருவரிராக் கதருடனே யிராமன் பாற்போ, யவத்தான விடர்புரிந்தே னவன்கணையா லவரிறக்க வஞ்சி யானிவ், வுவப்பான முனியுருக்கொண் டுறைகின்றே னுவன் பகைநீ யொழிதி யென்ருன். (௩௯)

இவ்வணமா ரீசன்மொழி யிதமனைத்துஞ் செவிக்கொள்ளா விராவ ணேசன், வெவ்வணமா ருரைபலவால் வெறுத்தோதி மற்றுந் தன் வீரங் கூறிச், செவ்வணம்யான் சொன்முறையே சிதையாது புரிகவெனச் சீறி யந்த, மெய்வனமார் சீதையினை யபகரித்தற் குதவுகென வெய்து விண்டான். (௪௦)

ஊழ்வலியாற் சீதையினை யபகரிக்க வுளம்வலித்த வுவற்கு மாமன், ருழ்வுறுசா வெனக்குறுமென் றகம்வருந்தேன் றமருடனீ சாதி யென்று, மாழ்குறுவேன் மொழியிதத்தைக் கெடுபோதான் மதிக்கிலைநீ மாய வுற்ருர், வாழ்வுறுமின் சொற்பொருளை மனக்கொள்ளாரெனப்பலவா வழங்கி ருனே. (௪௧)

வன்மாய மாரீச னிராவணனுன் மாய்தலினு மான வன்கைவின்மாய்தன் மாண்டதென விசைந்தரக்க னெடுதேரில் விரைந்திராமன், றன்மான வாச்சிரமத் தருகொருபொன் மானுய்ச்சஞ் சரித்தா னுக, மின்மானு மருங்குலணங் கெழிற்சீதை மலர்கொய்வாள் வியந்து கண்டாள். (௪௨)

உழைகண்டா ளுரைகேட்டவ் வுழைத்துணைவ ரிருவரும்புக் குற்று நோக்கப், பிழைகண்டாய் மானன்று மாரீசன் மாயமெனப்

பேசத் தம்பி, மழைகொண்ட நிறத்தனது வெதுவெனினுங் கொன் றூரியை வாங்கி மீள்வெ, னிழைகொண்ட விடையாளைக் காத்திரு வென் றினையானுக் கிசைத்தான் மன்னோ. (சங)

வில்லொன்று காத்திரகு பதிமானைத் துரத்தியுயிர் விரைந்து வாங்க, வெல்லொன்று சரம்விடுத்தான் மாயமா னுசீதா விலக்கு வா வென், சொல்லொன்று சொல்லியுயிர் துறந்ததுவா லிராகவனச் சொ ற்கேட் டீதான், மல்லொன்றைப் படர்வருமோ வென்றுதன திட நாடி யழிக்கொண் டானல். (சச)

மாயமான் சொற்கேட்டு மணவாள னுரையென்ன மயங்கிச் சீதை, போயமா னவனிலையை யறிதியென விளையாற்குப் புகல வன் ணு, னீயமா வருந்தலென்மூற் கோர்துயரு முறுதென்று நிகழ்த் தக் கன்றி, ஞாயமே யிலாதபல சொலக்கலங்கி யிராகவன்பா னடந் தான் பின்னே. (சரு)

இருவரும்போ யொழிந்ததுகண் டெதியுருக்கொண் டிராவண ன்வந் தெய்தச் சீதை, பொருவருமெய் மறைமுனியென் றருக்கிய மா தியபூசை புரிய வன்னோன், றிருவுநிக ரிலளெழிலி லிவட்கெனவே மதிமயங்கிச் சீர்சா னங்கா, யொருவனினை யுடையான்பே ருன்பெ யரு ரியாவையுநன் குரைத்தி யென்றான். (சசு)

பரித்திடுமுக் கோற்பகவன் பகருரைக்கு விடையானும் பணித் தி லேனே, லெரித்திடுவன் சபித்தென்னச் சானகிதங் குலமுதல வி யம்ப வன்னோன், விரித்தெழுதன் புகழோதிக் கொண்டிடுக வெனை யென்ன வேண்டச் சீறி, வரித்திடுமென் னாயகன்சீர்க் கொவ்வாநின் சீரென்ன மறுத்துச் சொற்றாள். (சஎ)

சானகியிவ் வாறுரைப்பத் தசக்கிரீவ னியானேயத் தனதற் செற்றம், மானமுங்கைக் கொண்டதிற லுடையனெனை நீமறுக்கே ன் மங்கா பென்ன, வானவரன் றேழனு ருடன்பிறந்தாய்க் கிதுதக வோ வரக்க ரென்னுங், கானகத்திற் றீயிடுவான் றுணிந்தனைநீ யெ னச்சீதை கனன்று விண்டாள். (சஅ)

கற்புலகி லூன்றவரு கனங்குழைசொற் கிராவணன்றான் கன ன்று தான்கொள், பொற்புறெதி யுருவொழித்துச் சானகியைத் தே

ரேற்றிப் போக வன்னா, டற்குறுமிந் நிலையுடையாற் குரைக்கவெ னச் சனத்தானத் தமர்ச ரங்க, ணிற்குமர மிவைக்குரைத்துச் ச டாயுவைக்கண் டவ்வாறே நிகழ்த்தி னைந்தாள். (௪௯)

செம்பவள வாய்திறந்து சீதையழச் சடாயுதுயி றீர்ந்து நோக்கிக்,கம்பமுறீஇ யிராவணற்கு நயமொழிகள் பயமொழிகள் கலவிச் சொற்றும், வெம்பியவன் கேளானாய் விரைந்திடக்கண் டமர்புரிய விரும்பி நேர்புக், கும்பருறத் தகைந்திட்டான் றிருவருதற் குயிரு தவு மொப்பில் வள்ளல். (௫௦)

மூவ்வாறி னிரண்டணையும் புயத்தானோ டுவணபதி முரட்போ ராற்றி, வெவ்வேறாத் தேர்துரகம் பாகுதனு முதலியன வீழ்த்தன் னனா, லொவ்வாத துயருழந்து பின்னுநகந் துண்டங்கொண் டுறு கண் செய்துந், தெவ்வானே யடியுண்டு விழக்கண்டு மிகுதுயராஞ் சீ தை சேர்ந்தாள். (௫௧)

ஆவயினின் றிரகுபதி மனையாளை யிராவணன்கொண் டகல வா ங்கண், மேவியமா விலங்கலுடன் விடபிகளும் வயப்போத்தும் வே ங்கை மாவும், காவிலுறை தருதெய்வ கணங்களுங்கண் டன்முற் றுங் கம்பித் தாவா, வேவர்வினை யிதுவென்ன நொந்துமன நைந்து ருகி யிரங்கி நின்ற. (௫௨)

அளக்கரிய துயரென்னு மளக்கரிடை முழுகியக மயருஞ் சீ தை, கிளக்கவரு வீரரிது புரிவரோ வறிஞர்பிறர் மனையைக் கிட்ட வுளக்கணினை தருவரோ வுன்போலப் பழிபூண்பா ருளரோ வென் றும், விளக்கமுறத் தசக்கிரிவன் றனைநிந்தை பற்பலவா விளம்பி னாளால். (௫௩)

கண்டகனா மிராவணனாற் கரத்திடுக்கிச் செலுஞ்சீதை கலிங்கந் தன்னிற், கொண்டதன தணியையுமுடிந் திரலைமலை யிடையரிகள் கு ழுவி னுய்த்தாள், விண்டலமா றெனவிரையுந் தசக்கிரிவ னிலங்கைந கர் மேவி மாதைப், பெண்டிருறு முவளகம்வைத் தரக்கியரைக் கடி புரிந்து பேண வைத்தான். (௫௪)

தன்றிருநோக் கிறையின்றேற் றாழ்வுறுமெப் பொருளுமெனுந் தையல் சீதை, யென்றுணர்தந் தனன்போலு மிராவணனந் தப்பு

ரமு மிடங்கண் மற்று, நன்றுபல போகங்கட் குரித்தாய நீதியினை
யுங் காட்டி நங்கா, யின்றெனைநீ யடைந்திடுதி யெனவிரந்தா னிரப்
பறியா னெந்த ஞான்றும். (௫௫)

இரந்தானை முகநோக்கி யிசையாமற் புல்லிடையி விட்டுச்
சீதை, பரந்தாய விராகவன்சீ ரிவையிவைநின் னிழிவெனவும் பகரக்
கேட்டு, வரந்தாவு மிராவணனுங் டொன்றி லென்றன் வழிப்படா
யென்னி னின்றன், சிரந்தாவப் புரிவனென வசோகவனத் தரக்கி
யர்தஞ் சிறையில் வைத்தான். (௫௬)

மாயமான் றனைப்படுத்து வரும்பொழுது காகுத்தன் வழியி
னுற்ற, தீயதா நிமித்தங்க ளேக்கிலக் குவற்கண்டு சீதை தன்
னை, நீயெனே தனித்திருத்தி வரறகுமோ வவளுயிர்நீத் திருப்ப ள
ன்றே, லேயவெவ னேனுங்கொண் டகன்றிருப்ப துறுதியென
விசைத்து நைந்தான். (௫௭)

தம்பியுட னுச்சிரமத் தருகிரா கவனணைந்தத் தலத்து மேவுங்
கொம்பனைய மடமாதைச் சானகியைத் தனைப்பிரியாக் குணமே
போலும், வம்பவிழுங் குழலாளை யவ்விடத்து மாடல்புரி வயினு
நாடி, வெம்பியுறுந் தலமறியா தடையாத பழங்கணக மேவி
னனே. (௫௮)

பின்னவனை முன்னேக்கிச் சானகியை நீபிரிந்து பெயர்தற் கு
ற்ற, தென்னையோ காரணஞ்சொல் லெனவினையா னெனைச்சீதை யி
சையா வெய்ய, வின்னலுறு மொழிமொழிய வந்தனனென் றிசை
த்திடக்கேட் டெதுவுற் றுலு, மன்னுறுகாப் பொழிந்துநீ வரற்பா
லை யலையிதுவோ மரபன் றென்றான். (௫௯)

தாமரைக்க ணெம்பெருமான் றவப்பள்ளி முதலாய தலங்க
டோறு, மாமயிலி னொளிர்சாயல் வைதேகி தனைத்தேடி வருந்தியந்
தத், தாமமுறு மலைமரங்கள் விலங்கினத்தைக் கேட்டுவிடை தான்
கொள ளானாய், மாமயல்கொண் டெம்மாடு நாடினன் மறையறியா
ன் மாறி மாறி. (சூ0)

இங்குறுமோ வங்குறுமோ வெனநினைந்து சானகியை யிரா
மன் றேடி, யெங்குமவ டனைக்காணு தெரியினுறு மிழுதெனவுள்

ளிளகி யேங்கிச், செங்கமலக் கண்கலுழ்ந்தா னிலக்குவன்பல் லாற் ருனுந் தேற்றத் தேரு, தங்கவன்கொண் டிடுதுயரி னுண்மையினை யறிந்தெவர்க ளறைய வல்லார். (சுக)

இலக்குவனே சீதையைவிட் டியானுயிர்தாங் கிடவல்லே னில் லே யென்றுங், கலக்கமில்லை கேசியுளக் கிடக்கைமுற் றுற்றதுநீ க டிது சென்று, விலக்கமில்சீ ரயோத்தியினைப் பரதன்முடி பரித்தா ள விளம்பு கென்னச், சொலத்தனையே நிகர்தாச ரதிகேட்டவ் வி ளையானுந் துனியுற் ருனல். (சுஉ)

தாயரையு மரசினையு மிழந்ததுயர் நமக்கொழித்த தையல் சீதை, போயொளித்தா ளினிப்புரிவ தென்னென்றே யிராகவன் ருன் புகலக் கேட்டே, யாயதன துறுகண்மனத் தடைத்திளையா னற்றிடவு மண்ண லாற்ரு, தேயமனைப் பாலுற்ற புரிவினு லலக்க ணையே யெய்தி னுனல். . (சுங)

செங்கமல மலர்கோதா வரியாதி யிடத்திளையான் சென்று தேடி, மங்கையைக்கண் டிலனுக விருவருமவ் வயினீங்கி வந்து தென்பா, லங்கழிவார் தேர்முதல் கண்டிருவர் சீதைக்கா வமரேற் றுள்ளா, ரிங்கெனவுண் ணினைந்துலகை யழிப்பனெனச் சரந்தொடு த்தா னிராமன் வெம்பி. (சுச)

தள்ளரிய பெருஞ்சினங்கொ டாசரதி தனைநோக்கித் தம்பி யொப்பி, லெள்ளரிய குணக்கடலே யிராகவனே யொருவன்மதி யி ன்றி யாற்றும், விள்ளரிய தீங்கென்னி லதன்பொருட்டா வுலகை நலி வெய்தச் செய்தல், கொள்ளரிய தாமைய கடுங்கோபந் தணிதி யெனக் கூறி னுனல். (சுரு)

முன்பனும் யயாதிநள னகுடனிவர் முதலினரு மொழிய வொண்ணுத், துன்பமெய்ந் தனரெவர்க்குஞ் சுகதுக்க மியற்கையெ னல் சொல்லா தோரு, மன்பனே தவறிழையா தவரையொழித் த துபுரிந்த வவரைக் கோற, றன்பொருவில் குணமுடையாய்க் குரிய தென விராகவற்குத் தம்பி சொற்ருன், (சுசு)

பின்னவனெ டவணின்று பெயர்ந்துசில தூரம்போய்ப் பெருகி ரத்தந், தன்னிலமிழ் சடாயுவைக்கண் டிவன்சீதை தனைத்தின்ற யா

து தான, னென்னவடித் திடக்கிட்டச் சானகியை யிராவணன்கொ ண்டேகி னுனென், றன்னவனே திடக்கேட்டே யிரகுபதி யனுச னுட னழிந்தா னுள்ளம். (சுஎ)

காதலநின் மனையாளை யிராவணன்கொண் டகல்காலக் கணிக்கி னின்னுன், மாதுதடை யின்றடையப் படுவளவற் கிலங்கைநகர் வதியு மூரென், ஞேதிடுபோ துயிர்போய வுவணபதிக் குயர்தான மளித்தி ராமன், றீதில்சிதை வைத்தெரித்துத் திலநீருந் தன்கரத் தாற் சிறப்ப வீந்தான். (சுஅ)

தண்டகமா வனநீங்கித் தாசரதி யுடனிளையான் சார்போ தந் தக், கண்டகியா மயோமுகியாற் றுன்புறிலக் குவனன்னுள் காது கொங்கை, துண்டமற வரிந்திடப்பின் னிருவருஞ்சில் விடநீங்கித் துணைவிற் செல்காற், சுண்டவெலாம் வளைத்திழுத்து வயிற்றெடுக் கும் கவந்தனெடுங் கரத்துட் புக்கார். (சுகூ)

கவந்தன்றே ளிரண்டினையு மிராகவனு மிளையானுங் கழிக்க வன்னு, னுவந்திவர்க ளிருவரையு மின்னுரென் றுணர்ந்துமுன மு ற்ற சென்மத், தவந்தருமா ஞானத்தா லிப்பிறந்தை யுமற்கேது த ன்னை முற்று, மவந்தவிர வன்னேர்கட் கிவையென்ன வெடுத்து ரைப்பா னமைந்தான் மாதோ. (எ0)

தூலசிரா சாபத்தாற் றெடருடலீ திருவீருந் தொலைத்தீ ரென் றே, யேலவழுத் திடக்கவந்த னிராமனிரா வணனிருக்கு மிடநீ யெற்குச், சாலவுரைத் திடுதியென விவ்வுருப்போ யறிவடைந்து சாற்று கிற்பேன், கோலமுறுஞ் சானகியைக் கொள்ளுமா றெனவ வற்குக் கூறி னுனல். (எக)

சாபத்தால் வருமுருவந் தவிர்ந்துமுனை யுருக்கவந்தன் சார்ந்தி ராம, பாபத்தா ரறிவரிய படிவத்தா யிலக்குவனை பகைமேற் கொ ண்டவ், வாபத்தா லிரலைமலை யடையிரவி சுதனெடுநட் பமர்மி ன ன்னுன், றீபத்தாற் றருமேனிச் சீதையையாய்ந் தளிப்பனெனச் செப்பி னுனல். (எஉ)

சீர்க்கும்வழி பல்லாற்றுற் றெரிவித்தும் பலரறியாத் திறத்தை நோக்கி, யார்க்கும்வழி தானேபுக் கறிவிப்பா னவதரித்த விராம

ளோடு, தீர்க்கமுறு மிலக்குவற்கு மிரவிசே யினைநீவிர் சேர்தற் கே யு, மார்க்கமிது வெனக்கவந்தன் மொழிந்தமரர் வாழ்சுவர்க்க மன்னி னுனல். (எங)

அக்கவந்தன் புகனெறிச்சென் றிளையானோ டிராகவனவ் வக னீர்ப் பம்பைப், பக்கமுறு முயர்ஞான சபரிதா பதம்புகுதப் பார்த் தன் னளு, மிக்கமகிழ் வுடனெதிர்கொண் டவற்குரிய பூசனைகள் விரும்பி யாற்றி, யொக்குமவன் கருணையினு லொளியுயரும் பரம பத முற்றுண் மாதோ. (எச)

இளையவனோ டிரகுபதி சபரியாச் சிரமத்தை யிகந்து போந்து கிளைதழுவு பாதவமுங் கொடிசெடியு மிடைந்துவளங் கெழுமு கானி னுழையுள்பல் வளநோக்கி மதங்கசர சிடைமுழுகி யுற்றார் பாபக் களைகளைந்து பரந்தொழுகு பொழிற்பம்பா சரசின்சீர்க் கரையைச் சார்ந்தான். (எடு)

ஆரண்யகாண்டம் முற்றுப்பெற்றது.

ஆகச் செய்யுள் உஅக.

---

# கிட்கிந்தா காண்டம்.

சத்துவமாம் பணிபுரியுந் தம்பியுட னிராகவன்சீர்த் தடத்த ப ம்பை, யுத்தமமா ரெழினோக்கி மனைவியைநினைந் துளங்கலங்க வொ ழிதி யெங்க, ளத்தகவ லெனும்பின்னு லகந்தேறி யிரலைமலை யடை யக் கண்டு, மத்தமுறு மிரவிசுதன் வாலியே வலினரென வைத்தா னோட்டம். (க)

ஓட்டமுறு சுக்கிரீவ னுற்றவிவ ரியாவரென வுணர வுள்ளத் தேட்டமிக வுடையோனு யஞ்சனைசே யினைநீயே தெரிதற் கொ த்த, நாட்டமுளாய் சென்றவர்கள் வரவெதனுக் கெனமுற்று நன் காய் வுற்று, வாட்டமுறு தெனக்குரைத்தி யெனவிடுப்ப விரைந்த வனும் வந்தான் மன்னோ. (உ)

மாணியுருக் கொண்டடைந்த வாயுசுத னிராகவன்முன் வணங் கி யைய, நீணிலத்திற் றுணையில்லீர் நீவிரியா ரிவணெய்த நிபமென்

னென்னக், காணியதஞ் சரிதமெலாங் கழறியுங்கள் கவியரசைக் கல ந்து நட்புப், பேணியவந் தனமென்ன விலக்குவற்கொண் டிரகுபதி பேசு வித்தான். (ந)

கண்மணியை நிகரெங்கள் கதிர்மருமான் றுணைக்கரசி கருணை யாளன், பெண்மணியைச் சானகியைப் பிரிந்தாளைப் பெறத்துணை யாய்ப் பெட்டா னுங்கள், விண்மணியின் கான்முளையை யென்றெடு த்துப் பினுமிளையான் விளம்பக் கேட்டங், கொண்மணிய மதியனு மா னுவர்களைக்கொண் டரசனிடத் துற்றான் மாதோ. (ச)

இலக்குவனு மிராகவனு மெய்தினரென் றநுமான்வந் திசைப் பக் கேட்டுக், கலக்கமொழிந் தவரிடஞ்சென் றிராமனுட னெரிகரியா ய்க் கலந்து கேண்மை, விலக்கமிலா துறப்பூண்டு வாலியைக்கொன் றருடியென வெய்யோன் மைந்த, னலக்கவது புரிவனென நம்பிபிர திக்கினைதா னன்கு செய்தான். (ரு)

தினகரன்சே யிராகவற்குச் சீதையையா னெங்குறினுந் தேடி யீவ, னனகவெனச் சூள்செய்தங் கவளெறிந்த வணியையெடுத் தவற்குக் காட்ட, மனமிகநொந் தவனவற்றை நனிநோக்கி யிராவ ணனும் வன்க ளுளன், றனைநிகரி லானுறையும் பதிமுதல யானறி யச் சாற்று கென்றான். (சு)

பத்தொடுபத் துறுகரத்தான் பதியினொடு வலியறியாப் பண்ப னெனுந், தத்துறவன் றற்கொண்டு சானகியை மீட்டுனக்குத் தரு வேனைய, சத்தியமீ தெனவருக்கன் மகன்மொழியத் தாசரதி தான் கேட் டின்னே, சித்தமுறு கவலொழிதி வாலியையான் கொன்றிடுவ றிண்ண மென்றான். (எ)

சித்திரபா னுப்புதல்வன் சீராமா வுடல்விடுத்துஞ் செய்தல் வேண்டு, மித்திரர்கா ரியமென்று விளம்பியுமென் னிளவரசு மேவு மில்லு, மித்தனையும் வாலியினு லிழந்தனன்யா னெனவுமுரைத் திட க்கேட் டண்ண, லொத்துறவில் பகைமுன்னே டுற்றதெத னுலென் ன வுரைப்பா னண்பன். (அ)

மானவகேள் பாதலம்போய் மாயாவி யுடன்வாலி வன்போ ரா ற்றி, யானபல தினங்கழிந்தும் போந்திலன்பின் யான்பிலத்தை

யடைத்துச் சூழ்வோ,ரேனையர்வேண் டிடல்குறித்தே யரசுபுரிந் திருக்குங்கா லென்முன் வெற்றி, தானடைந்து வரனோக்கிச் சலமுறே லெனப்பணிந்து சரண்புக் கேனால். (௯)

சீற்றமிகு தருவாலி செப்புமென துரைக்கிணங்காத் திறத்தனாகி, யேற்றவர சிச்சையினே பிலமடைத்தே னியானென்ன வெவர்க்கு மோதி, யாற்றலுட னெனைத்துரந்தா னவன்பானின் றளித்தியென வரிகள் வேந்தன், போற்றவிரா கவனஞ்சல் புரிவலது வெனமகிழப் புகன்றான் மாதோ. (௧௦)

தரணிமகன் சதமகன்மா மகனையுயர் தசரதனந் தனனோ வெல்லு, முரனுடைய னெனறேறு முளத்தினனாய்த் துந்துபியி னுடலை நின்றன், வரனமருந் திருவடியின் பெருவிரலா னூக்கிமரா மரத்தி லொன்றை, முரணொழியப் பிளந்திடுவா யிராகவனே யெனத்துதித்து மொழிந்தான் மன்னோ. (௧௧)

தானுரைத்த படிபுரிந்த தாசரதி யுடனிரவி தனையன் சென்று வானுரைத்த புகழ்வாலி யுடன்பொருதே யாற்றானாய் வந்து தன்றோ, டேனிரைத்த கொடிப்பூவைத் தனைராம னறிதருவான் செவ்வன் வேய்ந்து, வானரத்த கிட்கிந்தைக் கிராமன்முத லினருடனே மறித்துஞ் சென்றான். (௧௨)

சனகிதவ னிலக்குவனஞ் சனைபுதல்வ னளனீலன் றாரனோடு, துனையவெழிற் கிட்கிந்தை நகர்நோக்கி வருகின்ற சுக்கிரீவ, னனகமுறுஞ் சத்தசன முனிவராச் சிரமமெதி ரமர்தல் காட்டிப், புனையுமதன் சீரனைத்து மிற்றென்ன விராகவற்குப் புகன்றான் மாதோ. (௧௩)

நதிவளனு மலைவளனு நகர்வளனும் பொழில்வளனு நாட்டில் யாவு, மதிவளனே நிறைதருகிட் கிந்தைநக ரிராமன்முத லோர்கணண்மி, வதிதரவோர் தருமறைவி லிரவிமகன் மிகவெகுண்டு வன்றோள் கொட்டிப், பொதிரெறியத் திசையனைத்து மிகத்தெழித்துப் போர்க்களத்துப் புக்கான் மாதோ. (௧௪)

புரந்தரன்சே யமர்வேட்டுப் புறப்பட்டான் மனைதாரை பொ
ருவி லாத, வுரந்தரசின் னிளையானுக் கிராகவனே துணையாக வுற்றா
னிப்போர், வரந்தரா தவனொடிக நகவன்று தம்பிக்கு வாய்ப்ப வி
ன்னே, திரம்பெறிள வரசளித்தி யெனவுரைப்பக் கேட்டிலன்றான்
சிறிது மச்சொல். (கரு)

தாரையா மனையுரைக்குத் தக்கவிடை பலசொற்றுத் தம்பி
யோடு, போரையே பொரவிரவி சுதன்முன்னோற் கிளைத்தயரும்
புன்மை நோக்கிக், காரையே பொரத்தருவின் மறைந்துறையுங்
காகுத்தன் கணையொன் றேவி, *வாரையேய் வாலியுரங் கிழிக்கவவ
னற்றாய் மண்ணில் வீழ்ந்தான். (கசு)

மண்ணிடையே வீழ்ந்தயர்ந்து மரணயா தனையுற்ற வாலி
யைய, வெண்ணிடையே மானவனீ யிதுசெய்தாய் தருமநுங்கட்
கில்லை போலும், பெண்ணிடையே யொழிந்தாலென் னியலுநெறி
கொண்டதனைப் பெறவொண் ணாதோ, விண்ணிடையேய் புகழ்த்
தாச ரதியேயென் றிகழ்ச்சிசில விளம்பி னானால். (கஎ)

தனையிகழ்ந்த வாலிக்குத் தாசரதி தருமமே தான்செய் துற்ற
தெனமொழியத் தெருண்டுவா சவன்மகன்யா னியற்றுமப ராத மு
ற்று, மனனிடைக்கொள் ளாதகற்றி மைந்தனையுங் காத்தியென வ
ள்ளல் கேட்டிங், கினைவுறேல் கருமத்தைக் கடத்தலரி தெனவவ
னுக் கிசைத்தான் மன்னே. (கஅ)

ஒப்பரிய திறல்வாலி வென்றியலா தெஞ்ஞான்று முறாத வில்
லா, னெப்பெரிய போரெனினும் விளையாட்டா யியற்றவலா னிவ
னை யின்றிங், கெப்பரிசோ மானிடவ னோரம்பா லுயிருண்டா னெ
னவெண் ணுற்றுக், கைப்படத்தன் மைந்தனையுங் கொடுதாரை நா
யகன்சேர் களத்தை யுற்றாள். (கசூ)

தன்னனைய மதகளிறே தலைவனே வானரர்க்குத் தமியேன்
முந்தச், சொன்னவிதங் கொண்டிலையே யுடன்பிறந்தான் றனைவன
த்திற் றுரத்தியன்னான், பன்னியையுங் கைக்கொண்டா யிதுபட்
டா யென்றுபல பலவுஞ் சொற்றே, யின்னிசைமே லெழுவழுதா
ளெழிற்றாரை கண்டனர்க ளென்ப டாரே. (உ0)

---

* வார் - நேர்மை.

ஊட்டுவிக்கும் விதியானே யுயிர்துரந்த நாயகனுக் குருகி யுள்ளம், வாட்டுவிப்ப தல்லாது வரற்பால திலேமங்காய் மைந்தன் றன்னேப், பூட்டுவித்த முடியினனுய்ப் புரிந்துமகிழ் கெனவனுமன் புகலத் தாரை, கேட்டுமுற்றத் தேருளா யானுமெரி புகுவனெனக் கிளத்தி னுளால். (உக)

அயர்வுயிர்த்து வாலியெழுந் தருக்கன்மகன் முகநோக்கி யையயாணிற், கியலவிய லாததவ றிழைத்தவெலாம் பொறுத்திவற்காத் திடுதி யென்ன, நயமுறச்சொற் றங்கதனைப் பொன்மாலே யுடனவன்கை நல்கி யாக்கை, பெயர்வுறநீத் தேகினுன் வானரர்கள் கண்டலக்கண் பெருக வுற்றுர். (உஉ)

மகவான்றன் மகவானுன் மாண்டவுட னவன்மருமம் வாய்ப்பப் புக்க, தகவாரு மிராமசரந் தனேநீலன் பறித்திட்டான் றுரை தன்சொ, லிகவாது நாயகனே யங்கதன்சென் றிறைஞ்சிடக்கண் டிதய மேவி, மிகவாதை யவள்பட்ட துயரமிது வெனயாவர் விளம்ப வல்லார். (உங)

உயிர்போய முன்னோனுக் குளங்கவலும் பானுசுத னுறுகநோக்கிச், செயிர்போய கேண்மையினு லிராகவனு மவன்றிறத்துச் சிந்தை நொந்து, மயில்போலு மெழிற்சாயற் றுரையைநீ வருந்தனின்றன் மகனே யின்னே, யெயில்கோலுங் கிட்கிந்தைக் கிளவரசனுக்குவிப்ப னென்னச் சொற்றுன். (உச)

அருக்கன்மகன் றுசரதி யருள்வழித்தன் முன்னோனுக் கமைய வுள்ளத், துருக்கமொடு தகனஞ்செய் வித்துதக தானமுநன் குதவித் தற்சூழ், விருப்பமிகு மங்கதனு தியர்களேயு முடன்கொண்டு விரைந்தி ராம, னிருக்குமிடத் தணைந்தவன்பா லிந்திரன்சேய்க் கிவைபுரிந்தே னெனவோ துற்றுன். (உரு)

சானகியைத் தேடுதற்கிச் சரற்கால மூரித்தன்றுற் றம்பி நீபோ, யானபுகழ் ரவிசுதன் றனேயரச னுக்கிமுடி யமையச் சூட்டி, வானவர்கோன் மகன்மகனே யிளவரசா யுறப்புரிந்து வருதி யென்ன, மானவன்சொற் றிடவிளேயா னவ்வாறே யெவ்வுலகும் வாழ்த்தச் செய்தான். (உசா)

பின்னவனு மிராகவனுங் கிட்கிந்தைக் கணித்தாய பிரசர வண்ண, மென்னுமலை முழையிடமாக் கடகமுதன் மதியொருநான் கிருந்தா ரக்கான், முன்னவன்றன் னுயிர்த்துணைவி தனைநினைந்து துயரகத்து முற்ற மேவ, மன்னவவிட் டிடுதிகல வெனவிளையான் றேற்றியனுர் மாற்றி னனே. (உஎ)

மெய்பொய்யே யெனவிடுத்து மெய்யேமெய் யெனக்காத்த வேந்தன் றேன்றன், மைகையே பரந்துபொழி மழைக்காலத் தியற் கையையு மாதா செய்த, செய்கையா லரசிழந்த திறத்தினையும் பகைவலியுஞ் சிந்தித் தாவி, யுய்கையோ வரிதென்ன வருந்தவிளை யானந்த வுறுகண் டீர்த்தான். (உஅ)

காற்றின்மகன் சரற்காலங் கழிந்ததுநம் மிராகவகா ரியத்தை யின்னே, யாற்றிடுதல் வேண்டுமென வருக்கன்சேய்க் குரைக்கவவ னனிக மெல்லாஞ், சாற்றிடுநாண் மூவைந்திற் றந்திடுவை நம்பதிக் கட் சார வென்றே, யேற்றமிகு பாவகனந் தனனீலன் றனையழைத் தங் கேவி னனுல். (உகூ)

பத்திரதன் றிருமைந்தன் பைம்புயல்பெய் பகலெல்லா மொ ழிந்தும் பண்டை, மித்திரனுர் தருநமது மித்திரன்சீ தையைத்தேட விழையா னென்னே, யத்தலைபோ யன்னுனுக் கிவையுரையென் றிலக்குவனுக் கறைய வின்னே, மத்தமுறு மவனையான் வாட்டுவிப் பே னெனச்சினந்து வழிக்கொண் டானுல். (௩0)

தேரிரவி மகன்வெருவச் செப்புதலை யிளையாய்நீ செய்தி யென்னக், காரிரவி நிகரொளிய காகுத்தன் சொலக்கேட்டுக் கடிதுற் றுனைத், தாரிலகு திண்டோளங் கதன்முதலோர் கண்டென்றாழ் தனையன் பாற்சென், றேர்கிலையே மிகச்சினவி யிலக்குவனுற் றன னென்ன வுரைத்தார் மாதோ. (௩க)

அவ்வுரைகேட் டரிகுலமன் னனுமானே சினந்திளையா னடைதற் கிங்கு, னெவ்வுநிப மென்னையோ வுரைத்தியென நீயவர்கட் குரைத் த வாறே, யெவ்வமறப் புரியாத விதுவேகா ரணமென்ன வியம்பி யின்னே, செவ்வையுறப் பணிந்தவன்கொள் கோபம்போ யொழியு ம்வணஞ் செய்க வென்றுன். (௩உ)

இலக்குவனா னொலியெழுப்பி யரண்மனைபுக் கனனென்ன விர வி மைந்தன், கலக்கமிகு முளத்துணர்ந்து தாரையைநீ கடிதேகிக் கணிப்பி லாற்ற, லுலத்தலிலா விளையானைக் கொண்டணைதி யிவ ணென்ன வுரைப்ப வன்னா, னலத்தகவள் னானைச்சென் றழைத்த ரச னாறுமிடத்து நண்ணி னாளால். (௩௩)

அரியமா தரும்புதல்வ னிலக்குவற்கண் டகம்வெருவி யரிக டாங்கும், பெரியவா தனத்திருந்த பெண்டிருட னெழுந்தயலே பேணி நிற்பக், கரியமா தவன்றுணைவ னோக்கிமுனங் குறித்திடு நாள் கடந்த நிற்குத், தெரியவே திடமுன்னோன் செப்பினனிம் மொழிகளெனத் தெரிவித் தானால். (௩௪)

மிக்கசினத் திளையானைத் தாரையுற நோக்கியைய வெயிலோன் மைந்தன், றக்கவன்செய்ந் நன்றிகொலான் மதன்சரத்திற் கட்டுண்டு தாழ்த்தா னின்னே, புக்கிரகு பதிகாரி யம்புரிவ னையமிலை பொருந்து சீற்ற, மொக்கவொழித் தருடியென நயந்துரைக்க வவன்பொறைநன் குற்றான் மாதோ. (௩௫)

தாரையாற் சாந்தியுறு மிலக்குவனை நோக்கியொளிர் தபனன் செம்ம, லாரையா விராகவனுக் கிணையாய குணமுடையா ரெனவே யன்னான், சீரையா யுறத்துதிக்க விளையான்யா னினைச்சினந்து செப்புஞ் சொற்க, ணோரையா வுளவிலவென் றகங்கொளா தமைதி யென நிகழ்த்தி னானே. (௩௬)

என்றாழ்கான் முளைவாயு சூனுவைக்கொண் டுரைந்து தினத் திற் குள்ளே, சென்றாழின் வானரரைக் கொணர்கவெனப் பினுந் தூது செலுத்த நீலன், றன்றாதாய் முற்சென்றார் மகேசன்மக சாலை யுறுங் கனிக டாங்கித், துன்றேதி லாவரசற் களித்தரிகள் வருகின்ற வென்று சொற்றார். (௩௭)

வானரர்வேந் திளையானோ டிராகவன்சேர் சூழல்வர வள்ள னோக்கி, யீனமிலா துல்காள்வார்க் குரியவற மிதுவென்ன வெடுத் துச் சொற்றுச், சானகியை யாங்காணத் தாழாதே முயல்கவெனச் சாற்ற வன்னா, னானவது புரிந்திடக்கண் டிரகுபதி மிக்கமகிழ் வடைந்தான் மாதோ. (௩௮)

எண்ணிடையி லியையாவா னரவீர ரெய்தினரை யிரவி செம்மல், கண்ணுறக்கண் டவரவர்க்காம் பராக்கிரம முதலியவுங் கழறி நாமங், திண்ணமுறு மிவர்க்கிதுவென் றிராகவனுக் கொருமுறையே செப்பி யன்னார், நண்ணிடலுக் குரித்தாய தலமுமவர்க் கியைவனவா நல்கி னானால். (௩௯)

ஆவிதுறந் திலளாகிச் சானகிபுக் குறையுமிட மதனைக் கண்டும் பாவியிரா வணன்வாழும் பதிகண்டு மீண்டிடுவான் பலதிக் கிற்கு மேவுதிவா னரரையென விரகுபதி யருக்கன்மகற் கிசைக்க வன்னான், மேவுமுதற் றிசைசென்று வரவினத னாதியரை விடுத்தான் மன்னோ. (௪0)

எத்தொழிலு மியற்றவல வனுமானங் கதன்சாம்ப னிவர்முன்னோரை, வித்தமுறு மதியுடையீர் சானகியா ரெங்குறினும் விரைந்து தேடி, யித்தலைவந் தியாமகிழ வியாமினிய மென்றுரைமி னென்று வான்சென், மித்திரனார் தரும்புதல்வன் யாமினியத் திசைசெல்ல விடுத்தான் மாதோ. (௪௧)

செங்கதிரோன் பிறங்கடைதன் மாமனாஞ் சுசேணன்முதற் றிறத்தி னோரை, மங்கையருக் கணியனைய வைதேகி யுறையிடனும் வன்க ணாளன், பங்கமுறு தசக்கிரிவன் வாழ்பதியு நேடியவண் பாணி யாம, லிங்குறுமின் கடிதென்ன வாருணதிக் கிற்செல்ல வேவி னானால். (௪௨)

யூதபதி சதவலியே முதலினரைக் கவியரசா மொளியோன் செம்மல், சீதைவதி தருமிடனுஞ் செய்யாது செய்தறத்தைத் தின்றுவாழும், பாதகனா மிராவணன்வாழ் பதியினையு நன்றுய்ந்து பார்த்து வம்மி, னேதமற விவணென்று வடாதுதிசை யிடைச்செல்ல வேவி னானே. (௪௩)

கண்டுவரு வானிவனே காகுத்தன் மனையையெனக் கவிகள் வேந்துட், கொண்டுனது கடைமையே யிதுமுடித்த லெனவாத சேய்க்குக் கூற, விண்டொளிசெய் யாழியினை யிரகுபதி யனுமான்கை விருப்பிற் றந்தே, யெண்டருமெய்த் திறலானே செல்கரும முடித்தியென வினிது சொற்றான். (௪௪)

வெங்கதிரோன் றருஞ்சூனு வானரவீ ரக்குழுவை வியந்து நோக்கிச், சங்கையிலா துரைகருமஞ் சாதித்தோர் திங்களுக்குட் சார்தல் வேண்டு, மிங்கனநீ ரனைவிரு மெனவுரைப்பக் கேட்டித யக்கிளர்ச்சி யெய்திப், பொங்குபல பலவீர வாதங்கள் புகன்றெ வரும் புறப்பட் டாரால். (௪௫)

மானிலமோர் கோல்கொண்டு மனுநெறியா டசரதனார் மைந்த னந்த, வானரர்கோன் றனைநோக்கி மண்டலத்தி னிடமனைத்தும் வ ரிசை யானே, யானபரி செவ்வாற்றி னரிந்தனைநீ யெனவதனுக் கன்னோ னைய, வூனமிலாப் புகழ்வாலி துரத்திடுங்கா லோட்டந்தே யுணர்ந்தே னென்றான். (௪௬)

முற்சென்ற வினதனொடு சுசேணனமர் சதவலியா முதன்மை யோர்க, ளொற்சென்று வருங்கிழக்கு மேற்குவடக் குத்திசைக ளி யாவுந் தேடி, மற்சென்ற புயத்தரிகட் கிறையிடஞ்சென் றொரும தியின் மாதைக் காணே, மற்சென்ற குழற்றிருவை யனுமானே க ண்டுவரு மரச வென்றார். (௪௭)

அஞ்சனைசேய் முதலரிகள் விந்திய ரணியத்தி னநுகர் வெம் மை, விஞ்சியெழுஞ் சுரநாட வவ்வயினோ ரசுரனையிவ் வெய்யோன் றானே, வஞ்சியைக்கொண் டகன்றனனென் றங்கதனன் னோனுட லை வாட்டத் தீயோன், றுஞ்சினன்வா னரரெங்குந் துருவியொரு மர மூலந் தொக்கார் மாதோ. (௪௮)

அங்கதன்வா னரர்தம்மை நோக்கிநமக் கரசனா லறுதி யிட்ட திங்கள்செலின் மிகச்சினப்ப னெனவுரைத்தங் கவர்களொடுஞ் செ ன்று சேண்போந், துங்கமுறு மிரசிதமா கிரிமுதல விடமுற்றுஞ் சோர்வே யின்றி, நங்கையைக்கற் பிற்கரசைச் சானகியை மிகவருந் தி நாடி னானால். (௪௯)

சென்றுபல பலவயினும் வானரர்கள் சானகியைத் தேடி யோ ய்வுற், றொன்றுமிட மறியாதி ரிச்சபில மெனுங்குகையி னுள்ளே புக்கு, நின்றொளிரு நகரினையு நிறைபோகத் துறைகளையு நிகரே யில்லாத், துன்றுமெழிற் சுயம்பிரபை யெனுநாமக் கன்னியையுந் துலங்கக் கண்டார். (௫0)

கண்டுசுயம் பிரபையைவா னரர்வினவ வவள்கனகத் தாலா யிந்த, மண்டொளிசெய் தலமுன்ன மயனென்பா னியற்றித்தன் மனத்திற் கொத்த, வொண்டொடியா ளேமையெனு மொருமாதைப் புணர்ந்திருந்தா னுவளு மென்பாற், கொண்டிடுதோ ழமையினெனக் களித்தனனும் வரவறியக் கூறு கென்றாள். (ருக)

வாயுசுத னிராகவற்குத் தோழனு மிரவிமகன் மன்ன னெங்கட், கேயவவன் பணிதலைக்கொண் டியாஞ்சீதை தனைத்தேடி யிங்குப் போந்தே, மேயவுனா லாதரிக்கப் பட்டுளேஞ் செய்வதுண்டேல் விளம்பு கென்னத், தூயசுயம் பிரபைநும்பால் வேண்டிலனி யானொன்றுமென்று சொற்றாண் மன்னே. (ருஉ)

கடக்கரிய பிலத்தையெழிற் சுயம்பிரபை யாற்கடந்தங் கதனே முன்னோர், நடத்தலினி யூர்க்கன்று மன்னவன்சொன் னாட்கழிந்த நணுகி லன்னான், படப்புரிவ னாமிங்குப் பிராயோப வேசமே பண்ண னன்றென், றிடர்ப்படுமா மதியினரா யாருமுளத் திடையொப்ப வெண்ணி னாரால். (ருங)

மருத்துதவ வரும்புதல்வ னிளவரசா மங்கதனை மன்ன நீதான், றிருத்தகுநன் மதியுடையா யெண்ணாது செயநினைத்தல் செவ்வி தன்றால், வருத்தமிகு பிராயோப வேசஞ்செய் முயற்சியினை மாற்றி யின்னே, கருத்தனுங் கவியரச னுறையுமிடத் தணைந்திடுவான் கடிதே கென்றான். (ருச)

அனுமானெத் தனைவிதத்தி னறைந்திடினு மங்கதன்மற் றதுகேளானாய், வனமேவு விந்தியமா மலைச்சார லோர்சார்பு மன்னி யாங்கு, மனமாறு மாறியற்ற மற்றுள்ள வானரரு மன்னன் மைந்தன், றனைநேரப் பிராயோப வேசமே புரிதுமெனத் தாமுஞ் செய்தார். (ருரு)

விந்தியமா கிரிமேவு சம்பாதி சடாயுவுடல் விட்டு விண்புக், கந்தமில்சீர்க் கதியுற்றா னெனவுரைத்த வங்கதன்சொற் கேட்டே யைய, வெந்தநிபத் தாலிறந்தா னென்பதுஞ்சொற் றெனையிந்த விந்த நின்று, முந்துறக்கீழ்த் தலத்திறக்கி விடல்வேண்டு மென்னவுமே மொழிந்தான் மாதோ. (ருசா)

காகுத்தன் மனையாளைக் களவினிற்கொண் டிலங்கைநகர்க் காவலாள, னேகுற்றான் சடாயுவவன் றனையேற்றே மாய்வுற்றா னியாங்கள் சீதை, யாகுற்ற தலந்துருவிப் புக்கனமெங் கட்கரச னாணை நாட்கள், வாகிற்றே யொழிந்தவுயிர் விடமுயல்வே மெனவாலி மைந்தன் சொற்றான். (௫எ)

செப்புதல்சேர் சம்பாதி தென்கடலி லோசனையோர் நூறுஞ்சென்று, லொப்பிலெழி லிலங்கைநக ருளததனி லிராவணனு மொருவன் கொண்டே, யிப்புவிதந் திடுமாதை வைத்துள்ளான் கடல்கடந்து காண வெண்மின், றப்பிறிற லுடையீர்கா ளெனக்களித்து வானரர்தந் தளர்ச்சி தீர்ந்தார். (௫அ)

சாம்பவனை முகநோக்கித் தன்னும மோர்தரமே சாற்றி னூலு மாம்பவம்போக் கிடுந்தாச ரதிக்குரிய கற்பினளை யரக்கன் கொண்டு போந்திறமெற் கென்மகன்சு வாருசுவன் வந்துமுனம் புகலக் கேட்டே, னேந்துதிற லோயென்று சம்பாதி யாமெருவைக் கிறைபோதுற்றான். (௫௯)

சூரியன்றேர் வலவன்முதற் சுதனும்யான் சிறகிழந்து சுரர்நாட் டேய, சீரியவிவ் விந்தகிரி விழுந்துமுனி நிசாகரன்பாற் செல்ல வந்த, வாரியனுந் தவச்செல்வ னெனைநோக்கி நினைக்கிந்த வாபத் தெய்தக், காரியமென் புரிந்தனையாற் பகர்தியெனக் கருணையினுற் கனிந்து கேட்டான். (௬0)

பின்னவனு மியானுமொளி பிறங்கிரவி யுடன்விரைந்து பெயர்ந்து போந்து, மன்னுபராக் கிரமமறி வோமென்ன மேக்கெழுங்கால் வாய்ந்த தாபந், தன்னையவ னுற்றமை கண்டுபக்கத் தாலவனைத் தாங்கி யானிவ், விண்ணலொடு சிறகெரிந்தே யிவ்விடைவீழ்ந் தனனென்ன விசைத்திட் டேனால். (௬௧)

சொற்றேனை நிசாகரனு மாதவத்தோன் முகநோக்கித் துன்பமைய, சற்றேனு முறலெழிலார் சானகியை வானரரெத் தலத்துந் தேடி, யுற்றெய்வ ரிங்ஙனநீ யவளிருக்கு மிடமவருக் குரைக்க முன்போற், பொற்றேசார் சிறகுறுமென் றோதினனென் றங்கதற்குப் புகன்றான் மாதோ. (௬௨)

திக்கணைந்த புகழ்ச்சனகன் செய்வேள்விக் குழுந்தலமாஞ் சீர்
சால் பூவிற், புக்கெழுந்த வைதேகி வரலாறு சம்பாதி புகலுங் கா
லே, வுக்கவிற கிருபுறமுந் தழைத்தோங்க வானரர்க ளுவப்புற் று
ள்ளாந், தக்கணமா திசைநோக்கி யொருங்கெழுந்து விரைந்துவழி
தாண்டிச் சென்றார். (௬௩)

தம்பிதிறற் சடாயுவுக்குச் சலதானஞ் செய்துசம் பாதி யெ
ன்னு, நம்பியைவா னரர்நீங்கித் தென்சலதிக் கரையணைந்து நண்ண
வக்கா, லும்பர்பதி மகன்மகனிவ் வொலிகடலைக் கடந்திடுதற் குங்க
ட் குள்ள, பம்புதிற லளவுரைத்தி ரெனவரிக டமைநோக்கிப் பகர்ந்
திட் டானே. (௬௪)

வானரரோவ் வொருவருந்தந் தமக்குள்ள வலிமையுளம் வாய்
ப்ப வெண்ணி, நானிலைசேர் கடல்முற்றுங் கடக்கமிடுக் கிலனுனே
நண்ணும் பாதி, தானெளிது வாவுவே னியான்காலே தாண்டிடுவே
னென்று தங்கள், கோனடலா ரங்கதற்குப் பலவாறு தனித்தனியே
கூறி னரால். (௬௫)

எண்கினிறை யஞ்சனைசே யினைநோக்கி யிருநிலத்திற் பிறந்த
ஞான்றே, விண்குலவு மிரவியையோர் பலமென்னக் கரங்கொண்ட
விறலு ளாய்க்கித், தண்குலவு கடல்கடத்தல் பெரிதன்றிக் கருமத்
தைத் தாழா தாற்றிப், புண்குலவு மனத்தேமைப் புரந்திடனின் கட
னென்னப் புகன்றான் மாதோ. (௬௬)

கந்தவகன் றருபுதல்வன் கடல்கடக்க வுளநினைந்து ககனத் தோ
ங்கி, முந்தவுல களந்ததிரு மாலெனவே வளர்ந்தரிகண் முன்னின்
றேத்தப், பந்தமறு முனிவர்பலர் தவமியற்று மகேந்திரமாம் பருப்
ப தத்தி,னிந்துடுவோ டுறைசிகரத் தரியேறே யெனவெளிநின் றேறி
னானே. (௬௭)

கிட்கிந்தாகாண்டம் முற்றுப்பெற்றது.

ஆகச் செய்யுள் ௩௪௮.

# ௫. சுந்தரகாண்டம்.

வலிகெழுமு வாயுசுதன் மகேந்திரமா மலைநின்று வான மாறு யலைகுழுமு கடல்கடப்பான் மைந்நாக கிரிகண்டே யமரருய்த்த வுலைவிற்றற் சுரசையைவென் றெதிர்ந்திடுசிம் மிகையென்னு முரத்த மாதை, மலைதல்புரிந் துயிர்வீட்டி யெழிலிலங்கா தீபத்து வாவி யுற் றான். (க)

இலங்கையிலவ் விலம்பப்பே ரெழின்மலையி னுயர்சிகரத் தெ ய்தி மிக்க, பொலங்கொளுமந் நகர்நோக்கி யதனிடைத்தா னெளிதே யே புகுதற் கொத்த,நலங்கொளுஞ்சிற் றுருவமைந்து நகரருகே யஞ் சனைசேய் நண்ண வானிற், றுலங்கொளிய கதிர்பரப்பி நிசாபதியுந் துணையாகத் தோன்றி னானல். (உ)

நகரிடைச்செல் லனுமானை யெதிர்த்திலங்கை யெனுநாம நங் கை புக்குத், தகைதரவன் னனவனை வெலவவள்கே ளையமுனஞ் சலச மேயான், பகைகொளொரு குரங்கின்கை நீபடுநா ளரக்கரெ லாம் படுநா ளென்று, னிகழுமுன தெணமுடிப்பாய் சென்றிடுதி யென்றுரைத்து நீங்குற் றனளால். (ங)

அகப்பாவைக் கடந்துநக ரகம்புகுந்தே யஞ்சனைசேய் யணிகொ டங்க, நகப்பான்மை யேதெரிக்கு மரக்கருறு மாளிகைக ளுடி நாடி மிகப்பார்த்துப் புரிநடுவ ணரணுக விராவணனுன் மேவ வைத்த பகைப்பாரு மிக்கமுரட் சேனையையு மோர்புறத்துப் பார்த்தான் மன்றே. (ச)

காயமிசைக் கதிர்பரப்பிக் கலாநிதிதண் ணெனவெழுந்து கருளை நீக்கி, யேயவரு திறனோக்கி யுளமகிழ்ந்து கேசரிசே யெழிலே கொ ண்டு, மேயபுரி யிடையுள்ள பற்பலரா மரக்கியரை விடாது நோக் கித், தூயவலங் கொளுங்கற்பார் சீதையைக்கண் டிலனென்னத் து ன்புற் றனனே. (௫)

ஈட்டுதவ மிகையானே யெய்தரிய திலையென்றே யெய்தி னார் க்குக், காட்டவமைத் துளவென்னக் கணிப்பிறிரு வுடனரக்கர் களி த்து மேவு, நாட்டமுறற் கரிதாகி நகரிடையே நிரைநிரையாய் நண் ணு மெண்ணில், வீட்டினகம் புகுந்தனுமான் சானகியார் மேவி டமே விழைந்து காண்பான். (சு)

மற்றுமுள மனைகடொறு மலர்வாவு மளியென்ன வந்து புக்கங் குற்றதல மொவ்வொன்று மொழியாது வைதேகி யுளளோ வென்று முற்றவுநோக் குற்றயலார் புட்பகமு நாடினான் முன்னம் பானு சொற்றிடவன் றாற்றொடர்ந்தே யைந்திர நூன் முற்றுமுணர் சுபதி யானே. (எ)

பொன்னிடையே மணிகுயிற்றிப் புனைந்துடையார் நினைத்தவி டம் புகுது மாற்ற, றன்னிடையே யுள்தாக முனமவிசுவ கருமனாற் றந்த வந்த, வின்னிடையார் புட்பகமா விமானத்தி லெனையாளு மிரா மன் றேவி, துன்னினளோ வெனமுற்றுந் துருவினான் கால்பெற்ற தோன்றறன் மாதோ. (அ)

ஈரைந்து முடியுடையா னரண்மனையு மியைதிருவி னியல்பு மன்னா, னேரங்க முறுமடவார் பலரோடு துயிறிறனு மெண்ணிக் கால்சேய், பாரெங்கு மிலையிவனுக் கிணையென்ன வியந்திந்தப் பத கன் றன்னைச், சீரொன்ற வழித்திடுமால் சீதாப காரமெனச் சிந்தை தேர்ந்தான். (கூ)

அயன்றந்த வரத்தானே யடிப்படுத்து மூவுலகு மாண்டு மே லான், சயந்தந்து துயில்கின்ற தசக்கிரிவற் சூழ்ந்துறக்கந் தருகா லத்து, மியந்தந்த கரத்தினரா யியையுமட மாதரையு மிவளோ வந்த, மயன்றந்தா ளெனச்சயனங் கொள்வனையுங் கண்டனனால் வாயு மைந்தன். (க0)

தாக்கணங்கே நிகருமண்டோ தரியையனு மான்கண்டித் தைய லாவாள், பாக்கியமென் சானகியார் தாமோவென் றவட்குரிய ப ண்பை யன்னா, னோக்கியல ளெனவிடுத்துப் பானமுறு சாலையினு நுவலு மற்றைப், போக்குளவெத் தானத்தும் புகுந்துதுரு வினன் றிறல்கொள் புந்தி யானே. (கக)

சானகியைக் காணாது தளர்ந்தவுளத் தினனாகிச் சலதி தாண்டி நாணிவண்வந் ததும்வீணே கருமமுற்று தவ்வயிற்போய் நண்ணி லெல்லா, வானரரு முயிர்விடுப்ப முயல்கிற்ப ரெனநினைந்து வருந்தி ப் பின்னு, மானபுலம் பலபுகுந்து நேடினான் றிடங்கொண்டே யனி லன் செம்மல். (கஉ)

அஞ்சனைசேய் சானகியெவ் வகத்துமில ளுயிர்நீத்தே யகன்று ள் யானும், விஞ்சுமலை திருமுறலில் வீதலை நலனென்று விரும்பு மேல்வை, மஞ்சுசூல வசோகவனங் கண்டதனிற் றேடவுளம் வலித் துத் தேவர்க், கஞ்சலிநன் கியற்றி னவரருள்கொண் டிடவேண்டி யந்தி மாதோ. (௧௩)

மன்றன்மலர்த் தடஞ்சினைய வசோகவனத் தாசுகன்சேய் வந் து காயஞ், சென்றுவெளி நிறைத்தெழுந்த சிஞ்சுபைப்பேர் மரத் தேறித் திருந்த நோக்கி, நின்றெழில்செய் யிவ்வனத்திற் சானகி யா ரிருப்பரெனி னெறிவ ழாது, நன்றுபுரி தருஞ்சந்திக் கெழுந்த ருள்வ ரிவணென்ன நண்ணி னானல். (௧௪)

காற்றின்மக னவ்வனத்தோர் கனகமா ளிகையையுநற் கமலம் பூத்த, தோற்றமுறு பொற்கொடியாய்க் கொடியரா மரக்கியராற் சூழப் பெற்று, நாற்றிசைபோற் றிடுமழகார் நங்கையடை யாளங்க ணன்கு நாடி, யேற்றமிகு மிவரேநம் மிராகவனார் தேவியரென் றெ ண்ணி னானல். (௧௫)

உலகுடையான் றிருத்தேவி திருமேனி யுறுநிலையு முரைத்தற் கெட்டா, வலகிலுயர்க் கடலிடைப்புக் கழிதிறனு முள்ளபரி சமைய நோக்கி, நிலைகுலையு மனத்தினனாய் வானரனும் வாயுசுத னெடிது வாய்விட், டலறியழு தனன்றங்க ளன்னையிடர் கண்டெவர்க ளாற்ற வல்லார். (௧௬)

கண்ணொன்று முகமிரண்டு முலைமூன்று கரங்கள்பல கருங்கன் மேனி, மண்ணொன்ற நாலுமித ழரக்கியரா யத்துமகி வந்த மாதைப் பண்ணொன்று மொழியாளைக் கண்டுமகிழ்ந் திராக்கதிகள் பாரா வ ண்ணம், விண்ணொன்று சிஞ்சுபையாம் விருக்கத்து மாருதிதன் மெ ய்கொண் டுற்றான். (௧௭)

அருக்கனுதித் திடற்குமுன மரக்கர்பிரான் பலமாத ரருகு போதத், திருக்கிளர்சா னகியாரைக் காணவருந் திறனோக்கித் திற ற்காற் செம்மன்,மருக்கிளர்பூச் சிஞ்சுபைக்கீழ்க் கொம்பரிடை யிழிந் துதனை வருமவ் வேந்த, னிருக்குமிட மெளிதறிதற் கரிதாக விருந்த னனு லியாவும் வல்லான். (௧௮)

விரதமே யணியாகக் கொண்டுதிரு மேனிமிக மெலிந்து சாம்பி வரதனு மிராகவனைக் காண்பனென வுயிரோம்பு மாத ராளை, நரகமே தருந்தொழில னிராவணன்மா மதச்செருக்கா னண்ணி நோக்கி முரசமோ லிடுங்கடையன் றன்னெண்ண மவட்கோத முயன்றான் மாதோ. (௧௯)

தேவர்முனி வரர்முதலோர் செய்தவத்தின் பலனனைத்துந் திரட்டிப் பொன்னின், பாவையென வுலகுய்யப் படிதந்த சானகியைப் பார்த்தி லங்கா, காவலன்மா மோகத்தால் வசஞ்செய்ய நினைத்துரைகள் கணிப்பி லாத, வேவல்புரி வாரினுமிக் கிழிதகவு பூண்டோதி யிரந்தான் மன்னோ. (௨௦)

சண்டாள னுமவனைச் சானகிநோக் கிலளாகிச் சாரும் புல்லைக் கொண்டேய முற்போட்டுக் கூறுமவ னுரைகடுத்துக் கூறி ராமன் பெண்டாய வெனையவன்பால் விடுகிலையே னின்சிரங்கள் பிறங்கீரைந்துந், துண்டாடப் படலுண்மை யறிதியென வுரைத்தனளோர் தோழ மில்லாள். (௨௧)

இருமதியி னுடன்படா யெனிற்றின்பே னின்னையென விலங்கை வேந்த, னொருமதியி னினையின்னே சாம்பரா யொழிவிப்பே னுடையா னாணை, யருமையினாற் புரிகிலே னெனச்சீதை யரக்கியரை யன்னா னோக்கித், திருமுறநீ ரிவளைவசப் படச்செய்மி னென்றுரைத்துச் சென்றான் றன்னில். (௨௨)

ஏகசடை யெனுநாமத் தரக்கியரே முதலினர்க ளியாருந் தொக்குச், சோகமுறும் வைதேகி தனைநோக்கித் தொகுத்தியாஞ் சொல்வ நன்றே, நாகமுத லடிப்படுத்தா னிராவணற்குப் பாரியாய் நங்காய் நீயின், றுகவுடன் படுதியென மிக்கிரந்து வேண்டினர்க ளறிவின் மாக்கள். (௨௩)

உன்மத்த மதியுடைய வரக்கியர்கள் சானகியை யுறுக்கி நோக்கிப், பொன்மத்த முடித்தபிரான் மலையெடுத்தாற் கில்லாகப் பொருந்தி நிற்குங், கன்மத்தை யாகிலையேற் கொன்றுகறித் திடுவமெனக் கனன்று கூறத், தன்மத்தை நிறுவவருந் திருமாது பயந்தழுது தளர்ந்தாண் மாதோ. (௨௪)

பொல்லாத வரக்கியரைக் காகுத்தன் மனையாட்டி பொருந்த நோக்கி, யெல்லீரு மறியிரோ மானுடமா திராக்கதனுக் கியையா ளென்னல், சொல்லீரே யெனவோதி யசோகதருக் கொம்பர்கரஞ் சூழப் பற்றி, யல்லீருங் கருங்குழலா ளலகிறுயர் கொண்டுமனத் தழுங்கி னாளே. (உரு)

அளக்கரிய பெருங்கருணைக் காகரனு மிராகவன்றன் னடிய ளாய, கிளக்கரிய விடரேனைத் தேடிவரா மைக்குநிபங் கேடா னென் றன், விளக்கரிய வினைப்பயனே யல்லதிலை வாழ்வினியான் விரும் பா திந்தத்,துளக்கமுறு முடல்விடலே நலமென்று வைதேகி துணி ந்தாண் மன்னோ. (உசு)

* சியத்தின்முனந் தாவிரா கவற்கேய்வான் புதல்விதிரி சடைதா ன் சீதாய், பயத்தையொழி தருதிபான் கண்டகன நின்னன்பார் பதிக்கு மிக்க, செயத்தையுமவ் விராவணனுக் கழிவினையுஞ் செய்யு மெனச் செப்பக் கேட்ட, நயத்தமொழி யாட்கிடது கண்டுடித்தன் முதற்குறிக ணன்கா வேய்ந்த. (உஎ)

அரக்கியர்கள் சூழ்ந்துபுரி யல்லலைத்தா னாற்றுகில ளாகிச் சீதை, பரக்கவெழுந் துயர்கிளைய சிஞ்சுபைபிற் சடைபிணித்துப் பற்று மாவி, துரக்கநினைந் திடுபொழுது முன்னுற்ற குறிகளினுஞ் சுபங்கண் முற்றக், கரக்கிலா தளித்திடுநற் சகுனங்கள் பலவெய் தக் கண்டாண் மன்னோ. (உஅ)

ஒப்பிறையும் பெறலரிய வுயர்கற்பார் சானகிதன் னொளிரும் வாமச், செப்பமுறு மொய்ம்புகவா னயனமிவை துடிக்கின்ற திற த்தை நோக்கித், தப்பிலைபின் னன்னிமித்தந் தால்விரைந்து கேட் டிடுமென் றன்னை ரில்லா,மைப்புயனோர் தருமெனது நாயகனூர் வர வெனவெ மகிழ்வுற்றாளே. (உகூ)

மேற்கூறும் விளையனைத்தும் விழியெதிர்கண் டஞ்சனைசேய் வேழந் தேனற், பாற்கூறு செயுமினிய மொழிச்சனகி தனைத்தேற் றப் பரிந்தெத் தேவுங், காற்கூறு மிணையிலா விராகவனற் குணம ன்னாள் காதிற் கேறி, மாற்கூறு செய்துமகிழ்ந் திடப்படிப்ப னெ னமனத்து வலித்தான் மன்னோ. (௩0)

* சியத்தின்முனந்தா - சியத்தின் முனம் தா, தாசியம்.

மானவன்சீ ரெடுத்துரைக்கும் வாயுசுதன் வானரர்கோன் மங்கை சீதை, தானுறையு மிடந்தேட விடுத்தாரில் யானொருவன் சலதி தாண்டி, வானவர்போற் றிலங்கைநகர் வந்துகண்டே னவளை யென வழங்கும் வார்த்தை, சானகிகேட் டஞ்சனைசேய் தனைப்பார்த்தாள் சிஞ்சுபைப்பேர்த் தருவின் மாதோ. (௩க)

சனகன்மக ளக்காலை தான்கேட்ட தாசரதி சரித முற்றுங் கனவுதர நிகழ்ந்ததுகொ லெனவயிர்த்தல் தன்றென்னக் கலக்க நீங்கி, மனமகிழு மாறிந்த வானரஞ்சொற் றதுமுற்ற மாரு வண்ணமினமுறுஞ்சீர்த் தேவரெலா மருள்புரிக வெனக்கூறி யிரந்தாண் மன்னோ. (௩உ)

சிஞ்சுபைப்பேர்த் தருவிழிந்து திருவுமிணை யிலளாகுஞ் சீதை தன்னை, யஞ்சனைசேய் நீவிரியா ரெனவினவத் தன்வரலா ருதி தொட்டு, வஞ்சனையாற் றசக்கிரிவன் கொடுவந்தவ் வசோகவனம் வைத்த தீரு, நெஞ்சிடைக்கொண் டவனுணர வொன்றிகவா தனைத்தினையு நிகழ்த்தி னளால். (௩௩)

சீராமன் முதலானோர் சுபமுரைத்துச் சீதைமகிழ் சிறப்பச் செய்து, நேராக வரவனுமா னிராவணனோ விவனென்ன நினைத்து நீதான், பேராரு மிராமன்விடு தூதனெனி லவன்குணங்கள் பேசு கென்னச், சோராம லெடுத்தோதிச் சங்கையென்பால் விடுகவெனத் தொழுது சொற்றான். (௩ச)

இராமனெழிற் றிருமேனி யிலக்கணமு நிறைபண்பு மிரவி மைந்தன், விராவுறுதோ ழமையவன்பாற் கொளுந்திறனு மவன்விடுப்ப விண்ணோ யாருய்ப், பராவுமலைக் கடல்கடந்திவ் வசோகவனந் தான்வந்த பரிசுங் கால்சேய், தராதருமத் திருமாதுக் குரைத்தையந் தவிர்த்தனனாற் றன்பான் மன்னோ. (௩ரு)

கந்தவகன் மகன்றந்த கணையாழி சானகிகை கலப்ப ராமன் சுந்தரப்பேர் கண்டவனை யடைந்தனளே யாயுவந்து சுசனன் ரோன்றன், முந்துமிசை யோயெனநின் றனைநினைந்தே யிராகவனுன் முற்று நீப்பா, னெந்திடத்தை யென்றறியா ளுதலின்வந் திலனென்ன விசைத்தான் மன்னோ. (௩சு)

திங்களிரண் டகலிலென துயிரொழிப்பெ னெனவிங்ஙன் சேர்ந்து செப்பிப், பங்கமுறு மிராவணன்சென் றனனென்று மவனுவி பறித்து நீக்கிப், புங்கமுறு மிராகவனே யிலங்கையினின் றெனைமீட்டுப் போக வென்றுந், துங்கமுறுந் தவச்சனக னெழிற்றனையை மாருதிக்குச் சொற்றுண் மன்னோ. (௩௭)

திருந்துநுதல் வைதேகி யிராகவனூ தனைநோக்கிச் சித்ர கூடத், திருந்திடுநா ளியைகாகா சுரன்கதையை யறிகுறியா யென்கோக்கோதிப், பொருந்தொளிய விம்மணியு மவன்கரத்தே யீதியெனப் புகன்று காதன், மருந்தனைய தாஞ்சூடா மணியைமகிழ் கொளவவன்கை வழங்கி னளே. (௩௮)

இளங்கோவு மிராகவனு மெவ்வாறிவ் விலங்கைநகர்க் கெய்துவார்மேற், றுளங்கோலக் கடல்கடந்து மாருதியே சொல்லென்னத் தூய சீதாய், வளங்கோலு மெனதுபுயத் திருபேரு மெழுந்தருள்வர் மன்முற் றோன்ற, லுளங்கோடு மிராவணனை யொழித்துமது பதியடைவ னுறுதி யென்றான். (௩௯)

வந்துதவ வந்தானுக் ககிலமளித் திடுமாது மணாளன் முன்னந் தந்தனனென் கபோலத்து மனோசிலையாற் றிலதமெனச் சாற்ற நன்கென், றந்தவடை யாளமுங்கொண் டவள்கொடுத்த விடையும்பெற் றனுமா னின்னு, முந்துறுகா ரியமியாதி யான்முடித்தல் வேண்டுமென முன்னி னானே. (௪0)

அசையாத வன்னெஞ்சத் தரக்கர்பிரா னுளத்துவிர கறிதற் கன்னு, னிசையாரு முன்றிலிற்புக் கெதிர்கொள்வா னுபாயமிது வென்னத் தேறித், திசையாறு டொருநான்குஞ் செலுமிரதன் மகன்றூதன் சென்று சேணின், மிசையாரு மசோகவனந் தனைக்கணத்தின் முறித்தழித்து வீழ்த்தி னானே. (௪௧)

அரக்கியர்க ளசக்கிரிவன் முன்னருறீஇ யசோகவன மைய வின்றோர், குரக்கினழி வினையுற்ற தெனவோதக் கேட்டுள்ளங் கொதித்தன் னானற், றரக்குமிரு நான்கயுதக் கிங்கரப்பே ரிராக்கதரைத் தொலைய நூறி, யிரக்கமொழி யுவராவி யமனுக்கு விருந்திட்டா னிசைகொள் கால்சேய். (௪௨)

விரைகொண்டு திசையளக்கும் விடபிசுல வசோகவன மேவிச் செம்பொன், வரைகண்ட தெனவொளிகொள் வனப்புறுமா ளிகை யோடு வலியீ தென்னக், கரைகண்டு சொலற்கரிய காவலர்நூ றரக் கரையுங் கணத்தி னுள்ளே, யுரைகொண்ட புகழாள னிராகவதூ துவனழித்தே யொழித்தான் மன்னே. (சங)

மற்றுமிரா வணன்விடுத்த பிரகத்தன் மகன்சம்பு மாலி யோடு சுற்றுறுமா சதுரங்க சேனையுந்தன் முன்வந்து தொக்க தாகக் கொற்றமிகு தலைவனையு முடன்போந்த கணத்துடனே கூற்றுக் கா க்கி, வெற்றியையே கொண்டிருந்தான் வாயுசுத னவன்றிறலார் வி ளம்ப வல்லார். (சச)

வந்தெழுநாச் சுவாலையென் மந்திரியர் தந்தவெழு மைந்தர் நேர்ந்து, நந்தவிலா வனுமானை நகமீது மூகிலெழு நண்ணி நின்று சிந்துறுமா வருடமெனச் சரமாரி பொழிதரக்காற் சிறுவன் சீற்ற முந்துறத்தன் கரமாதி யேழின்வலி கொண்டவரை முடிவித் தா னே. (சரு)

தீயவினைக் கென்றுகரஞ் சிரம்பலவாக் கொளுமரக்கன் செல்ல வுய்த்த, மாயைவல விருபாக்கன் யூபாக்கன் றுர்த்தரனே வலியொ டாண்மை, மேயபிர கசன்பாச கருணனெனும் பெயர்ச்சேனை வீர ரைவர், போயொழிந்த விடமறியா துடலழித்தான் மருத்துதவும் புதல்வன் மன்னே. (சசு)

மீக்குயர்மா தவவலமு முடல்வலமு நேராரை வென்றே மீளத் தக்ககணை யாதியுங்கொ டசக்கிரிவன் றருமைந்தன் றன்னே ரில்லா, னக்கனெனு மபிதான னளவில்படை யுடனெதிர வனுமா னேர்ந்து, கைக்கடுமை யாலவனைப் புவியிலடித் துடல்வீட்டிக் களித்தான் மன் னே. (சஎ)

இந்திரனை வென்றிசைகொ ளெழிற்படையான் பல்படையு மியையக் கூட்டி, வந்தனுமனுடனெதிர்ந்து போராற்றி யாற்றுனைய் மலரின் மேலான், றந்தபடை தொடுத்தவனைப் பிணித்துலக மெவற் றினிலுந் தன்கோ லோச்சு, மைந்துடைய விராவணனுந் தந்தைபால் வல்லைகொடு வந்தான் மன்னே. (சஅ)

மீவருமா மதிபிறிதே யெனமுத்தின் குடைநிழற்ற விருப்ப நோக்கித், தேவருநன் கேவல்செய வாதனத்தி லிருந்தரசு செலுத்தா நின்ற, காவலனை யீரைந்து முடியானைக் கண்டிவன்சீர் கணிக்க வல்லா, ரேவரென மனத்தெண்ணி யஞ்சனைசே யிறும்பூதங் கெய்தினனே. (சகூ)

மன்னனெதிர் கொண்டுற்ற வானரனைப் பிரகத்தன் மதர்த்துப் பார்த்தே, யின்னவனீ யெவன்விடுக்க வந்தனையிங் கியம்புகென வெழுகாற் செம்ம, லன்னவனுக் கொன்றுரையா னிராவணனை முகநோக்கி யறியாய் கொல்லோ, முன்னவனவ் விராகவனால் விடுதூதனியானென்ன மொழிந்தான் மன்னோ. (ருo)

வளிவழியவ் விராவணற்கு வனத்திலிரா கவன்முன்னம் வந்ததாதி, தெளிவுறத்தா னிவண்மேய வரையோதிச் சானகியாஞ் சீர்கொள் கற்பி, னொளிர்மணியை யிராமனிடத் துய்க்கினல முறுவையுஃ தன்றேலென்னி, னெளிதலகின் னுயிரோம்ப லெனவிதமே பெறும்வண்ண மிசைத்தான் மன்னோ. (ருக)

என்றுரைத்த வானரனைக் கொன்றிடுமி னெனச்சினந்தவ் விலங்கை வேந்த, னன்றுரைத்த தறந்திறம்பா வீடணன்கேட் டழகன்றுலைய தூது, சென்றுரைத்தா னனைக்கோற லெனத்தடுத்து விருபனுச் செய்து போக்க, லின்றடுத்த தாமென்ன வோதிடமுன் னோனுமதற் கிசைவுற் றனே. (ருஉ)

காலிலிகால் வாலதியிற் கனல்கொளுவி யரக்கரும்பின் கலந்தவ் வூரைக், கோலிவர வைதேகி யருள்செயலாற் றனஞ்சயனுங் குளிர்ந்து மேவச், சீலமுறு மவன்றனுட றனைச்சுருக்கிப் பிணிவீட்டிச் சேர வந்த, காலமொழி யரக்கருயிர் காலனூர் பதிக்கேற்றிக் களித்தான் மன்னோ. (ருங)

விச்சையினாற் சிறந்தொளிரும் வீடணனூர் மனையொன்றும் விட்டி லங்கை, யச்சமிலா விராவணன்மா ளிகைமுதலா வரக்கருறு மகங்கண் முற்றும், புச்சமுறக் கிளர்ந்தொளிருங் கிச்சினையிட் டெரித்தழித்துப் பொடிசெய் தானுன், மெச்சுபுக ழஞ்சனைசே யங்நகர்கொ டுயரெவரே விளம்ப வல்லார். (ருச)

எம்பெருமான் றிருத்தேவி யெரியிடைப்பட் டனளோவென்
றெண்ணி யுள்ளம், வெம்பியுறு மஞ்சனைசேய் சாரணர்சொற் றிடத்
தெளிவு மேவிப் பின்னுஞ், செம்பதுமை நிகரிரகு பதிமனையை
யிவணின்று சென்று கண்டே, பம்புமலைக் கடல்கடந்து போதருவெ
னெனமனத்துப் பற்றி னானல். (ருரு)

சானகியைக் கண்டுமகிழ்ந் தவள்கொடுத்த விடைபெற்றுத் தனது
தாளான், மேனிமிர வெழுமரிட்ட மெனுமலையை யுதைத்துமகி விட்
டுக் கீழாந், தானமுறப் புரிந்துவிறல் கொளும்வாயு சுதனிலங்கை
தன்னை நீங்கி, வானகமே செலுமாழுய் மிகுதுனைவி னுடனெழுந்து
வழிக்கொண் டானல். (ருசூ)

அரிதந்தான் கடருண்டி வருதிமிலஞ் சாம்பவன்முன் னானர்
கேட்டுத், தெரிதந்தே மீள்கின்றான் சீதையையென் றுளமகிழ்காற்
சேணி னீங்கி, விரிதந்த புகழனுமான் கண்டேன்சா னகியையென
விளம்ப வன்னா, ரிரிதந்த தாதியிவ ணடைந்தவரை நடந்தவெலா
மியம்பு கென்றார். (ருஎ)

தனைநோக்கி மிகவிழைந்து சாற்றுகெனும் வானரர்க்குச் சலனன்
றந்தான், மனவூக்க முடனெழுந்து மகோததியைக் கடந்திலங்கை
மன்னி யங்ஙன், வினையாக்க ரெட்டிவண்வந் தடைகாறு நடந்தவெ
லாம் விளம்பக் கேட்டு, நினையாக்கு தவத்தினரை நிகர்வரெவ ரென
வவர்தா நிகழ்த் தினரே. (ருஅ)

சீதைதுயர் நினைந்தனுமான் காலநீட் டிடலொழித்துச் சென்
றெல் லோருங், கோதுநிறை தருமரக்க னுயிர்நீத்துச் சானகியைக்
கொண்டு போந்து, வேதநெறி தவறும லொழுகிரா கவன்பின்னோன்
விடுப்ப மேவப், போதனல னென்றுசாம் பவன்முதலோர் தமையு
முளம் பொருந்தச் செய்தான். (ருகூ)

ஆசுகன்சேய் சொற்றவணஞ் செயநினைத்த வங்கதனை யமைய
நோக்கித், தேசுதிக ழெண்கினிறை தகவன்றிச் செயலென்னச் செ
ப்பிப் பின்னு, மாசில்புக ழிராகவனார் நியமனத்தின் படிசெயலே
யழகிற் றென்னப், பேசியவர் கொளுஞ்சூழ்ச்சி மாற்றுவித்தா னியா
வரினும் பெரிய னன்றே. (சூ0)

வாலிசுதன் முதலாய வானரர்க ளிராமன்பால் வருதற் கெண்ணி, யேலவவ ணின்றெழுந்து செலுமிடையின் மதுவனத்தை யெய்தி யக்கான், சாலுமது வருந்திவனந் தனையழித்துத் ததிமுகன்முதலியோர் தம்மைத், தூலமருத் தெதிர்ந்துபடு நிலையடைய மிகமோதித் துரத்தி னரால். (சுக)

அங்கதனைத் துணைக்கொண்டு பிலவங்கர் பிரசவன மழிக்க வன்னார், தங்களையவ் வடவிகா வலர்முற்று நேர்ந்தாற்றுத் தன்மை யெண்ணி, யிங்கியான் புரிதிறன்மற் றிலையரச னிடஞ்சென்றே யிசைப்பனென்னப், பொங்கியெழு சினத்தததி முகனிரவி புதல்வனடி போற்றி னன்போய். (சுஉ)

அரியினங்க ணறைப்பழுவ மழித்ததெனத் ததிமுகன்வந்துறையக் கேட்டு, விரிகதிரோன் சுதன்மகிழ்ந்து வானரர்சா னகியிருக்கை மேவக் கண்டே, திரிதரலுற் றனரென்ன விளையானுக் குரைத்திதனைச் செப்பி நின்று, பரிவுறுமத் ததிமுகனுக் கவரைவிரைந் திவண்வரநீ பகர்தி யென்றான். (சுங)

இரவிமக னுடனிருக்கு மிராகவனை வானரர்வந் தெய்தச் சென்று, பரவுமலை திருமுற்றன் கண்டேன்சா னகியையெனப் பகரக் கேட்டு, விரைவிலெழு மிகுகளிப்பா லிராமனனு மானையருண் மேவுநோக்காற், றிரமுறப்பஃ றரநோக்கஞ் செய்தனனன் புடைமை நன்குதெரிய வம்மா. (சுச)

வீங்குபுகழ் கொளுமனுமா னிராகவன்பான் மிகுவினைய மேவிநின்றே, யோங்கலைசூ ழிலங்கையிற்சா னகிசெயலு னிற்றென்ன வுள்ள யாவும், பாங்குறச்சொற் றெப்பினிறை கற்பினணிற் களித்ததெனப் பரந்து சோதி, தாங்குமெழிற் சூடைமணி தனையுமவன் றிருக்கரத்துத் தந்தான் மன்னே. (சுரு)

சரயுவெனு மாநதிசூழ் கோசலமன் சனகனுயர் தவத்திற் றோன்றும், பரவுமெழின் வைதேகி சிரக்கணியா மம்மணியைப் பார்த்தே னன்றி, விரவியபே ரன்பென்பா லெஞ்ஞான்று நீங்காத மேதை யாளை, யிரவொளிசெய் மதிமுகத்தா டனையின்னுங் கண்டிலனே யெனச்சோர் வுற்றான். (சுசு)

நோக்கறிந்து நுவல்வலா னையிந்திர நூல் முற்றுய்ந்து நுண்மை வாய்ந்த, வாக்கியல்கொ ளஞ்சனைசே யிராகவனு நாயகனை வணங்கி நின்று, பாக்கியமார் நின்மனைவி யிம்மொழிக ளனையுன்பாற் பணி த்தி யென்னத், தூக்கியுரைத் தனளென்றே யோதியதொன் ளுழி யாமற் சொற்றான் மன்னோ. (௬௭)

சிந்துவையெவ் வாறகல்வி ரெனக்கேட்ட சானகிக்குச் சேனை முற்றும், வந்துறுமவ் வானகமே வழியாக மன்மகரென் வல்ல வா கின், முந்துறப்போந் திராவணனைக் கொன்றுன்னை மீட்பருண்மை மொழியீ தென்றே, யந்திலுரைத் தனனென்ன விராகவனுக் கஞ்ச னைசே யறைந்தான் மன்னோ. (௬௮)

சுந்தர காண்டம் முற்றும்.

ஆகக் காண்டம் ஐந்திற்குச் செய்யுள் (௩௭௬).

---

# ௬. உயுத்த காண்டம்.

---

மன்னுமனு நெறிபிறழா தாதரிப்பான் றசரதற்கு மைந்த னாக வுன்னுபுவி யவதரித்த விராகவன்சா னகிசெயல்கேட் டுவப்புற் றுள்ள, மன்னமகி ழிரவிசுத னுதியரு முறப்புரிந்தே யனுமா னென் னும், பொன்னனையாற் கெழிற்சீதை கொண்டிடுமா லிங்கனமே புரி வொ டீந்தான். (௧)

கடக்கரிய சலநிதியை யெவ்வாற்று லியாமின்னே கடப்பே மென்று, மடக்கொடியாஞ் சானகியை விரைந்தடைந்து மகிழ்ந்திட லெவ் வண்ணத் தென்று, மிடர்ப்படுமா மதியினனு மிராகவனுக் கிசைவுபெற வின்சொற் பல்ல, சுடர்க்கடவு டருபுதல்வன் சொற்று மனச் சோகமறத் துரத்தி னுனல். (௨)

மறையாலுந் தேறரிய தாசரதி மரைநண்பன் மைந்தன் தேற் ற, விறையாறி யஞ்சனைசேய் தனைநோக்கி யிசைக்குகநீ யிலங்கை வேந்தன், சிறையாகு மரண்புரிசை புகழ்சேனைத் திறந்திறம்பா தெ ன்ன வன்னுன், முறையானே கண்டவழி யொன்றிகவா தெடுத்த னைத்து மொழிந்தான் மன்னோ. (௩)

தந்திரத்தோ டிவ்விசய முகூர்த்தத்தி லெழுகெனவெற் றனை யற் கோதி, யிந்திரன்சேய் சேயிலிவ ரிளையாயென் றிராமன்கா லி ன்சேய் தோண்மேல், வந்துசூல வனிகமுட னிரவுபக னடந்துசைய மலைச்சார் பேகி, முந்துமலை குழுமுகடற் கரையணைந்து நோக்கிமு த முற்று னன்றே. (௪)

அலைகடல்கண் டிரகுபதி யகத்துமனை தனைநினையா வாலுந் தென்று, லுலைவிலுப காரியெனிற் சீதையைத்தொட் டென்னுடல் மீ துறுதி யென்று, நிலையறியாப் பெருநதி குளித்தாலும் விரகவ னீங்கா தென்றும், பலபலவா யிசைத்திரங்க விலக்குவன்சொல் வலத்தாலப் பரிவு தீர்த்தான். (௫)

காற்றின்மக னியற்றியெழுங் காரியங்கண் டகநடுங்கிக் கரநா லந்தான், றேற்றமுறு மமாத்தியர்க டமைநோக்கி யிராகவனுஞ் செறுநன் றன்னை, யாற்றலமை சேனையுடன் றடுத்தழித்தற் காமு றைநீ ரமையச் சூழ்ந்து, போற்றிடுமி னிப்பொழுதே யிதுநமது க டனென்னப் புகன்றான் மாதோ. (௬)

சராசனமார் திருக்கரத்துத் தாசரதிக் கியைவலியுந் தசக்கி ரீ வன், பொராவருமத் திசைவிசையத் திந்திரசித் தியற்றும்விறற் பொலிவு நோக்கி, விராவுறுநற் சூழ்ச்சிவலார் வேறுதுணை வேண் டாதே மேவு போரி, லிராகவனை வென்றிகொளற் கிராவணியே போதுமென வெண்ணி னரால். (எ)

வலனுயரும் பிரகத்தன் றுன்முகன்வச் சிரதந்தன் மாநி கும் ப, னுலைவிறிற லின்னோர்தம் வலியோதி யெங்களிலொவ் வொருவ ர் தாமே, குலவிரகு மகன்மகற்கு மகனைவென்றி கொடுசணத்திற் கொல்வே மென்ன, நிலவுதெறு தனிக்கவிகை யிராவணனுக் கெடுத் துரைத்து நின்றார் மன்னோ. (அ)

மறமுரைக்கு மிராவணியே முதலினரை மறித்திலங்கை மன் பின் வாலி, திறலமரும் விராதனு தியர்ச்செற்ற விராகவனைச் செயி த்த லொல்லா, தறமொழிக்கும் பரதார கமனமடா தரும்பெறற்சா னகியை யின்னே, யுறவுடையார் பால்விடுக்க வேண்டுமெனத் தசக் கிரிவற் கோதி னுனல். (௯)

பின்னுமறு தினத்துதயத் திராவணன்பால் வீடணன்போய்ப் பிழைப்பில் கற்பார், தன்னுமெழில் வைதேகி நமதுநகர்க் கெய்திய நாட் டொட்டுண் டாய, வின்னறரும் பலகுறிகள் விட்டிடுதி யவளை யென வியம்பக் கேளா, தன்னவனைச் சினந்தகற்றி யடைந்தனனு னவனகத்தி லரக்கர் கோமான். (கம)

முன்பிறந்தான் முன்பிறந்தா னுகாமைக் கெண்ணியித மொழி யே யுந்தப், பின்பிறந்தான் பின்னுளு முரைத்திடக்கேட் டகங்கல ங்கிப் பெரியோ ருள்ளத், துன்பிறங்க வெண்ணிடுதற் குரியவரா மமைச்சரெலாஞ் சூழ வந்து, மின்பிறங்கு மணியாலும் பொன்னு லும் வனைந்தசபை மேவி னுனல். (கக)

என்னினைவின் படிபெற்ற சானகியை யிழந்துவிடா தெற்கு வந்தோ, னன்னவனை வெற்றிகொளு முபாயமுரைத் திடுமினென வவையு ளோர்க்கு, மன்னவன்கூ றிடக்கும்ப கனன்சினந்தி ராம னென மதியா தந்த, முன்னவனைப் பகைகொண்டா யானிதமே புரி வனென மொழிந்தான் மன்னே. (கஉ)

சலமிகுத்த விராவணனை மாபாரு சுவனேக்கித் தனைநே ரில் லா, நலமிகுத்த சானகிநிற் கியையாளேல் வலிந்தணைதி நம்ப வெ ன்னக், கொலைமிகுத்த கூர்வேலா னவ்வண்ண மியான்புரியக் கூடா தாகக், கலைநிலைத்தா ளுறைநாவான் சாபமுன முண்டென்னக் கழறி னுனல். (கங)

கோதண்டத் திருக்கரமா ரிரகுபதி திருமேனி கூடார் நோக்கி ன், மாதண்ட தரன்போலு மன்னுனை வெல்லவலார் மலரோன் செ ய்த, மூதண்டத் தெவருமிலை சானகியை விடிலரக்கர் முற்றும் வா ழ்வர், தீதண்ட விலாதலையன் மாய்வரென வீடணன்முன் செப்பி னுனே. (கச)

இந்திரசித் தெனுமிளையான் வீடணனை நிந்தைபல வியம்ப வ ன்னுன், மந்திரத்திற் குரியைபலை நீயறியா யென்றவனை வயிர்த் து மாற்றிச், செந்திருவை யொக்குமெழிற் சீதையைரா கவன்வயி னே சேர்க்கி னல்லா, னந்துதலை யுறலுறுதி யுணர்மின்க ளெனவ வர்க்கு நவின்முன் பின்னும். (கரு)

இதமுரைத்த வவன்மொழியை யிராவணன்கொண் டிலனாகி யெழுந்து பொங்கி, மதமிகுத்துக் குலக்கேட விடக்கடவை நீயென்ன மன்னன் பின்னோன், விதிவலியாற் கேட்டிலையா லென்புரிவை நின்னையுமிவ் விரிநீர் சூழ்ந்த, பதியையுநன் கோம்புகென்று பற்றறுத் திருவினனைப் படர்ந்தான் விண்மேல். (கசு)

வலியகதை கரங்கொண்டு மந்திரியர் நால்வரொடும் வந்தி ராம மெலியவருக் கருள்பரம சரணமென வீடணன்றான் விளம்ப மேலோ, னலியுமிவன் கொள்ளுதலுக் குரியானோ வுமதெண்ண நவில்வி ரென்ன, வலிமுகம ரதியரா கானெனவு மாவனென்றான் வாயு மைந்தன். (கஎ)

அடைந்தாரைப் புரந்தருளுங் காகுத்த னருக்கன்மக னன்பு தன்பான், மிடைந்தாரக் கலங்கினனுளமினென்னத் தன்வலியை விளங்கச் சொற்று, நடந்தாய கபோதகதை யொடுகண்டு வாக்கியமு நவின்று தேற்றி, யுடைந்தேய நிலையினனைப் புகுந்துவிரைந் தழைத்தியென வுரைத்தான் மன்னோ. (கஅ)

வந்துபணி யரக்கர்குல மானவனுக் கிராமனருள் வழங்கிப் பின்னேய், முந்திலங்கை நகர்க்கரசாய் முடிகவித்தி யிவற்கென்ன மொழிந்த வாறே, யந்திலவன் புரிந்திடமற் றலைகடலைக் கடற்கிறையை யடைக்க லம்புக், கெந்தைகடந் திடல்வேண்டு மென்றனன்வீடணனதனுக் கிசைந்தான் முன்னோன். (கசு)

சுலவுகடன் முன்னிரா மனதியர்சார்ந் தாரெனச்சார்த் தூலன் சாற்ற, வலனுயரு மிராவணன்கேட் டுய்த்திட்டான் சுகனையவன் மாற்றார் சேனை, கலவியவர் பாற்பேத முறுமுறைகள் பலகழறக் கனன்றனன் ஞானக், கொலைபுரிய முயலவவர் தமைத்தடுத்துத் தாசரதி கூடா தென்றான். (உ0)

தென்புணரி வடகரையிற் றினமூன்று நறுங்குசைமேற் சிதைகொண்கன், றன்பொருவி லான்சயனந் தந்துறவும் வருணனெதிர் சரரா னகை, முன்பெழுமா சினத்தினனா யனலம்பு தொடுத்திடவம் முந்நீர் வற்றித், துன்புறமா வுபிரினையான் பொறுத்தியென முன்னவற்குச் சொற்றான் மன்னோ. (உக)

கடற்கிறைதன் மீதுய்க்கும் பிரமசரக் கிலக்குமரு காந்தா ரத்
த, ருடற்பொறையென் றிராமனடி வணங்கியணை யென்மீதெ யுஞ
ற்று மென்ன, நடப்புறநா ளோரைந்தி னளற்கொண்டு சேதுசெய்து
நம்பி தம்பி, யடற்கதிர்சேய் சேனையுட னமரர்தொழச் சுவேலதர
மடைந்தான் மன்னோ. (உஉ)

வானரர்கொண் டிடுகல்லால் வாரிதியி லணைகட்டி வாவி வானி
ன், மேனிமிருஞ் சுவேலமலை யுறைவள்ளன் மேவுறுமா மிருபோ
ரென்றற், கானபல வுற்பாத மெய்துதல்கண் டிளையானுக் கனைத்துங்
காட்டித, தானினைத்த படிமுடியு மயிர்ப்பில்லை யெனவுள்ளந் தளிர்
த்தான் மன்னோ. (உங)

இலங்கையிது வெனக்காட்டி யிளையானுக் கிராகவனம் மிரவி
தோன்றல், பொலங்கொளுமா றணிவகுத்தி சாரணுஞ் சுகனையவுஞ்
போக்கா யென்ன, விலங்கியெழுஞ் சுகனரச மேவினர்மே வார்வலந்
தான் விளம்பற் காற்றே, னலங்கிளர்வை தேகியைவிட் டிடுதியென
வவனையிறை நலியச் சொற்றான். (உச)

மந்திரத்த னுஞ்சுகனுஞ் சாரணனுங் குரங்குருவம் வாய்ந்து
தங்க, டந்திரத்திற் புகுந்தசெயல் வீடணனோர்ந் திரகுபதி தனக்
குக் காட்ட, மைந்தமரு மவனுமே யிருவரும்வா னரர்நிரையை
வழாது கண்டு, வந்திலங்கை நகர்க்கிறைவ னுணர்தரவொன் றிக
வாது வழங்கி னரால். (உரு)

திசையானை விசைகலங்கச் செருப்புரிந்து மருப்பொசித்த திற
ல்கொள் கோமான், மிசையாரு மணிமாட முடியேறி வானரரை
விழைந்து நோக்க, விசையாரு மிவரிவரென் றெவ்வொருவர் தமை
யுமவற் கெடுத்துக் காட்டிக், குசையாரு முதன்மதியான் சாரணப்
பே ரான்றெளியக் கூறி னானல் (உசு)

பின்னுமந்தச் சாரணன்மாப் பிறங்கலெனப் பிறங்கிருபான்
பெருந்தோ ளாற்கு, முன்னருறு மரிக்குலத்தை முற்றுறநோக் குதி
யைய மொய்ம்பார் வீர, ரின்னவின்ன விலக்கணத்த ரெனவியம்பி
யிருநிலத்தி லிவர்க டம்மான், முன்னின்முடிக் கரிதாய செயலொன்
றுமில்லையென மொழிந்தி ருத்தான். (உஎ)

இருவரமாத் தியர்தம்மிற் சாரணனு ஷிசைகவிக ளின்றி வென் றிப், பொருவில்வலி யுடைமற்றை யரித்தலைவர் செயலோடவர் பு கழீ தென்னக், கருதுறுமா சூழ்ச்சிவல சுகனுரைப்ப வத்தனையுங் கருத்துட் கொண்டான், றிருநிலவு மிருநிலனு மெந்நிலனுந் திறை கொடசசிரத்துச் செம்மல். (உஅ)

வானரர்சீ ருரைத்தசுக சாரணரை யிகழ்ந்தவிரா வணன்று னுய்த்த, மானமுறு சார்த்தூலா தியரரிக ளாற்றுக்க வருந்தி யென் றுந், தீனர்திறத் தருள்கொளிரா கவன்கருணை செயவவணிற் றீர்ந் து மிக்க, தேனமரும் பொழில்சுலவு மிலங்கைநகர்க் கிறைமாடு செ ன்று சேர்ந்தார். (உகூ)

சாரனுஞ் சார்த்தூலன் முன்னோரை வரமவெதிருந் தசுக்கி ரீவ, னேரவே காண்டலுமன் னூர்காயக் காயமுமே னிமிர்ந்து பொங்கிச், சோரவா ரிரத்தமுமே வானரர்தம் வலியைமுனஞ் சொ ல்லிற் றேனுங், கூரவார் துன்பினருந் தெவ்வர்நிலை யிற்றெண்ணக் கூறி னூரால். (௩0)

மின்னுவான் றனைக்கொண்டு மாயையினாற் சிருட்டித்த வில்லு நாணுந், தென்னுருங் கதிர்ச்சூடா மணியுமிரா கவன்சிரமுஞ் சீதை காணப், பொன்னுரு மணிமௌலி யொருபதுளான் காட்டிடலும் புந்தி வேறு, யென்னுன வாறிதுதா னெனக்கலங்கி யிரங்கிமய லெ ய்துற் றுளால். (௩௧)

பாட்டளிசெய் தார்புரள விருபதெனு மெண்வரையிற் பணை த்த தோளான், காட்டுதலை முதலியன மெய்யெனவே சானகிதான் கருதிக் கஞ்ச, நாட்டமுறு முயிர்த்துணைவ னெவ்வாறு கொலப்பட் டா னோ வின்னும், வாட்டமுறு துயிருகப்ப னன்றேயென் வாழ் வென்ன வருந்தி னுளால். (௩௨)

வருத்தமுறுஞ் சீதைவயின் வீடணனூர் மனைசரமை வந்தி ராம, னெருத்தனழித் திடவழியா னவன்கோட்டை வாயிலில்வந் துற்ற தோர்ந்த, கருத்தினாற் சூழ்ச்சிசெய விரைகின்று னிராவண னீ காண்டி யென்று, திருத்தமுறத் தானுணர்ந்த வுண்மையவட் கெடுத்தோதித் தேற்றி னுளால். (௩௩)

சரமையைச்சா னகிநோக்கி மந்திரத்தின் முடிவறிந்து சாற்று கென்ன, விரைவுவளி யினுமன்னாண் மேவியுள வுணர்ந்துவந்தவ் வெய்ய வேந்தைத், தருசனனி கேகசியு மவித்தன்முதன் மந்திரியர் தாமுஞ் செய்யுங், கருமநினை விட்டிடலே யெனவவன்கேட் டில னென்னக் கழறி னாளால். (௫௪)

முன்னவனு மியாவுமுணர் மாலியவா னல்லறமே மூர்த்தங் கொண்ட, தென்னவொளி ரிராகவனை யாம்வெல்லோ மவற்கென் றே யிலங்கு கற்பார், பொன்னனைய சானகியை விட்டுறவு பூணுத லே பொருந்து மென்று, மன்னவருக் குரியமுறை பலவுமெடுத் திராவணற்கு வழங்கி னானால். (௫௫)

மாலியவான் சொற்கேளா தமர்வேட்டைந் திரதுர்க்க வாயில் காப்ப, வேலும்விறற் பிரகத்த னெதிர்குபத் திராவணியா மினிய திக்கிற், சாலுமகோ தரனெடுமா பாருசுவன் வடாதுசுக சாரணர் கள், கோலநகர் நடுவில்விரூ பாக்கனுற வடக்கரக்கர் கோனு நின் றான். (௫௬)

இலங்கைகடி புரிந்ததறிந் திராகவன்கீழ் வாயிலுளாற் கெதிர நீலன், வலங்கொளுந்தெற் கங்கதன்மேற் கஞ்சனைசேய் வடக்கி ளைய மன்னுந் தானுங், கலங்கலின்மத் தியகுன்மங் கதிர்மகனும் வீ டணனுங் கலப்பே மென்னாப், புலங்கொளச்சொற் றதிதுணைவிற் சுவேலகிரி யேறவுளம் பொருந்தி நின்றான். (௫௭)

கமலமலர் பலமலர்ந்து கருமுகில்பூ நின்றெழுமோர் காட்சி சால, வமலனிரா கவனிளையான் வீடணன்மற் றரியரச னனீகஞ் சூழ, விமலமுறு சுவேலகிரி முடியேறி யெழிலிலங்கை விழைந்து நோக்கிச், சமரமிழைத் திடலைநினைத் தம்மலையி னன்றிரவு தங்கி னானால். (௫௮)

பொன்னினொளி திசையளக்குந் திரிகூட சிகரத்திற் பொருந் தி நூறு, துன்னியயோ சனைநீள மகலமொரு முப்பானாய்த் துலங்கிப் பல்சீர், மன்னுவள நிரம்பிலங்கா புரியையுமங் கரக்கர்பிரான் வதி யும் பொற்பார், மின்னினொளி ரதனத்தாற் புரிமனையு மயோத்தி யர்கோன் விளங்கக் கண்டான். (௫௯)

மற்றைநா ளிலங்கையினி லிராவணனை யிரவிமகன் மன்ன நோக்கிச், செற்றமுறீஇ வாவியவன் சிகரமுறு முடிநிரைகள் சிதைத்து வீழ்த்தி, யெற்றன்முதற் போரியற்றி யெய்தாத தோல்வியவற் கெய்து வித்து, வெற்றியையே கொண்டெழுந்து விரைந்திரா கவனுழைச் சேர்ந்தா னாங்கர் மேவி னானல். (சo)

ஆவயினு ருற்பாத மிராமனனு சற்குரைத்தங் கதனை நோக்கித், தேவியைவிட் டடைதிசர ணன்றெனிலோ செருக்களத்திற் சென்று நின்ற, ஞவியைவிட் டிடுதியென வறைந்துவா லிராவணற் கென் றனுப்ப வன்னான், மேவியவா றுரைத்துவர வழுவத்தைச் சேனையோடும் விரைந்து சூழ்ந்தான். (சக)

தாரமுறு மிடர்க்கிரங்கித் தசரதன்சே யேவரியின் றுனை தானுந், தீரமுறு மிராவணனுற் செலுத்தரக்கர் படைத்திரளுஞ் செறிந்து தங்கள், வீரமெலா மெடுத்துரைத்துக் கடையூழி நாட்பெயரும் வீரை யென்னக், கூரமுற மிகத்தெழித்துப் போர்புரிய வெதிரூன்றிக் கூடிற் றன்றே. (சஉ)

வாலிசுத னுடனிரா வணிசம்பு மாலியொடு வாயு மைந்த னீலனெதிர் நிகும்பன்வீ டணனொடுமித் திரக்கினன்வா னிலவு மென்றாழ், பாலனொடு பிரகசன்மற் றுள்ளவா னரராக்கர் பலரி னோடு ஞாலமுள வெலாம்வெருவச் செய்தொந்த யுத்தமெவர் நவில வல்லார். (சந)

இரவுற்ற வவ்வயினே வானரரா லிராக்கதர்தா மெய்துந் துன்பும், பொரவுற்ற வங்கதனுற் றனக்குற்ற வபசயமும் பொருது நெஞ்சம், பரவுற்ற கதத்திரா வணிலக்கு வனையிரகு பதியைப் பற்றி யரவுற்ற பாசங்கொண் டசைத்திடுவ னின்னேயென் றகத்துட் கொண்டான். (சச)

இந்திரசித் தாகாயத் திடைமறைந்து மாயைபல வியற்றி மேன்மேல், விந்தைபெறப் பொழிசரத்தா லிராகவனை யவன்பின்வந்து விளங்கு கோவை, வெந்துயர்செய் தறக்கொடிய மாசுணவா சுகங்கொண்டு மெய்பி ணிப்ப, வெந்திரத்திற் சுழலுமதி யினராகி வானரர்தா மிரங்கி னைந்தார். (சரு)

இலக்குவனை யிராகவனை வீடணனுங் கவியரசு மெய்தி நோக்கிக், கலக்கமுற வீடணனவ் விருவர்முகக் குறிகண்டு கழிந்த தன்று வலித்தவுயி ரெனக்கதிர்சேய் முதலினரைத் தேற்றவிரா வணிதானண்ணா, துலத்தலுறக் கவிகளைச்செற் றிராவணன்பாற் சென்று செய முரைத்தான் மன்னோ. (சசு)

அகமகிழ்ந்து மகன்வலனுற் றதுகேட்டி ராவணனே வரக்க மாதர், தகவொளிசெய் புட்பகத்திற் சானகியை யேற்றியடு தலத்திற் சார்ந்து, மிகமலரு முகத்தினராய் வீரசய னத்திருக்கும் வேந்தன் மைந்தர், திகழ்வடிவந் தனைக்காட்டி நன்குநோக் குதியென்னச் செப்பி னரால். (சஎ)

தாசரதி யுடனிளையான் றனைக்கண்டு சானகிமுன் சாமுத் திரீக மாசதுரர் வைதவிய மில்லையெனக் கெனல்பொயென்று மனமயங்க வேசிறிரி சடைசீதா யமங்கலைப் புட்பகந்தா னேந்தா தென்னப், பேசவரக் கியர்மாதை யசோகவனத் திடையுய்த்துப் பேணி னரால். (சஅ)

இரகுபதி விழித்திளையான் றுயர்நோக்கி வருந்திப்பின் னிரவி தோன்றல், வரவரைவி லுபகார சேனையொடு கிட்கிந்தை மாப்பதிக்கண், விரவுகென விராகவன்பான் மேவியவீ டணற்கண்டு வெருவியுள்ளத், துரவிலராய் வானரர்க ளவணில்லா தகன்றெவரு மோட்டந் தாரால். (சகூ)

திருவினனை யிலக்குவனை யெய்திவீ டணன்வருந்தத் திவாகரன்சேய், பொருவதுய ரெனத்தேற்றக் ககபதியக் காலெய்த வுரகபாசம், வெருவியற விறைவன்மகிழ்ந் துபசரிக்கப் பறவைகட்கு வேந்தை யன்னோன், மருவலவ ரொழித்தேக வாசைதெறத் தெழித்தனர்மா மந்திவீரர். (ருo)

தோசமில்கீ சகங்க ளொலி கேட்டிரா வணனயிர்த்துத் தூமராக்க, மாசதுர சதுரங்க சேனையொடு மாற்றலர்பான் மன்னி வெற்றி யாசகலக் கொண்டடைதி யென்றனுப்ப வவன்விடைபெற் றகன்று மேலை, வாசல்வழி புகுந்தங்கு நிறைந்துள வானரர்சேனை வலியைக் கண்டான். (ருக)

குரக்கினமாங் கடற்புகுந்து கொதித்தெழுதூ மிராக்கப்பேர்க் கொடிய னை, வரக்கனெனும் வரையுழக்கப் பொருஞ்சேனை யழி ந்திடல்கண் டனிலன் செம்மல், பரக்கவெழு மவனனிகம் பவனனெ திர் திரணமெனப் படமா செய்தே, யிரக்கமிலன் றனையுமவ் வேம னூர்க் குய்த்துமகிழ் வெய்தி னால். (௫௨)

சேனையொடு தூம்ராக்கன் சிதைந்தமைகேட் டிராவணனற் செல்ல வுய்த்த, மானமுறு வச்சிரத மிட்டிரனுஞ் சேனையுந்தென் வாசல் வந்தே, யானதிற லங்கதனோ டமர்புரிய வவனந்த வரக்கர் தானைக், கானகத்திற் புகுந்தழித்தான் கடுந்தாவா னலமென்னக் கணத்தி னம்மா. (௫௩)

தன்னனிகந் தனைவாலி தனையனழித் திடவெகுண்டு தறுகட் சிய, மென்னவெதிர்த் தமர்புரிந்த வச்சிரத மிட்டிரனை மிகல்வெய் யோன்முன், கொன்னவிலும் வாட்டடக்கை கொண்டெழுந்து மிகக்சி னவிக் கொடியோ னைய, வன்னவனைத் தலைதுமித்தங் கதனுக்கி யங் கதன்று னமர்ந்தா னப்பால். (௫௪)

இலங்கையர சனுப்பவரு மகம்பனன்று னனிகமுட னெழுந்து போந்து, துலங்கியமேல் வாயிலமர் சுசனன்சேய் சேனையுடன் சூழ் ந்துபல்போர், கலங்கலிலா தனுற்றனுமவ் வரிக்கணங்கண்மிகக்கொதி த்துக் கரங்க ளாலும், விலங்கியெழு தருவாலு மமருடற்றி வீட்டி வெற்றி மேய வன்றே. (௫௫)

வெற்றியொழிந் தரக்கரெலாம் வெருவியிரி தரல்கண்டு விரை ந்து புக்குப், பற்றியகம் பனனெதிரும் வானரமாப் படையனைத்தும் பரிவுற் றேங்க, வெற்றிடக்கண் டஞ்சனைசே யிமைப்பொழுதி லன் னனை யெதிர்ந்து சாடிக், கொற்றமுறீஇ யகம்பனனைக் கம்பனனு யாக்கியுயிர் குடித்தா னம்மா. (௫௬)

பிரகத்த வபிதானத் தளகர்த்தன் பிறங்கெயில்சூழ் பேரி லங் கைத், தரகத்த தடந்தேர்முற் றுறுபடையின் முப்பகுதி சூழ்ந்து நிற்க, விரகிற்றேர் மதியநராந் தகனுதி யமாத்தியரும் விழைந்து போத, வுரகத்தின் மிகச்சினவு மனத்தொடமர்க் களனுடி யுற்றுன் மாதோ. (௫௭)

குணவாயி லிடைப்புகுந்த பிரகத்தன் றிறற்படையுங் குழுமி யாங்கட், டணவாது நிலைநின்ற தழலவன்சே யரிப்படையுஞ் சமர்மிக் காற்றக், கணமாய குரக்கினத்தைப் பிரகத்தன் சிதைத்திடலுங் கனன்று நீல, னிணமார வவன்றலையை மலையொன்றாற் றுகள்பலவா நிலத்திட் டானால். (ருஅ)

ஈரஞ்சு முடியன்வட வாயெய்திப் பிலவங்க விறைவ ரியாரும் போரஞ்ச வம்புய்த்துச் சத்தியினா லிலக்குவனைப் புடைத்துப் பின்னு, நேரஞ்சா திராமன்முன நின்றுபெரும் போரியற்ற நிமலனன்னான், வீரஞ்சாய்த் தபிடேக நிரையொழித்துப் பதிக்கேக விடுத்தான் மன்னோ. (ருகூ)

நம்பியிரா கவன்சரத்தின் வேகநினைந் திராவணனுண் ணடுங்கி யின்னே, தம்பியைக்கொண் டவற்செயிப்ப லெனநினைந்து துயில்கொள்ளுந் தடந்தோள் வீரக், கும்பகரு ணனையெழுப்ப வவன்விழித்துக் கடுங்கோபங் கொண்டு சீறி, வெம்பியக மவணீங்கி யிராவணன்மே விடநோக்கி விரைந்தான் மாதோ. (கூ0)

மலையொன்று கால்கொண்டு வழிக்கொண்டா லெனுங்காட்சி வாய்ப்பச் செல்லுங், கொலையொன்று முருவொன்று கண்டிரகு பதியார்நீ கூறு கென்னத், தலையொன்று பேரன்பன் வீடணன்கே ளையவின்ன தகைமை யானே, நிலையொன்று மிகுவலிய னுயர்கும்ப கருணனென நிகழ்த்தி னானால் (கூக)

ககனமிசை நிவந்தொளிருங் கனகவரை நேர்தனது கடிகொண் மாடம், புகவருந்தன் பின்னோனுக் கிதவசன மிராவணன்றான் புகன்று நீயே, பகைகொடிவண் வந்தமர்செ யிராகவனா லுறும்விபத்தைப் பாற்றி யின்னே, தகவுபெறப் புரிவையெனப் பரிவொடுரை பலபலவாச் சாற்றி னானால். (கூஉ)

அறநெறிச்செல் வீடணனும் யானுமுனஞ் சீதைசிறை யகற்று கென்ற, திறநெறிகேட் டிலையிந்தத் தீங்குற்றா யெனப்பின்னோன் செப்ப வெம்பி, மறநெறியான் மிக்சினவு மிராவணனார் மனமகிழ மாற்றான் றன்னை, யிறவுறுத்தி வருகின்றே னஞ்சலெனக் கும்பகன்ன னிசைத்தான் மன்னோ. (கூங)

வென்றிகொடு வருகின்றே னென்றகும்ப கன்னனைநின் வீர மாண்மை, தன்றிறலா யிராமன்பாற் செல்லாதா லென்னமகோ தரன்றான் சொற்றுப், பொன்றவிரா மனைவென்றி பூண்டனைபோல் விரகொன்று புணர்த்திக் காட்டி, நின்றெழில்கொள் சானகியை வய மாக்கென் றிராவணற்கு நிகழ்த்தி னானால். (௫௪)

தசமுகனாற் போர்க்கோலந் தாங்கியொளிர் கும்பகன்னன் சம ரிற் சென்றே, யிசைமுகமா யிராகவனை வென்றிடுவே னெனமுன் னோற் கிசைத்துச் சேனை, திசைமுகத்தின் வரைநிமிர்ந்து புடைசூ ழ வருங்காலத் திறல்வெய்யோனை, நசைமுகத்த வெம்போர்வா னரவீரர் கண்ணுற்று நடுங்குற் றாரால். (௫௫)

கொடுங்கூற்றை நிகர்கும்ப கருணனமர்க் களம்புகுந்து கோடி யெண்ணி, னெடுங்கூற்றார் கணைபொழிந்தங் கரிக்கணத்தை வருத் தவவை நேர்ந்து நிற்றற், கொடுங்கூற்ற மடைந்தோட வங்கதனங் கவர்வயிற்சென் றோடா வண்ணந், தடுங்கூற்றம் பலபகர்ந்து திரும்பி வர வனைவரையுந் தகைந்தான் மன்னோ. (௫௬)

அங்கதனை முதலினரை யாகவம்வெல் கும்பகன்ன னரிகள் வேந்தைப், பொங்கமர்நின் றகப்படுத்திக் கொண்டேக வவன்றெளி வு பூண்டன் னோற்குப், பங்கமுறச் செவிமூக்கைப் பறித்துவரக் கும்பகன்னன் பகைத்து வந்தே, புங்கமுறு மிராமனுடன் போராற் றி யுடலுறந்து போய்மாய்ந் தானால். (௫௭)

யோதனத்தியா னஞ்சாமைக் குடன்பிறந்தா யுகாந்தமருத் தொப்பாய் நீயுஞ், சாதலுறப் பெற்றனன்மற் றுங்களித மொழி யனைத்துந் தடுத்தேன் முன்ன, மேதமினல் லறமூர்த்தி வீடணனை யோட்டியதா லிந்தத் துன்பம், போதரவுற் றனனந்தோ கும்பகன் ன வெனமுன்னோன் புலம்பி னைந்தான். (௫௮)

டாவிமகோ தரனேமா பாருசுவ னுடன்வந்த பத்துச் சென்னி மேவுமவன் றருமைந்தர் நால்வரிலந் நராந்தகன்றான் வெகுண்டு நின் று, தாவியெதிர் வானரரை யிடருறுத்த வங்கதனத் தன்மை நோ க்கி, யாவியொழிந் தேகுதியென் றிகலாற்றி நடுவனூர்க் கவனை யுய் த்தான். (௫௯)

முட்டியினா லஞ்சனைசெய் முரட்டேவாந் தகனையுமோர் மூன்று சென்னித், துட்டனையன் னான்கரத்து வாளாலுங் கொன்றிட்டான் றொடர்ந்து நீலன், மட்டவிழு மலர்த்தருவால் மகோதரன்வல் லுயிர்மாய்த்தான் வலிட பன்முன், னொட்டியமா பாருசுவன் கதைகொண்டே யவனுடல மொழிவித் தானால். (௭0)

சம்புமலை யெடுத்தாற்குத் தானியமா லைப்பெயரான் றந்தை மைந்தன், வெம்புமிக லதிகாய னுடனிவையா னமராட வாயு மேவி யெம்பெரும வவனபேத் தியகவசன் பிரமசர மெய்து கொல்வா யும்பர்தொழ வெனவவ்வா றிலக்குவனன் னானுடலை யொழித்தான் மன்னோ. (௭௧)

செம்மலதி காயன்பின் செல்லுமிராக் கதவீரர் திரளி னோடு மம்மவுயிர் துறந்ததுகண் டிராகவன்பால் வெருவந்தே யரக்கர் கோமான், பொம்மலுறு மிலங்கைநகர் கடிபுரிந்தங் காற்றவொணாப் புத்ரசோக, மம்மர்மிக வுற்றொன்று மறியானாய்த் தன்னகமே வந்துற் றானால். (௭௨)

புரந்தரனைப் புறந்தரமுன் பொருதவென்றன் றாதைமகன் போக்கான் மிக்க, வரந்தையுளா னெனக்கண்டங் கவனையொரு வாறாற்றி யபிசா ரஞ்சார், வரந்தருமோ ரோமஞ்செய் திராமன்வரை யாவரையு மலரோ னம்பு, துரந்துபிணித் தறிவுமயங் கிடப்புரிந்தா னவன்வலனார் சொல்ல வல்லார். (௭௩)

மாருதிசாம் பவனுரைகேட் டிமயமலை யிடைப்புகுந்து மருந்து மேவு, மோரசலந் தனைக்கொணர வோடதிவா சனைமுன்வந் துறலு முற்ற, வீரமுடை வானரரோ டிராகவனு மிலக்குவனு மேய தூய வாரனாரை யறத்துறந்தங் கெழுந்தனர்முற் றுயிலுணர்ந்த வவர்போன் மாதோ. (௭௪)

செய்யவரி தாமிலங்கைத் திருநகரி லரிக்கணங்கள் சேர்ந்து தங்கள், கையிடையோ ரோருற்கை கொடுகொளுத்த வக்கணத்துக் கனன்று போந்த, வெய்யகும்ப நிகும்பனொடு விரவிவரு மரக்கர்படை வெம்மை நேர்ந்து, நையவுறு போரொருவா துனாற்றிவதைத் திட்டனர்வா னரர்தா மம்மா. (௭௫)

வாலிசுத னகம்பனனை வலிபபிர சங்கனொடு மறலி தேயக், கேல வனுப் பினன்றுவிதன் சோணிதாக் கணையுடல்விட் டிறக்கச் செய் தான், காலனிவ னெனும்யூபாக் கணைமபிந்த னுயிரொழித்தான் கன ன்று பொங்கு, மாலமெனக் கொதித்துவரு கும்பனைச்செற் றொழித் தனனா லிகள் வேந்தே. (எசு)

தோற்றமிகு கும்பகர்னன் றொன்றலிரு வரிற்பின்னே தோன் றி யான்ற, வாற்றலமர் நிகும்பனெம தண்டநிக ரோர்பரிக மங்கை யேந்தி, யேற்றுமலைந் திட நோக்கி யெய்துமிக விற்றொழிய வியற்றி வீரக், காற்றின்மக னவன்றலையைத் திருகியுயிர் போக்குவித்தான் கணத்தின் மன்னோ. (எஎ)

வெஞ்சினங்கொ ணிருதர்பிரான் விடுத்தகரன் விடலைமக ராக் கன் மேற்போ, மஞ்சினுடல் கிழித்தெழுந்த சயந்தனமும் படைக் கடனு மருங்கு சூழத், துஞ்சலணித் தெனக்காட்டு முற்பாதம் பல பலமுன் றொன்றக் கண்டு, மஞ்சல்சிறி திலனாகி யமர்வேட்டு விரைந் துகள மடைந்தான் மன்னோ. (எஅ)

மகராக்கன் கனன்றுபுகுந் திராகவனோ டெதிர்ந்தாரின் மற்றார் தன்னை, நிகராக்க வுளரென்னச் சமராற்றத் தாசரதி நேரு மன் னோன், பகராக்க மறவாக்கு கிற்கிபதன் றிருவுளத்துப் பற்றி வெய் ய, தகராக்க முறவுய்ப்பான் கணையேவி யவனுடலஞ் சதித்தான் மன்னோ. (எகூ)

இந்திரசித் தபிசார வோமஞ்செய் திராமன்வரை யாரு நோவ வந்தரத்து மறைந்துகணை மழைபொழிய விளங்கோவு மதனைக் கண்டு, நொந்திறக்கப் புரிவனயன் படைவிடுத்தே யிவனையென நோக்க நீக்கிச், சுந்தரத்தோ ளிராகவனன் னாறப்படுக்கு முபாயமு ளஞ் சூழ்ந்தான் மன்னோ. (அ0)

யோகரரி யாமேக நாதனிரா மன்முயற்சி யுணர்ந்திலை தின்னே யேகவினை செய்வலென மாயையினா லிவள்சீதை யென்றி யாரும் யூகமுற வாக்கியவோ ருருவங்கொண் டனுமான்முன் னுற்றன் னனு ஞ், சோகமுறத் தன்கரத்து வாள்கொண்டவ் வுடல்போழத் துணி த்திட் டானால். (அக)

அருஞ்சமரம் விடாதியற்று மடலரக்க ரனைவரையு மனிலன் செம்மல், பொருஞ்சமருக் குரியரலே மியாமென்ன விரிந்துபுறம் போகப் போக்கி, விரிஞ்சன்மகன் மகன்மகற்கு மகன்சீதை தனைத் தடிந்த விதமி ராமன், றெரிஞ்சுறப்புக் குரைப்பனெனத் தேர்ந்துவா னரர்சூழச் சென்றான் மன்னோ. (அஉ)

தாங்கரிய துயர்கொண்டு தாசரதி யடியடைந்து சலனன் றோன்ற, றேங்கமழுங் குழற்சீதை தனைவாளா லிராவணிதான் செற்றா னென்ன, வாங்கதுகேட் டோவியம்போ லசையாத முன்னவனு ளுளறிந்து தம்பி, பாங்குறுவான் றேற்றினான் றணத்திபட ரெனப்பல சொற் பகர்ந்து மாதோ. (அங)

மங்கையெழிற் சானகியை மாய்க்ககில்லி ராவணிசேய் மாய மென்றே, செங்கமலத் திருநயனத் திராகவற்கு வீடணன்றான் செப்பி யின்னே, கங்கம்விருந் துணக்களத்திற் காதகனு மிராவ ணியைக் காதிப் போதச், சிங்கநிக ரிளங்கோவைச் செலவிடுதி யெனப்பின்னுஞ் செப்பி னானால். (அச)

மானவன்வீ டணனுரையான் மனத்தெளிவு பூண்டிளைய வள்ள றன்னை, யானதிற லிராவணியை நிகும்பலைபுக் கழித்தியென வனுப்ப வன்னான், ஞானநிறை வீடணனு மனுமானு மற்றையரு நண்ணித் தன்னைச், சேனமொடு தொடர்நிழல்போ லகலாது சூழ்போதச் சென்றான் மன்னோ. (அரு)

இலக்குவனை முன்னோர்தா நிகும்பலைசூ ழிராக்கதரை யெதிர்ந்து சாடிக், கலக்கிடக்கண் டிராவணிசெய் கனற்றொழிலைக் கைவிட்டுக் கடிது போந்து, விலக்கியனு மானுடைம ராற்றவீ டணனிளங் கோவேதா மூது, கொலைக்குரிய னுமேக நாதனைவி டாதின்னே கோறி யென்றான். (அசு)

வடமூலத் தனைவதன்முன் மாய்த்திடுதல் வேண்டுமிரா வணியை யென்ன, மடமூல மறவொழித்த வீடணன்மா னவற்குரைப்ப மைந்த னச்சொற், றிடமூலச் செவியுணர்ந்து சிறுதாதை தனைச்சினந்து செப்ப வொண்ணு, விடமூல முறுமுறைகள் விளம்பிடக்கேட் டவனமையும் விதஞ்சொற் றானால். (அஎ)

ஆயிரமா நயனனைவென் றபிதானங் கொண்டவட லரிய
னானு, மாயிரநா மத்திறலு மமையுமொரு திருநாமற் கனுசன் றானு
மாயிரமா யிரவகையா லடைந்துளதம் வெற்றியெலா மங்ஙன் கூறி
யாயிரமா யிரம்பாண மவையவைகட் கெதிர்செலுத்தி யமர்செய்
தாரால். (அஅ)

இராவணனுக் குபிரனைய காதலனு மிளையானு மிளையா ராகிச்
சராசனத்தின் றொடையறிதற் கரிதாகக் கோடியின்மேற் சரங்கள்
சிந்தித், தராதலமே முதலெவையுங் கண்டுநடுக் குறப்பெரும்போர்
தந்து தம்மெய், விராவியசா லிகைபிளப்ப வொருவரொரு வர்க்கிய
ற்றி விறலுற் றாரால். (அகூ)

அரக்கரைச்சென் றடுமினென வீடணன்வா னரர்க்குரைத்தா
ன் சரப னுதி, குரக்கின்மிகு வலியுடையார் நால்வரிரா வணிவந்த
கொடித்தேர் போக்கித், துரக்கும்வய வாசியையுந் தொலைக்கவிளை
யான்றனைந்து தொடைக ளூர்வோன், சிரக்கிலக்கு வைத்துய்த்துத்
தடிந்திட்டா னவனுயிர்விண் சென்ற தாலோ. (கூ0)

பின்னுமொரு தேரேறி யிராவணிவீ டணன்மீது பிறங்கு
சத்தி, யென்னுமொரு படைவிடுப்ப விளங்கோவக் கதைப்பிளந்தெம்
மிராம னென்பான், மன்னிபசத் தியசந்த னறமூர்த்தி யெனிலிவனை
மாய்க்க விந்த, மின்னுமயிந் திரக்கணையென் றேவியவ னுயிர்வா
ங்கி விட்டான் மன்னோ. (கூக)

புரந்தனூர் பகையையறப் பொருதுதொலைத் தனனிளையான்
போரி லென்ன, வரந்தரும்வீ டணன்முதலோர் வந்துரைப்ப விரகு
பதி மகிழ்ந்து கேட்டுச், சுரந்தருள்பே ரன்பினு லிலக்குவனை யுறத்
தழுவிச் சுசேணற் கொண்டு, கரந்திடவன் றாற்செய்து மெய்வருத்
தந் தீர்ப்பித்தான் கணத்தின் மாதோ. (கூஉ)

பொருதிகல்கொ ளிராவணியும் போய்மாண்டா னென்றழுது
புலம்பி நொந்து, வருதுயர மித்தனைக்குங் காரணமாஞ் சனகியை
யான் மாய்ப்ப லென்னக், கருதியொளிர் வாளேந்தி விரையவிரா
வணனதனைக் கண்டோவ் வாதால், விருதுடையாய்க் கிதுவென்று
சுபாருசுவன் றடுக்கவவன் மீண்டு சென்றான். (கூ௩)

தேரணிக மோரயுத மிபமணிகம் பதினெண்ணாயிரமாந் தேசி
யிரேழா யிரமணிக மணிகமா யிரத்திரட்டி யென்னுங் காலா
ணேரேழுமா மூலபலந் தனையரையா மத்தழித்து நீக்கி நின்றான்
காரேழுமா திருநிறத்துக் காகுத்த னவன்செயலார் கழற வல்லார்.

இவ்வளவா மெனக்கணிக்க வியலாநம் மரக்கரெலா மெய்திப்
போரி, லவ்வளவி லொன்றொழியா தழிந்ததற்குக் காரணங்கண்
டாயி னுற்ற, தெவ்வளவை யறியாம லிராவணனார் செய்துற்ற தீ
தென் றேமுன், னுவ்வளவு தகிபோலே வுரற்றியரக் கியரழுதா
ரொருங்கு மாதோ. (கூரு)

மந்திரிம கோதரன்மா பாருசுவன் விரூபாக்கன் வரமற் றுள்ள,
தந்திரமும் புடைபோதத் தசக்கிரிவன் வடவாயில் தன்னைச் சார,
வந்தனனு லெதிர்தோன்று முற்பாதம் பலகண்டு மனச்சோர் வின்
றிச், சிந்திடவா னரக்குழுவிற் புகுந்துசர மழைபொழிந்து சிதைத்
தான் மன்னே. (கூசா)

கைம்மலைபின் மிசையிவர்ந்து களம்புகுந்து வானரவார் கலியைய
மோதி, மெய்ம்மலங்கக் கலக்குகின்ற விரூபாக்கன் றனையென்றாழ்
விடலை பற்றி, வம்மெனத்தங் கரங்கொண்டு மத்தகத்தி னறையவவ
ன் மாழ்கி வீழ்ந்தே, யிம்மையைநீத் தந்தகன்வாழ் சைமனிய மெ
னுநகருக் கேகி னானால். (கூஎ)

கோடரங்கட் கரசாகிக் குலவுகதி ரவன்புதல்வன் கூடித் தன்
னோ, டாடமரி லெதிர்ந்துபொரு மகோதரனுக் கெய்தியுள வாண்
மை நீக்கிப், பீடழியு மவன்கண்டங் கண்டமுறக் கைத்தலத்துப் பி
றங்கு வாளா, லேடவிழு மலர்க்கதலித் தருத்தடிதல் போற்றடிந்
தா னெளிதே யம்மா. (கூஅ)

அங்கதந்திண் புயநீங்கா தணிந்ததிக வெழில்வாய்ந்தங் கதனு
ளும, மங்கதனென் றுலகோது மிளவரசன் றானேம்பு மணிகந் தன்
னி, லங்கதனு வமருடற்று மாபாரு சுவனையட லங்கை கொண்டே
யங்கதனும் படிகுமைக்க வவனுடல்விட் டடைந்தனன்விண் ணகத்
து மாதோ. (கூகூ)

# ௮௮ ஸ்ரீவான்மீகி ராமாயண சருக்கார்த்த சங்கிரகம்.

கார்முகங்கைக் கொண்டதிற லிராகவனுங் காரரக்கர் காவலோனும், போர்முகத்தி லத்திரமும் பாணமுங்கொண் டெதிரெதிரே பொருங்கா லத்துக், கூர்முகத்த வாசுராத் திரமரக்கர் கோன்விடுப்பக் கோசலேச, னேர்முகங்கொ ளெழுநாவத் திரமுய்த்துக் கணத்திலதை யெரித்தான் மன்னோ. (௧௦௦)

இராவணனால் விடுசரங்க ளிராவணஞ்செய் திராமனினைப் பிகப்பப் பின்னர், விராவரக்கன் றேர்ப்பாகை யிளையானும் வீடணனும் வீட்டவெம்பி, யராகிகர்சத் தியையன்று னிலக்குவன்மேல் விடவதனா லயர முன்னோன், சராசனத்தின் கணைக்காற்று தஞ்சிமிக வோட்டந்தான் றசக்கிரீவன். (௧௦௧)

மீட்டுமொரு கணத்தனிலன் மகன்விரைந்து மருந்துமலை வேரினோடு, காட்டிறவங் கதினுள்ள வோடதியாற் றுயர்முற்றுங் கழிந்தோனாகி, மாட்டுறுதன் னுயிரனைய விலக்குவனைத் தாசரதி மலர்க்கணோக்கிப், பூட்டுறுமா பேரன்பாற் றிருவுளத்து நிறையமகிழ் பூண்டான் மன்னோ. (௧௦௨)

மற்றுமொரு தேரிவர்ந்து மலைபுமிரா வணனோடு வானோர்கோமான், கொற்றமுற வனுப்பிரத மிசையேறி யிராமனமர் குறித்துச்செய்ய, வற்றமுணர்ந் திலங்கையர்கோன் மாதலியை வையமுறு மசுவந் தம்மைச், செற்றிடவங் கவைநோக்கி யிரகுபதி திருவுளத்துச் சீற்றங் கொண்டான். (௧௦௩)

சலங்கொடிரா வணனுய்த்த சூலத்தைத் தாசரதி சகிமனாளன், வலங்கொளத்தன் பாலனுப்பு சத்தியினால் வகிர்ந்தரக்கன் மார்பினோடு, நிலம்பகவூர் தேர்யாத்த துரகதந்தி னிரையினையு நீண்டகைபிற், பொலங்கொளக்கொள் பொருவரிய கோதண்டமுமிழ்சரத் தாற் போழ்ந்தான் மன்னோ. (௧௦௪)

தலையொருப திருபதுகை யுடையன்விடு கணக்கிறந்த சரங்கண் முற்று, மலையவவை யொவ்வொன்றை யோரம்பா லிரகுபதி யறுத்துமாற்றி, மலையுமவன் றனைப்பழித்துக் கணைமாரி பொழியவவன் மயங்கி நின்ற, நிலையினைநன் குணர்தருசா ரதிதேரைப் புறத்தோட்டி நிறீஇபினானால். (௧௦௫)

போர்தமய றெளிந்திரா வணனிரதம் புறம்புற்ற புன்மை நோக்கிச், சேந்துவிழி மிகச்சினந்து தேர்வலவ சிறப்பிற்றே செய்கையென்னச், சாந்தமடை தருதியைய நின்னாணைப் படிபுரிவன் ருமாதென்றே, வேந்தன்மகிழ் கொளவெய்ய பறந்தலைக்கே சயந்தனத்தை விரைய வுய்த்தான். (கoசு)

குறுமுனிவ னுங்கடைந்து கூறியவா தித்தவிரு தயத்தைக் கொண்டு, நெறியிகவா விரூபதி துதித்திடவா யிரங்கிரண னோர்வந் துற்றுத், தறுகணுறப் புரிபோரி லெதிர்தேவ கண்டகனுந் தசக்கிரீவச், செறுநனைவென் றடைகவய நன்றென்ன வருள்புரிந்து சென்றான் மன்னோ. (கoஎ)

தாசரதி திருத்தேருந் தசக்கிரிவ னிரதமுநேர் தந்து நிற்க வாசுகமா மழைபொழிந்தங் கருஞ்சமர மிருவருஞ்செய் யக்கா லத்து, மாசுநிறை தருமதிய மாற்றானுக் கணித்துனது மரணம் வென்றி, தேசுதிகழ் தனக்கேயா மெனுநிமித்தங் கண்டுமகிழ் சேர்ந்தான் ராமன். (கoஅ)

மேகவா கனனிரதக் கொடியிலிரா வணன்விட்ட விசிகம் வீணே, போகவிரா கவன்சரத்தா லிலங்கையர்கோன் றேர்வீணைத் துசமும் போக, வாகவமே முனையுமிரு வருமொருவ ரொருவர்க்கென் றமைந்து நின்ற, பாகனையும் புடைத்தார்த்த பாய்மாவையும்புடைத்தார் பகழிக் கூற்றால். (கoகூ)

இராமனிரா வணனிவர்தாம் புரிபோருக் கிணையதுவென் றிசைப்பச் செய்கா, லிராவணனு மிராவணனை யிராமனென வாக்குவிப்ப னென்ன வெண்ணி, யராநிகர்வெங் கணையானே யறுத்திடவுங் கிளைத்திடுமன் னுன்கம் பத்தைப், பராவருசீர்த் தாசரதி பப்பத்தோ டோர்முறையும் படுத்தான் மன்னோ. (ககo)

அகத்தியன்றந் திடுசரத்தி லிராமனயன் கணைமனுவை யதிட்டித் தேவச், செகத்தையுறு துயர்க்காக்கு மிராவணன்மார் பிடந்தன்னுற் செருத்தவ் வம்பு, புகத்தனேரே ராகவனு ராவமதிற் புலவர் கணம் பூம கிழ்ந்து, மிகச்சொரியக் கவிக்கிறையா தியர்பலருங் கண்டுமுத மேன்மே லுற்றார். (கககே)

நண்ணியமுன் னவனிறக்க வீடணன்றன் றனைமிக்கு நலியுந் துன்பா, லுண்ணினைந்து கலுழவிரா கவனமரி லொழிவீரர்க் குள்ள மாழ்க, லெண்ணிலற மன்றெனத் தேற்றியவற் குரியகட னியை யவின்னே, திண்ணமுறு நான்முறையே வழுவாது புரிதியெனச் செப்பி னானல். (௧௧௨)

பொன்னவிரு மணிமாடத் திலங்கையிருந் தெவ்வுலகும் போற் றக்கோல்கொண், மன்னவனு மிராவணன்றன் மாய்ந்தமையாய்ந் தவற்குரிய மனையார் யாரு, முன்னருறு வடவாயின் வந்துகளத் துயிர்விடுத்த முதல்வற் காணூஉப், பன்னியவன் செயலனைத்தும் பரிந்துகலுழ்ந் தனர்துயரம் பகரற் பாற்றே. (௧௧௩)

மயன்மகண்மந் தோதரியவ் விராவணன்றன் முதன்மனைவி மகிழ்நன் மாய்விற், கயர்வுறுமா வுளத்தினளாய்ப் பலபன்னி மிக நைந்தங் கழுது சோரச், செயவுரிய முன்னவனுத் தரகிரியை புரிதி யெனச் சீதை கொண்க, னியைவுபெற வீடணற்குப் பினுமுரைப்ப வவனுமவ்வா றியற்றி னானல். (௧௧௪)

நினைந்தவண மியற்றவல விரகுபதி நியமனத்தை நேர்ந்து தம்பி, புனைந்திடவொண் முடியந்த வீடணனுக் குவனதனைப் பொற் பத் தாங்கி, மனந்தனின்மா மகிழிலங்கை நகருறச்செய் திராமனி டம் வரக்கால் சேயைத், துனைந்தெனது வென்றியுரை சானகிக் கென் றிராகவன்றன் சொற்றுய்த் தானல். (சய௫)

ஒப்பிலிரா கவன்கணையா லுயிர்துறந்தா னிராவணனென் றுல வை மைந்தன், செப்பிடக்கேட் டதிமகிழ்கொள் சீதையவன் றனைப் புகழ்ந்து தீய விந்தத், தப்பமரு மரக்கியரைத் தொலைப்பனெனு ம வனெழுச்சி தகைந்து தோன்று, லிப்பொழுதென் னாயகற்காண் விருப்பனென வவனவன்சார் பெய்தி னானே. (௧௧௬)

வந்துரைத்த வஞ்சனைசேய் வாய்மொழிகேட் டிரகுபதி மங் கை தன்னை, முந்துறக்கொண் டணேதியென வீடணனை யனுப்பவ வன் முன்போய் நின்று, கந்தநறு மஞ்சனமும் புரிவித்துப் பணிபு னைந்து கணவன் றன்பாற், செந்திருவைக் கொடுபுகுத வவளவனைக் கண்டுமகிழ் சிறந்தா னன்கே. (௧௧௭)

அறமுலகி னிறுத்தவரு மயோத்தியர்மன் றன்மனையா ளயலா னில்லி, லுறவதிந்த வபவாத மழல்புகுவித் தொழிவிக்க வுள்ளத் துள்ளிக், கறைதபுதன் றிருமனத்துக் கடுங்கோப மூள்வித்துக் கன ன்று சால, நிறைபொறையார் சானகியின் முகநோக்கிக் கொடுஞ் சொல்பல நிகழ்த்தி னானே. (ககஅ)

உயிரனைய நாயகன்றா னுருத்துரைத்த வுரையனைத்து மொரு ங்கு கேட்டுச், செயிரொழிய வவ்வகைக்கு மறுமொழிசொற் றவ னுளத்திற் றேற்ற மேவக், கயிரவநேர் செவ்வாய வெழிற்சீதை யிலக்குவனாற் கனலை மூட்டி, யயலொளிரும் வெந்தழலிற் புகுதந் தா ளவள்சீல மமரர் தேர்வார். (ககக)

பரம்பொருளி னுந்தியிடைப் பண்டுமுளைத் துலகனைத்தும் ப டைக்கும் புத்தே, ணிரம்பவரு மமரர்கணம் புடைபோதத் தாச ரதி நேர்வந் துற்று, வரம்பிலவன் குணமனைத்து மறைநாவான் விரி த்தோத வந்த வேனைத், தரம்பயிலும் விபுதரெலாந் தாமுணர்ந்த வணங்குதிகள் சாற்றி னரால். (க௨0)

கற்பெனுமா வழலுருவச் சானகிதன் னிடைப்புகுதக் கனலோ னுற்று, தற்புடனன் னுட்சுமந்தே காகுத்தன் முன்வைத்தெம் மைய நின்ற, னிற்குரிய சீலமென்ற னெழுநாவா லிசைப்பரிதென் றியம்பக் கேட்டுத், தற்பொருவி லான்மனையைத் தழுவிமிகு மாநந் தந் தழைத்தான் மன்னோ. (க௨க)

ஐம்முகத்தோன் றசமுகனை யழித்தனையே யிராகவவென் று மோ தித்து, மெய்ம்முகத்த தசரதனை யன்னாற்குக் காட்டவவன் மேவுந் தம்பி, வைம்முகத்த வேல்விழியா ளுடன்றாதை தனைவண ங்க மகிழ்ந்து மன்னன், பெய்ம்முகிலிற் றிகழ்மைந்தன் கேட்டவர மளித்துவனை பெயர்ந்துற் றானே. (க௨௨)

மண்டமரி லுயிர்நீத்த வானவரின் கணமனைத்து மருவு சீரா கண்டலன்செய் கருணையினாற் றுயினீத்தார் போலெழுந்து களிப் புற் றோங்க, விண்டலர்ந்த தாமரைக்கண் ணிராகவனைத் தொழுவங் கண் விழைந்து மேவு, மண்டரெலாந் தத்தமது பதிநாடி மிகுமகிழ் வோ டடைந்தார் மன்னோ. (க௨௩)

இன்னுயிருக் குயிரனைய விராகவன்மங் களமான மினிதி னாடிப் பொன்னகரிற் பொலியிலங்கை யுறைதியென வீடணன்றான் புகல வொவ்வா, தின்னபொழு தேயொளிகொள் புட்பகத்தைக் கொண்ட டைதி யிவணென்றோத, வன்னவுரை சிரந்தாங்கி யவ்வாறே புரிந்த னனா லரக்கர் கோமான் (கஉச)

திருந்துசெயல் வீடணனா லிராகவன்வா னரவீரர் சிந்தை யன்பு, பொருந்தவளித் திடப்புரிந்தங் கவர்களொடுந் தன்பாங்கர்ப் பொற்ப நீங்கா, திருந்தவிலக் குவன்சீதை வீடணனே முதலாய யாவ ரோடும், வருங்ககன மிசைநடவும் புட்பகத்துற் றயோத்தி செல வழிக்கொண் டானால். (கஉரு)

வானிடைச்செல் கரும்பரிதி யென்னவரு மிராகவனவ் வருந்தி னுற்ற, மானமுறு பலதலமு மனைக்கோதிக் கிட்கிந்தை மாத ராரிற் பானல்விழி யுருமைமுதற் பலரையுஞ்சா னகிதுணையாப் பாங்க ரேற்றி, மோனமுறு தவப்பரத்து வாசமுனி யாச்சிரம முன்னுற் றானால். (கஉசு)

ஐந்தவித்த பரத்துவன்றன் றவப்பள்ளி யிரகுபதி யடைய நோக்கிச், சிந்தையுவந் தயோத்திநகர்த் திறமனைத்து மவனறியச் செப்பிப் பின்னு, மந்திறன தாபதந்தொட் டயோத்திவரை யுறை தருக்க ளகால மேனும், விந்தைபெறத் தளிர்த்துக்காய்த் தினிய பலந் தரவரமும் விருப்பி னீந்தான். (கஉஎ)

கரைகடவாக் கடலனைய காகுத்த னனுமன்முக கமல நோக்கி யுரைகடவா தெழுபுயத்தாய் வந்தனமியா மிங்கென்னு மாற்ற நாமோ, துரைகடவாப் பரதன்பா லுரைத்துவா வெனவவன்போ யுரைப்ப நீதி, நிரைகடவா திருந்துமுன்னோற் றொழும்பரதன் கேட்டுமகிழ் நிரம்பப் பூத்தான். (கஉஅ)

அஞ்சனைசேய் தாசரதி சித்திரகூ டப்பொருப்பை யகன்ற தாதி, விஞ்சுதவப் பரத்துவமா முனியுறையு டிருமிவந்து மேவு காறு, மெஞ்சலிலா தியற்றுசெய வியம்பியவ னாளையிவ ணெய்து மென்ன, வுஞ்சனன்யா னெனப்பரத னதுகேட்டுப் பேருவகை யுததி யுற்றான், (கஉகூ)

ஆன்றோரி லுயர்பரத னபோத்தியுடன் போய்முன்னோ னடி சேவிக்க, வின்றோரி னுவந்திரகு பதிநந்திப் பதியவரோ டெய்திக் காந்தி, வான்றோயும் புட்பகத்தை மந்திரியாற் செலவிடுத்து வசிட்ட ஞதி, சான்றோரை நெறிமுறையே தகவணங்கி யிருந்தனன்மெய்த் தருமமூர்த்தி. (௧௩௦)

பரதனுவன் றிடவிரகு பதிமுடிகொண் டிளவரசப் பரத ஞக விரவலூறு வீடணனுக் கரங்கநா தனையுதவி மேவு மற்றை, யிரவி மகன் முதலினர்க்கு மீவனவீந் தனுப்பியுல கினிதே யாண்டான் வரமுறுமிக் காதையன்பாற் கேட்பவர்நற் பலனனைத்து மன்னிவாழ் வார். (௧௩௧)

## இந்நூல் செய்தவிதம்.

உபர்சரண கதிசார மென்னுமிரா மாயணத்தை யுபதேசித்து, மபலறுத்துத் தத்வஹித புருஷார்த்தங் களைத்தெளிய வைத்துவாவி வயல்வளஞ்சேர் திருவரியக் குடித்திருவேங் கடமுடையான் மலர்ப்பாதத்தில், நயமுறவென் ஆத்மரக்ஷா பரசமர்ப்ப ணஞ்செய்த நன்மை மிக்கோன். (௧௩௨)

மகப்புகைசேர் புலிக்குன்றத் துதித்தவங்கி புரகுலமா மணியாயோங்கும், புகழ்த்திரும லாசார்ய னென்னுமகா தேசிகன்றன் புவனம் வாழ, அகத்திலுன்னிப் பணித்தபடி சருக்கார்த்த சங்கிரக மாமிந்நூலைச், செகத்திலுயர் திருவரியை அரங்கநா தக்கவிஞன் செய்தான் வாழி. (௧௩௩)

## உயுத்தகாண்டம் முற்றிற்று.

ஆகக்காண்டம் எ-க்குச் செய்யுள் ௫௭௪.

---

இது சௌமிய ஞு ஆடிமீ 24உ ஆதிவாரம் திருக்குற்றாலத்தில் பாடப்பெற்று முடிவுற்றது.

ஸ்ரீ ராமபிரான் திருவடிகளே சரணம்.

உ

ஸ்ரீ ராமஜயம்.

# திருவரியைப்பதிகம்.

---

## காப்பு.

திருவரியை வாழுந் திருமாலை வாழ்த்தி
ஒருபதிகம் யானே உரைப்பன்—குருபரனு
நம்மாழ்வார் பாத நளினந் தலைக்கொண்டால்
அம்மா வெதுதா னரிது.

கந்தநற் றுளவக் கண்ணிசேர் மார்பிற் கமலையை நீங்கலா திருத்து, மெந்தைபொற் றிருவேங் கடமென வுவந்தே யெழுந்தருள் தருமிடம் வினவின், முந்தியதேவர் குழுக்கொடு நாளு முறைமையால் வணங்குபு நிற்க, வந்தணர் மறையாற் செந்தழலோம்பு மரியைமா நகரென லாமே. (க)

யாவரே யிறைவ ரெனமயங் குலகிற் கியானைமுன் வந்தறிவித்த, தேவர்க டேவன் றிருமலை மாயன் றிகழிட மெதுவென வினவிற், சேவக நாமத் தன்பமர் வணிகன் செய்தவக் கருளமால் போந்த, வாவன புரியும் வேதியர்வாழு மரியைமா நகரென லாமே.

பொன்னிபொன் கொழித்தே திருவடிவருடப் பொறியர வணைத்துயில் பெருமான், சென்னிவிண் டடவும் வேங்கடத் திறைவன் சேரிடங் காணிய வினவின், மன்னிய தாசர் விரும்பிப வளித்து வரம்பில்பே ரின்பவாழ் வுறுதற், கன்னிய பல்லா முத்தரே யாக்கு மரியைமா நகரென லாமே (௩)

தாண்டரும் பிறவிச் சலதியை நீந்தித் தணப்பில்பே ரின்பமுற் றவரு, மீண்டும்வந் திறைஞ்ச விழைவடமலையில் மேயவனுறைவிடம் வினவிற், பாண்டிய தேத்திற் பாடல்பெற் றுளவாம் பதிபதி னெட்டினு ளொன்றென், றீண்டிவந் தடிக ளிடைவிடா தேத்து மரியைமா நகரென லாமே (௪)

வண்ணவொண்கமலச் சதுமுகக் குமரன் கன்னிமா மதிதோ
றும் விழவை, விண்ணவர்கணத்தோ டுவந்துவந் தியற்றும் வேங்க
டத் திறையிடம் வினவி, னண்ணினுர் வியாதி யாதியும் போக்கி
நலத்தவி டளிக்குங்கோ னேரி, யண்ணியதாகித் தனிவட பாலே
யரியைமா நகரென லாமே. (ரு)

பத்திசேர் தொண்டை மான்மய மெய்தப் பணித்தருள் வளை
வளை பின்னர், நத்திய பூதூர் முனிதர நயந்தான் வேங்கட நாத
னில் வினவின், முத்தொழின் முறையே மூவரு மியற்ற முதமொடு
கடைக்கணித் தருளு, மத்தமுன் னுளா ளெனுமலர் மகள்வா ழரி
யைமா நகரென லாமே. (சா)

உந்தியகந்த முற்குண குணியா யூழியில் வடமலை துயிலுஞ்
செந்திரு மணாளன் வடமலையப்பன் றிகழிடந் தெரிதர வினவிற்
புந்தியில்வேறு புருடரை நினையாப் பூவையர் குழல்புலத் தகிலே
யந்தரத் திழியு முகிற்றுளி கமழு மரியைமா நகரென லாமே. (எ)

ஐம்புலனவித்த யோகியர்தாமு மறிவதற் கரியவெம் பெரு
மான், பைம்புய லருவி யொலியமு ழவெப் பருப்பதன் விருப்பிடம்
வினவில், வெம்புவெங் கதிரின் விடாய்தணித் திடுவான் மேவினுர்
வெயிலையே விரும்ப, வம்பரத் தெழுந்து குளிர்தரும் பொழில்சூ
ழரியைமா நகரென லாமே. (அ)

சிலையினு லிலங்கை யரக்கர்கோன் முடிகள் செற்றவன் றேவர்
தந் தேவ, னுலைவிலா வடவேங் கடத்துறை திருமா லுவந்தருள்
தருமிடம் வினவில், மலையினேபிறந்து குடைகுனர் பாவ மலமலை
மதுநதி தெற்குற், றலைபினு னிறைந்த கீழ்கடல் பெருக்கு மரியை
மா நகரென லாமே. (கூ)

திணியிருளோட்டு மணிநிகழரவிற் றிரைப்பயோ ததித்துயி
லிர்ந்து, பணிதருமன்பர்க் கருளவேங் கடமுன் பற்றினன் பற்றிடம்
வினவில், வணிகர்தங் குலத்தார் மாலினுக் கடிமை வழிவழி மேய
வர் வாழு, மணிகெழுமாடந் திருவொடு பொலியு மரியைமா நகரென
லாமே. (கய)